# முத்து காமிக்ஸ் வாரமலர்

இளம் செல்வங்களின் இதயம் கவரும் இனிய இதழ்!

விலை 60 காசு

14-11-1982

பதிப்பாசிரியர்: முல்லை தங்கராசன்


## ஒற்றைக்கண் மர்மம் - 1




அது ஒரு சாதாரண விண்கல்தான் என்றும் அது பூமியின் காற்று மண்டலத்துக்குள் பிரவேசித்த போது தீப்பற்றி எரிந்து போய்விட்டதாகவும் விஞ்ஞானிகள் தெரிவிக்கிறார்கள்.
வேறு கிரகத்திலிருந்து பறக்கும்தட்டு வந்திருப்பதாக என்னமாய் புரளியைக் கிளப்பிவிட்டன இந்தப்பத்திரிக்கைகள்!
அதே வினாடியில்... கிராமத்துக்கு வெளியே கவிழ்ந்து நின்ற கும்மிருட்டைக் கிழித்துக் கொண்டு ஓர் ஒளிக் கோளம் பூமியை நோக்கி வந்து கொண்டிருந்தது.
பாழடைந்துகிடந்த கலங்கரை விளக்க கட்டிடத்தை குறிவைத்துவந்த ஒளிக் கோளம் ஒருகணம் தயங்கி தாமதித்தது.
பின்னர்... மெள்ள மெள்ள நெருங்கி கலங்கரை விளக்க கட்டிடத்தின் சுவரைத்தொட்டு அதனோடு இரண்டறக் கலந்து மறைந்துவிட்டது.
மீண்டும் அங்கே காரிருள் சூழ்ந்து கொண்டது.
அது என்னவாக இருக்கும்...?
அதைத்தெரிந்து கொள்ள ஒரேவழி தான் இருக்கிறது
உணவு விடுதியிலிருந்து வீடு நோக்கி போய்க்கொண்டிருந்த இருநபர்களும் சைக்கிளை விட்டு இறங்கினர்.
சார்லி ...அங்கேபோக வேண்டாம்.. எல்லோரும் என்னபேசிக்கொள்கிறார்கள் தெரியுமல்லவா...
கலங்கரை விளக்கத்தினுள் பேய் பிசாசு நடமாடுகிறது என்றுதானே—எனக்கு அதில் நம்பிக்கையில்லை.
காற்றடிக்கும் பம்பை கையில்பற்றிக்கொண்டு கட்டிடத்தின் கதவை நோக்கி நடந்தான் சார்லி...
உள்ளே பேயும் இல்லை...பிசாசும் இல்லைஎன்ற உண்மையை இன்று நிரூபிப்பேன்.
தொட்டதும் 'கிரீச்' என்று பயங்கர சப்தத்தோடு திறந்து கொண்டது கதவு.
ஆ ஆ...
சார்லி...வா... ஓடிப்போய் விடலாம்!
ஆனால் நொடியில் அது நிகழ்ந்துவிட்டது...
ஹா...ஹா...!
தொடரும்

# கிளியின் அறிவுரை




வியாபாரி ராமசாமி பேராசை உடையவர். அவர் சந்தைக்குப் போன போது ஒரு அழகான பச்சைக்கிளியை வாங்கி வந்தார். கூண்டு ஒன்று செய்து கிளியை அதில் அடைத்து வைத்தார்.

சுதந்திரமாக வானத்தில் பறந்து போக கிளி ஆசைப்பட்டது. அதற்கு ஒரு தந்திரம் கண்டு பிடித்தது வியாபாரி ராமசாமியிடம் கிளி சொன்னது, ''ஏ, வியாபாரியே! என்னைக் கூண்டில் அடைத்து வைத்து உனக்குப் என்ன லாபம்? என்னைத் திறந்து விடுதலை செய்தால் நான் உனக்குப் பொன்னான மூன்று உண்மைகளைச் சொல்லுவேன். அந்த உண்மைகளால் நீ உன் வாழ்வில் நன்மைகளை அடைவாய்!''

ராமசாமிக்கு உற்சாகம் ஏற்பட்டது. கிளி என்ன சொல்லப் போகிறது என்று ஆவலோடு எதிர் பார்த்தார்.

கிளி தொடர்ந்து சொன்னது: ''என்னைத் திறந்து உன் கை மீது வைத்தாயானல் முதல் உண்மையைச் சொல்லுவேன். உன் வீட்டுக் கூரை மீது உட்கார அனுமதித்தால் இரண்டாவது உண்மையைச் சொல்லுவேன், தோட்டத்தின் மரக்கிளையில் உட்கார அனுமதித்தால் மூன்றாவது உண்மையைச் சொல்லுவேன்''

கூண்டின் கதவை ராமசாமி திறந்து விட்டார். ''பொன்னான அந்த உண்மைகளைச் சொல்'' என்றார்.

அவர் கைமீது உட்கார்ந்து கிளி சொன்னது: ''உன் உயிருக்கு நிகரானதே ஆனாலும் எதையாவது இழந்து போனால் அதற்காக நீ வருத்தப்படக் கூடாது''

''ஆகா! அற்புதமான தத்துவம்'' என்று பாராட்டிய ராமசாமி கிளியை பறக்க விட்டார்

கூரையின் மீது பறந்து சென்று அமர்ந்து கொண்டதும் கிளி சொல்லியது ''உன் கண்களால் காணாத எதையும் நீ நம்பக் கூடாது!''

''ஆகா அற்புதமான அறிவுரை!'' என்றார் ராமசாமி.

தோட்டத்திற்குப் பறந்து சென்று ஓங்கி வளர்ந்த மரம் ஒன்றின் உயரமான கிளையின் மீது கிளி அமர்ந்து கொண்டது. கீழே நின்று கொண்டிருந்த ராமசாமியைப் பார்த்து கிளி சொல்லிற்று: ''ஓ வியாபாரியே! என் வயிற்றுக்குள் விலை மதிக்க முடியாத அற்புதமான இரண்டு வைரங்களை வைத்துக்கொண்டிருக்கிறேன், கத்தியால் என் வயிற்றை வெட்டினால் அந்த இரண்டு வைரங்களை நீ எடுக்கலாம்.


இதைக் கேட்டதும் ராமசாமி அசந்து போனார். கிளியோ உயரத்தில் இருக்கிறது பிடிக்க முடியாது. பிடிக்கப்போனால் பறந்து விடும். என்ன செய்வது? ராமசாமிக்கு மிகவும் வருத்தம் ஏற்பட்டது. ''கிளியே! உன்னுடைய மூன்றாவது உண்மையைச் சொல்'' என்று கேட்டார்.

கிளி ஏளனமாகச் சிரித்தது.

''நீ ஒரு முட்டாள்! என்னுடைய இரண்டு பொன்மொழிகளைப் புரிந்து கொள்ள முடியாத உனக்கு இன்னொரு பொன்மொழியினால் என்ன பயன் ஏற்படப் போகிறது. உயிருக்கு நிகரான பொருளை இழந்தாலும் வருத்தப்படக் கூடாது என்று சொன்னேன். நீயோ என் வயிற்றுக்குள் இருக்கும் வைரங்களை அடைய முடியவில்லை என்று அழுகிறாய். கண்ணால் பார்க்காத எதையும் நம்பாதே என்று சொன்னேன். நீயோ என் வயிற்றில் வைரம் இருப்பதாக நான் சொன்னதை நம்பி அது கிடைக்காமல் போனதே என்று ஏங்குகிறாய். என் வயிற்றில் வைரங்கள் இருந்தால் என்னால் உயிரோடு இருக்க முடியுமா?''

வாய்விட்டு சிரித்துவிட்டு கிளி வானத்தில் சுதந்திரமாகப் பறந்தது. ●

---




முத்துகாமிக்ஸ் வாரமலர்

மலர்: 1
இதழ்: 1
14-11-1982


*இனிய இளம் செல்வங்களே!*

இதயம் கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள் உங்களுக்கு உரியதாகுக!

நீங்கள் அனைவரும் தீபாவளித் திருநாளின் கோலாகலமான கொண்டாட்டத்தில் மிதக்கும் வேளையில்—மேலும் உங்களின் மனங்களை எல்லையற்ற மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தும்' முத்துகாமிக்ஸ் வாரமலர்' இப்போது உங்களது கரங்களில் தவழ்கின்றது.


உங்களுக்குப் பிடித்தமான எல்லா அம்சங்களும் நிறைவாக அமைந்துள்ளன என்ற மன நிறைவுடன், முதல் இதழை வெளிக்கொணர்ந்திருப்பது மிகுந்த உற்சாக மூட்டுகிறது.

ஆயினும் உங்களதுகருத்துக்களை எழுதுங்கள். மேலும், மேலும் புதிய, புதிய பகுதிகளை இணைக்க உங்கள் கடிதங்கள் தூண்டுதலாக இருக்கும்.

கடைசிப் பக்கத்தில் இடம் பிடித்துக்கொண்ட அதிமேதை அப்பு கெட்டிக்காரன் மட்டுமல்ல! சிறந்த சிந்தனையாளனும்கூட என்று சொல்கிறான். தனது மேதா விலாசத்தை உங்களிடம் கொட்டத் துடிக்கிறான். சிறந்த பெயர் தட்டிக்கொண்டுபோக வேண்டுமென்று ஒற்றைக் காலில் நின்று தொல்லையளிக்கிறான்.

எனவே, 'அப்புவின் பதில்கள்' என்னும்பகுதிதொடங்க, கேள்விகளை 'அதிமேதை அப்பு', முத்துகாமிக்ஸ் வாரமலர், சிவகாசி-626123 என்னும் முகவரிக்கு அனுப்புங்கள். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

அன்புடன்
முல்லை தங்கராசன்




நாசகாரக் கும்பல்
இன்ஸ்பெக்டர் கருடாவின் இயற்பெயர் ஆனந்த்! ஆனால் சமூக விரோதிகளைக் கருடனைப்போல் பாய்ந்து குறி தவறாது பிடித்துவிடுவார் என்பதால் 'கருடா' என்ற பெயரே அவருக்கு நிலைத்துவிட்டது. இன்ஸ்பெக்டர் கருடாவின் அரிய சாகஸங்களை தொடர்ந்து காண்போம்...
அப்பப்பா! என்ன வெப்பம்! ஒரு ஐஸ் க்ரீம் சாப்பிட்டால் தொண்டைக்கு இதமாக இருக்கும்!
ICE CREAM
ஸ்ஸ்ஸ்... தம்பி இங்கே வா!
அதோ அந்தத் தள்ளுவண்டிக்காரனிடம் எனக்கு ஒரு ஐஸ் க்ரீம் வாங்கிவருகிறாயா?
ஓ... தாராளமாய் வாங்கித் தருகிறேன், ஸார்!
சாக்லெட் ஸ்பெஷல் கோன் வாங்கு!
ICE CREAM
இந்த மாதிரி கடுமையான கோடையை இதுவரை அனுபவித்ததே இல்லை!
டேய்! டேய்!
ஐஸ் க்ரீமை வாங்கிக்கொண்டு ஓடுகிறானே!
மரியாதையாகத் திரும்பிவந்துவிடு ... ஆமா!
??
என்ன விஷயம் கான்ஸ்டபிள்?
ஒன்றுமில்லை! ஒன்றுமில்லை!


மாயமாய் மறைந்துவிட்டானே. ஆனால் என்னை ஏமாற்றி விட்டதாக நினைத்தானானால் அது மிகப்பெரிய தவறு என்பதை விரைவிலேயே உணருவான்.
யெஸ்! இதே வழியாகத்தான் போயிருக்கிறான்!
இந்தப் பழைய கட்டிடத்திற்குள்தான் எங்காவது ஒளிந்திருப்பான்.
க்ரீக்!
ஓ, ஸாரி! உள்ளே யாருமில்லை என்று நினைத்தேன்.
கையில் ஐஸ் க்ரீமோடு ஓடிவந்த ஒரு பையனைத் தேடிக்கொண்டிருக்கிறேன் நான்.
ஐஸ் க்ரீம்? ஐஸ் க்ரீமா?
ஐஸ் க்ரீம் என்று சொன்னாய்?
ஆமாம்!
என்ன ஐஸ் க்ரீம்?.
சாக்லெட்... பரவாயில்லை. அதொன்றும் பெரிய விஷயமில்லை. நான் வருகிறேன்.
இவனுக்கு விஷயம் தெரிந்துவிட்டதென்று நினைக்கிறேன்.
கான்ஸ்டபிள், ஒரு நிமிஷம். உன்னை வெளியே செல்ல அனுமதிக்கமுடியாது!
உனக்கு விஷயம் அதிகம் தெரிந்திருக்கிறது!
அதிகமாகத்தானே? ஆம், நான் பொது அறிவில் கெட்டிக்காரன் என்று பெயரெடுத்தவன்...
...அதுசரி உங்கள் முகத்தில் ஏன் இத்தனை கலவரம்?
உளறாதே! உனக்கு எப்படி எங்கள் ஐஸ்க்ரீம் திட்டம் தெரியும்?
தொடரும்

# குரங்கும் முயலும்

முன்பு ஒரு காலத்தில் ஏராளமான மரங்கள் உள்ள காடு ஒன்றில் ஒரு குரங்கும் ஒரு முயலும் நண்பர்களாக வாழ்ந்து வந்தன. நல்ல குணமும் அப்பாவித் தனமும் கொண்டது முயல். தந்திர குணமும் ஏமாற்றுத்தனமும் கொண்டது குரங்கு.

ஒரு நாள், காலை நேரம். காட்டை அடுத்து ஒரு சாலையில், மரத்தின் கீழே உட்கார்ந்து குரங்கும் முயலும் பேசிக் கொண்டிருந்தன.

அப்போது தூரத்தில் மனிதன் ஒருவன் வந்து கொண்டிருந்தான். அவனது தலையில் கரும்புக்கட்டு. கையில் வாழைப்பழக்குலை.

அதைக் கண்டதும் குரங்கின் மூளையில் மின்னல் போல ஒரு திட்டம் தோன்றியது.

முயலிடம் குரங்கு பேசியது:

"முயல் தம்பி! முயல் தம்பி! அதோ பார்! தூரத்தில் ஒரு மனிதன் வருகிறான். அவன் தலையில் கரும்புக் கட்டு. கையில் வாழைப் பழங்கள். அவற்றை நாம் எப்படியாவது அபகரித்துக் கொள்ள வேண்டும்"

முயல் கேட்டது: "அது எப்படி முடியும்?"

குரங்கு சொன்னது: "சுலபமான வழி நான் சொல்கிறேன். கவனமாகக் கேள். நீ என்ன செய்கிறாய் தெரியுமா? பாதையின் நடுவே மயங்கிக் கிடப்பது போல படுத்துக்கொள் அவன் உன்னைப்பார்ப்பான். உன்னைப்பிடிக்க ஆசைப்படுவான் தன்னிடம் உள்ள கரும்புகளையும் வாழைப் பழங்களையும் கீழே வைத்துவிட்டு உன்னைப் பிடிக்க வருவான். அவன் உன் பக்கத்தில் வந்ததும் நீ திடீர் என்று எழுந்து ஓட வேண்டும் அவன் உன்னைப் பிடிக்கத் துரத்திக்கொண்டு வருவான். அந்த நேரம் நான் கரும்புகளையும் வாழைப் பழங்களையும் எடுத்துக் கொண்டு போய் விடுகிறேன். பின்னர், அவனை ஏமாற்றி விட்டு நீ வந்து விடு. அப்புறம் கிடைத்தவற்றில் சரி பாதியாக பங்கு போட்டு நாம் தின்னலாம்".

குரங்கு சொன்ன திட்டத்தை முயல் ஏற்றுக் கொண்டது. பாதையின் நடுவே மயங்கிக்கிடப்பது மாதிரி படுத்துக்கொண்டது.

குரங்கின் திட்டப்படியே எல்லாம் நடந்தது. பாதையில் விழுந்து கிடந்த முயலைப்பிடிக்க அந்த மனிதன் ஆசைப்பட்டான். கரும்புகளையும் வாழைப் பழங்களையும் கீழே வைத்தான். முயலைப் பிடிக்க வந்தான்.

அவன் முயல் அருகே வந்தான். குரங்கின் திட்டப்படி முயல் எழுந்து ஓடியது. முயலைப் பிடிக்க அந்த மனிதன் தொடர்ந்து ஓடினான். போக்குக் காட்டி முயல் ஓடியது. அப்புறம் மின்னல் போல் காட்டிற்குள் ஓடி பதுங்கியது.

அந்த நேரத்தில் அவன் கொண்டு வந்த கரும்புகளையும் பழங்களையும் எடுத்துக்கொண்டு குரங்கு காட்டில் மறைந்தது.



அந்த மனிதன் திரும்பி வந்தான். தான் கொண்டு வந்த கரும்புகளையும் பழங்களையும் காணாமல் வருத்தப்பட்டான். வருத்தத்துடன் வந்த வழியே திரும்பிப் போனான்.

சிறிது நேரம் சென்றது. குரங்கைத் தேடி முயல் வந்தது. குரங்கைக் காணோம். வழக்கமாக குரங்கை சந்திக்கும் இடங்களில் எல்லாம் முயல் தேடியது. எங்கும் குரங்கைக் காணவில்லை. முயல் திகைத்தது.

ரொம்ப நேரம் முயல் குரங்கைத் தேடியது. களைத்துபோன முயல் ஒரு பெரிய மரத்தின் நிழலில் உட்கார்ந்தது. எதிரில் ஏராளமான கரும்புச் சக்கைகளும், வாழைப்பழத் தோல்களும் கிடந்ததை முயல் பார்த்தது.

உயரே அண்ணாந்து பார்த்தது முயல். மேலே மரக்கிளையில் குரங்கு சுகமாகத் தூங்கிக்கொண்டிருப்பதைக் கண்டது.

"குரங்கு அண்ணே! இங்கேதான் இருக்கிறாயா? உன்னை எங்கே எல்லாம் தேடினேன் தெரியுமா? சரி, சரி! அந்த மனிதனிடமிருந்து எடுத்த கரும்புகளிலும் வாழைப்பழங்களிலும் என் பங்கைத் தருகிறாயா?" என்று கேட்டது முயல்.

முயலின் குரல் கேட்டு கண்விழித்தது குரங்கு. கடகடவெனச் சிரித்தது. "உனக்குப் பங்கா? எங்கே இருக்கிறது? எல்லாம் என் வயிற்றுக்குள் போய் செரித்து விட்டது" என்று குரங்கு சொன்னது.

முயலுக்கு ஏமாற்றம். கோபம் வந்தது. "நீ பொய் சொல்கிறாய். எல்லாவற்றையும் உன்னால் சாப்பிட்டிருக்க முடியாது. மரக்கிளைகளில் ஒளித்து வைத்து விட்டு என்னை ஏமாற்ற நினைக்கிறாய்" என்று முயல் கோபத்தோடு கத்தியது.

குரங்குக்கும் கோபம் வந்தது. ஒரே தாவில் மரத்திலிருந்து குதித்தது. முயலின் காதுகளைப்பிடித்துத் தூக்கியபடி மரத்துக்குச் சென்றது.

மரக்கிளையில் முயலை உட்கார வைத்தது குரங்கு. "நம்பாமல் சத்தம் போட்டாயே! நான் ஒளித்து வைத்திருப்பதை கண்டுபிடித்து சந்தோஷமாக சாப்பிடு! நான் போய் வருகிறேன்" என்று சொல்லி விட்டு குரங்கு கீழே குதித்தது.

முயலுக்கு மரத்திலிருந்து கீழே இறங்கத்தெரியாது. எனவே அதற்கு பயம் வந்துவிட்டது.

"அண்ணே! குரங்கு அண்ணே! என்னை கீழே இறக்கி விடு!" முயல் கெஞ்சியது.

நண்பன் முயலைப்பற்றி குரங்கு கவலைப்படவில்லை தாவித் தாவி ஓடிப் போய் விட்டது.

அப்போது அந்தப் பக்கமாக ஒரு ஒட்டகச் சிவிங்கி வந்தது.

சிவிங்கி அண்ணே! சிவிங்கி அண்ணே! என்னை கீழே இறக்கிவிடு'' என்று சத்தம் போட்டு முயல் சொன்னது.

''முயல் தம்பி! நீ எப்படி மரத்தில் ஏறினாய்?'' என்று கேட்டுக் கொண்டே ஒட்டகச் சிவிங்கி தனது கழுத்தை நீட்டியது.

நடந்த கதையைக் கூறிய முயல் ஒட்டகச்சிவிங்கியின் கழுத்தைப் பிடித்தது.

ஒட்டகச்சிவிங்கி முயலை கீழே இறக்கி விட்டது. முயல் நன்றி சொன்னதும் ஒட்டகச்சிவிங்கி போய் விட்டது.

முயல் மரத்தடியில் உட்கார்ந்து இருந்த போது ''டங் டங்'' என்று டமாரச் சத்தம் கேட்டது ஆட்களின் ஆரவாரமும் கேட்டது. பயந்து போன முயல் ஓர் புதரில் மறைந்து கொண்டது.

ஒருயானை வேகமாக ஓடிவந்தது. அதன் மேல் பல அம்புகள் பாய்ந்திருந்தன. ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. ஓடி வந்த யானை ஒரு பெரிய குழியில் விழுந்து விட்டது.

முயல் குழியில் குனிந்து பார்த்தது. யானை செத்துவிட்டது. முயலுக்கு ஒன்றும் புரியவில்லை.

''டங் டங்'' என்ற சத்தம் வந்த திசையை நோக்கி முயல் ஓடியது.

அங்கே, பல வீரர்கள் கையில் பல வகையான ஆயுதங்களுடன் வந்து கொண்டிருந்தார்கள். தங்கள் நாட்டு அரசரின் சிம்மாசனத்தில் பொருத்த யானைத்தந்தம் வேண்டுமாம். அதனால் தான் அவர்கள் யானையைக் கொன்றார்களாம். அவர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டதிலிருந்து முயல் இதைத் தெரிந்து கொண்டது.

யானை விழுந்து கிடந்த குழியை வீரர்கள் கண்டு பிடிக்க முடியாமல் ஏமாற்றத்தோடு திரும்பிப் போனார்கள்.

முயலுக்கு திடீரென்று ஒரு யோசனை. அரண்மனையை நோக்கி ஓடியது.

அந்த நாட்டு அரசனுக்கு தும்மல் பிடிக்காது. தும்மல் சத்தம் கேட்டால் கோபம் வரும். தும்மல் சத்தம் போட்டவனுக்கு அரசர் கடுமையான தண்டனை தருவார்.

அரச சபையில் பலர் கூடியிருந்தனர். உள்ளே நுழைந்த முயல் சற்று நேரம் பேசாமல் இருந்தது.

திடீரென முயல் 'அச்' என்று ஒரு தும்மல் போட்டது.

''யார் தும்மல் போட்டது?'' கோபத் தோடு கேட்டார் அரசர்

மறுபடியும் முயல் ''அச்'' என்று பெரிய தும்மல் போட்டது.

இப்போது அரசருக்கு கடுமையான கோபம் வந்து விட்டது. ''தும்மல் சத்தம் போட்டவனைப் பிடித்து சிறையில் போடுங்கள்'' என்று அரசர் கட்டளையிட்டார்.

முயல் வெளியே வந்தது ''மரியாதைக்குரிய அரசரே! மன்னிக்க வேண்டும். என் மீது தங்கள் பார்வை பட வேண்டும் என்பதற்காக நான் தான் தும்மல் போட்டேன்.'' என்று முயல் சொன்னது.

''சரி! எதற்காக வந்தாய்? முயலே, உனக்கு என்ன வேண்டும்?'' என்று அரசர் கேட்டார்.

''தாங்கள் விரும்பும் யானைத்தந்தம் இருக்கும் இடம் எனக்குத் தெரியும். என்னோடு தங்கள் சிப்பாய்களை அனுப்பினால் நான் இடத்தை காட்டுவேன்'' என்று முயல் சொன்னது.

''முயலுடன் செல்லுங்கள்'' என்று சிப்பாய்களுக்கு அரசர் உத்தரவிட்டார்.

யானை விழுந்து கிடந்த குழியை சிப்பாய்களுக்கு முயல் காட்டியது. தந்தத்தை எடுத்துக்கொண்டு போன சிப்பாய்கள் ''முயல் சொன்ன இடத்தில் தான் தந்தம் கிடைத்தது'' என்று அரசரிடம் சொன்னார்கள்.

அரசருக்கு மிகவும் களிப்பு. முயலுக்கு பட்டு உடைகள் தைத்துப் போடச் சொன்னார். பல வகையான பழங்களும் பொருட்களும் கொடுக்கச் சொன்னார்.

அழகான சிறிய வெள்ளைக் குதிரை மீது முயலை ஏற்றி வைத்து, தடவிக் கொடுத்து, காட்டிற்கு அனுப்பி வைத்தார் அரசர்.


# தங்கக்கண்மணி

குதிரை மீது குட்டி அரசர் போல வந்து கொண்டிருந்த முயலை அதன் நண்பன் குரங்கு பார்த்தது. அதற்கு ஆச்சர்யமாகவும் பெருமையாகவும் இருந்தது.

''முயல் தம்பி, முயல் தம்பி! உனக்கு இந்த வாழ்வு எப்படி வந்தது?'' என்று குரங்கு கேட்டது.

முன்பு தன்னை ஏமாற்றிய குரங்குக்கு பாடம் கற்பிக்க முயல் நினைத்தது.

''குரங்கு அண்ணே! பக்கத்து நாட்டு அரச சபைக்குப் போய் அரசர் முன் ஒரு தும்மல் போட்டேன். தும்மல் என்றால் அந்த அரசருக்குப் பிடிக்காது. நான் ஒரே ஒரு தும்மல் தான் போட்டேன். மீண்டும் நான் தும்மல் போடக்



கூடாது என்பதற்காகத் தான் பழங்களும் குதிரையும் பரிசாக அரசர் கொடுத்தார்'' என்று முயல் சொன்னது.

குரங்குக்கு பேராசை. ஒரே ஓட்டமாக அரண்மனைக்கு ஓடியது.

அரச சபைக்குள் குரங்கு நுழைந்தது. அரசர் முன்பு சென்று ''அச், அச், அச்'' என்று மூன்று தும்மல் போட்டது.

அரசருக்கு கடும் கோபம் ஏற்பட்டது.

''ஏய் குரங்கே! எதற்கு தும்மல் போடுகிறாய்? நிறுத்து!'' என்று கத்தினார் அரசர்.

''முயலுக்குக் கொடுத்த பரிசைப் போல இரண்டு மடங்கு எனக்குத் தரவேண்டும். அப்போது தான் தும்மலை நிறுத்துவேன்'' என்றது குரங்கு.

மீண்டும் 'அச், அச், அச்' என்று தும்மல் போட்டது.


அரசருக்குக் கடுமையான கோபம் வந்தது. ''இந்தக் குரங்கைப் பிடித்து சிறையில் தள்ளுங்கள்'' என்று உத்தரவிட்டார்.


சிப்பாய்கள் குரங்கைப் பிடித்து சிறையில் அடைத்தனர்.

கபீஷ் - சுறுசுறுப்பும் சுட்டித்தனமும் நிறைந்ததொரு குட்டிக் குரங்கு! தனது தவ வலிமையால் அனுமானை வேண்டி தான் விரும்பியவாறெல்லாம் வாலினை நீட்டவும் சுருக்கவும் கூடிய ஓர் அற்புத வரத்தினைப் பெற்றுள்ளது! குறும்புத்தனம் மிக்க அக்குரங்கு வாலின் துணையுடன் நிகழ்த்தும் சாகஸங்கள் அனைத்துமே ரசித்து மகிழத்தக்கவை! வேடிக்கையும் விநோதமும் நிறைந்தவை!




(2)




ஆஹா, கொழுத்த முயல்! அவ்வளவு விண் போகவில்லை!
நிச்சயமாக இது நமக்கு வன தேவதை தந்த பரிசு. அன்பும் இரக்க குணமுமான என் சுபாவத்திற்கு தகுந்த வெகுமதி தர எண்ணியிருப்பாள் போலும்.
அந்த முட்டாள் பிராணியைப் பாய்ந்து கொன்று வயிறாறப் புசிக்கப்போகிறேன் இப்போது.
அதே சமயம் மேலே—
மோத்தி நிற்பது தெரிகிறது.
துரதிர்ஷ்டவசமாக பீலுவும் அங்கே இருப்பது தெரிகிறது எனக்கு.
அதோ பதுங்கிப் பதுங்கிச் செல்கிறான் பார் மோத்தியின் மீது பாய்வதற்கு.
ஓ! ஆண்டவனே!
ஒரே சமயத்தில் என்னையும் மோத்தியையும் உன்னால் தூக்க முடியுமா பஞ்சா?
ஊஹூம்.
மோத்தியைத் தனியாகத் தாக்கலாமல்லவா?
அதுவும் சாத்தியமில்லை என நினைக்கிறேன்.
எனது கூரிய நகங்களால் பற்றித் தூக்கும்போது காயமேற்படலாம். அதிகமான ரத்தப்போக்கு ஏற்பட்டு அது செத்துவிடவும் கூடும்.




கபிஷ், நீயும் இங்கே இரை தேடி வந்தாயா?
இல்லை. மோத்தி...
அங்கே பார்... பீலு உன்னை இரையாக்கிக் கொள்ளத் தயாராய் நிற்கிறது.
பீ.. பீலுவா?
இதோ வருகிறது!
ஆஹா! பேஷ், பேஷ்! என்னுக்கு இரண்டாய் சரியான வேட்டை இன்று!
மேலே நிற்கும் பாறைகளைத் தள்ளி பீலுவின் பேராசையைச் சிதறடிப்போம்!
மோத்தி, கொஞ்சமும் நகராமல் அங்கேயே நில்.
மேலே குவிந்து கிடந்த பாறைகளை நோக்கி தன் வாலை வளர்த்தது கபிஷ்...
...அடியில் இருந்த பாறையைப் பற்றி இழுத்தது—
..மறுகணம், பாறைகள் பெரும் ஓசையுடன் நகர்ந்து கீழே உருண்டோடி வந்தன.
ஐயோ, ஆபத்து! உதவி! உதவி!
கல் விழுந்த வலி தாளாமல் உயிர் தப்ப வெருண்டோடியது பீலு.
சபாஷ், கபிஷ்! பீலு இந்தப் பக்கம் இனி தலைவைத்துக் கூடப் படுக்காது!
மோத்தி, வா, வீட்டுக்குப் போகலாம். இனியும் உன்னை இங்கே விட்டுச் சென்றால் ஆபத்து!
முற்றும்

தொடர்கதை

# காபூல் பட்டணத்து அடிமைகள்

**1**

மல்லிகதங்கராசன்


முன்னொரு காலத்தில் அரேபிய தேசத்தில் அடிமை வியாபாரம் மும்முரமாக நடந்துகொண்டிருந்தது. பல்வேறு தேசங்களிலிருந்து பலசாலியான ஆண்களையும், அழகான பெண்களையும் பிடித்துவந்து அரேபியதேசத்தில் உள்ள சந்தைகளில் ஆடுமாடுகளை விற்பதுபோல விற்பார்கள். இதற்காக விசேஷமாக சந்தைகள் நடைபெறும். இந்த சந்தையில் உயரமான மேடைமீது அடிமையான ஆணையோ பெண்ணையோ கொண்டு வந்து நிறுத்துவார்கள். அரேபியாவின் பல பாகங்களிலிருந்தும் ஏராளமான செல்வந்தர்கள் இவர்களை விலைக்கு வாங்குவதற்காக வந்திருப்பார்கள். பலசாலியான ஆண்களையும், அழகான பெண்களையும் இவர்கள் போட்டிபோட்டுக் கொண்டு அதிக விலைக்கு வாங்குவார்கள். விற்பவனுக்கும் நல்ல விலை கிடைக்கும். இதனால் இந்த அடிமை வியாபாரிகள் பல்வேறு தேசங்களுக்குச் சென்று அழகான ஆண்களையும், பெண்களையும் பிடித்து வருவார்கள்.

அந்தக்காலத்தில் இந்தியாவில் மருலிப்பட்டணத்தில் கலிபா என்ற வைரவியாபாரி ஒருவன் இருந்தான். அவனிடத்தில் ஏராளமான செல்வங்கள் இருந்தன. அந்த நகரத்தின் சுல்தானுக்கு அடுத்தபடியாக கலிபா செல்வாக்குடனும் வசதியுடனும் வாழ்ந்து வந்தான். அவனுக்கு நசிர் என்ற மகனும், நசிமா என்ற மகளும் இருந்தனர். இளைஞன் நசிர் கல்வியிலும் வீரத்திலும் சிறந்து விளங்கினான். நசிமா அவனைவிட இரண்டு வயது இளையவள். பேரழகு வாய்ந்தவள்.

இவர்கள் இருவரும் குழந்தையாய் இருக்கும் போதே இவர்களின் தாயார் இறந்துவிட்டார். இதனால் கலிபா தாயற்ற இவர்களை மிகவும் செல்லமாக வளர்த்து வந்தார். இருவருக்கும் எந்தவிதமான குறையுமின்றி அன்புடன் வளர்த்து வந்தார். அதுபோலவே நசிரும் தனது தங்கை நசிமாவிடம் பாசத்துடன் பழகிவந்தான். நசிமாவும் தனது அண்ணனிடம் மிகவும் பிரியமுடன் இருந்தாள். இருவரும் ஒற்றுமையுடன் இருப்பதைக் கண்டு கலிபாவும் தனது வயதான காலத்திலும் கவலை தெரியாமல் வாழ்ந்து வந்தான்.

இப்படி இருக்கையில் நசிமாவுக்கு பதினாறுவது பிறந்த தினம் வந்தது. கலிபா எப்போதும் வருடா வருடம் நசிமாவின் பிறந்த தினத்தை சீரோடும் சிறப்போடும் ஆடம்பரமாக கொண்டாடுவது வழக்கம். அப்போது கலிபா தனது நண்பர்களையெல்லாம் அழைத்து பெரிய விருந்து கொடுப்பான் நசிமாவும் தனது தோழிகளையெல்லாம் அழைத்து தனது பிறந்த நாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவாள். அன்றைக்கு கலிபாவின் மாளிகையே மகிழ்ச்சி வெள்ளத்தில் இருக்கும். இந்த வருடமும் நசிமாவின் பிறந்தநாளை வெகு சிறப்புடன் கொண்டாட கலிபா ஏற்பாடு செய்திருந்தான் அவனது மாளிகையை வண்ண வண்ண விளக்குகளாலும், மலர்களாலும் அலங்காரம் செய்திருந்தான். மாளிகையில் அவனது நண்பர்களையெல்லாம் அழைத்து பெரிய விருந்து ஒன்றளித்தான். நசிமாவும் தனது தோழிகளையெல்லாம் தனது பிறந்த நாளுக்கு அழைத்திருந்தாள்.

விருந்து முடிந்ததும் அன்று மாலை நசிமா தனது தோழிகளுடன் கடலில் படகு சவாரி செய்ய ஆசைப்பட்டாள். தனது விருப்பத்தை தனது தந்தையிடம் சொன்னாள். உடனே கலிபா ஒரு படகினை ஏற்பாடு செய்தான். அந்தப் படகு நன்கு அலங்கரிக்கப்பட்டது. படகை துடுப்பு போட வலிமையான ஆட்கள் ஏற்பாடு செய்யப்பட்டனர். நசிமாவுக்கும் அவளது தோழிகளுக்கும் துணையாக அண்ணன் நசிரை அனுப்பிவைத்தான். நசிமாவும் அவளது தோழிகளும் படகில் மகிழ்ச்சியுடன் சென்றனர். நேரம்போவதே தெரியாமல் விளையாடினார்கள். படகு கரையைவிட்டு கொஞ்சதூரம் வந்ததும் லேசாக இருட்டத் துவங்கியது. உடனே நசிர் கரைக்கு திரும்பவேண்டும் என்றான். ஆனால் நசிமாவோ இன்னும் கொஞ்சதூரம் கடலில்போக வேண்டும் என்று ஆசைப்பட்டாள். தனது தங்கையின் விருப்பத்தை நசிரால் மறுக்கமுடியவில்லை. எனவே படகு ஓட்டுபவர்களிடம் இன்னும் கொஞ்சதூரம் படகை ஓட்டும்படி உத்திரவிட்டான. அதன்படியே படகு ஓட்டிகளும் படகை கடலுக்குள் வெகுதூரம் ஓட்டிச் சென்றனர்.





அப்படிப் படகு கொஞ்சம் தூரம் சென்றதும் தூரத்தில் ஒரு பெரிய கப்பல் வருவதை நசீர் கவனித்தான். அக்கப்பலில் ஏராளமான ஆட்கள் ஆயுதங்களுடன் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களது தோற்றத்தைப் பார்த்ததுமே அவர்கள் கடல் கொள்ளைக்காரர்கள் என்பதை நசீர் தெரிந்துகொண்டான். அந்தக் கப்பல் இவர்களது படகை நோக்கி வேகமாக வந்துகொண்டிருந்தது. உடனே நசீர் தனது படகோட்டிகளைப் பார்த்து படகை வேகமாக கரைக்குத் திருப்பும்படி உத்தரவிட்டான். படகோட்டிகளும் தங்கள் பலத்தையெல்லாம் திரட்டி வெகு வேகமாக கரையை நோக்கி திருப்பி ஓட்டினார்கள். ஆனாலும் அந்தக்கப்பல் விடுவதாக இல்லை. படகை வெகு வேகமாகத் துரத்தியது. படகு கரையை நெருங்குவதற்குள் கப்பல் படகை நெருங்கிவிட்டது. கப்பலிலிருந்த முரட்டு ஆசாமிகள் உருவிய வாட்களுடன் படகுக்குள் எட்டிக் குதித்தார்கள். படகிலிருந்த நசீமாவும் அவளது தோழிகளும் பயந்து போய் படகின் ஒரு மூலைக்கு ஓடினார்கள். கப்பலிலிருந்து மேலும் மேலும் முரட்டு மனிதர்கள் படகுக்குள் குதித்தார்கள். இதனால் படகு அப்படியும் இப்படியும் ஆடியது. நசீமாவும் அவளது தோழிகளும் பயத்தினால் அலறினார்கள். கப்பலிலிருந்து குதித்த ஒரு முரடன் நசீமாவைப் பார்த்ததும் அவளது கையைப் பிடித்து இழுத்தான். உடனே நசீர் தனது வாளை உருவிக்கொண்டு தங்கையை காப்பாற்ற போனான்.

ஆனால் அதற்குள் படகு அப்படியும் இப்படியும் ஆடி அலை மோதி கவிழ்ந்து விட்டது. படகிலிருந்த அனைவரும் கடலுக்குள் விழுந்தனர். கொஞ்ச நேரம் என்ன நடந்ததென்று தெரியவில்லை. ஒரே குழப்பமாகவும் கூச்சலாகவும் இருந்தது. நசீரும் கடலில் விழுந்தான். தண்ணீரிலிருந்து மேலே எழுந்து பார்த்த போது அந்த முரடர்கள் வந்த கப்பல் வெகு வேகமாக போய்க் கொண்டிருந்தது.

நசீரும், அவனுடன் படகில் வந்தவர்களும் நீந்திக் கரை சேர்ந்தார்கள். கரையில் வந்து பார்த்த போது நசீமாவை மட்டும் காணவில்லை. நசீர் அதிர்ச்சி அடைந்தான். ஏனென்றால் நசீமாவுக்கும் நன்றாக நீந்தத் தெரியும். அதனால் அவளும் மற்றவர்களைப் போல நீந்தி கரை சேர்ந்திருப்பாள் என்று எண்ணியிருந்தான். ஒருவேளை அந்த கடல் கொள்ளைகாரர்கள் கொண்டு சென்றிருக்கலாம் என்று சந்தேகப்பட்டான். ஆனாலும், நீந்துவதில் திறமையான ஆட்களை வரவழைத்துப் படகு கவிழ்ந்த இடத்தில் தேடிப்பார்க்கச் சொன்னான். அவர்களும் நீண்ட நேரம் தேடிப்பார்த்து விட்டு வெறுங்கையுடன் திரும்பினார்கள். நசீருக்கு கவலை அதிகரித்தது. மாளிகைக்குத் திரும்பி தனது தந்தைக்கு என்ன பதில் சொல்வது என்று குழம்பினான். தங்கையில்லாமல் தான் மட்டும் மாளிகைவீடு திரும்பினால் தன்னை வீட்டுக்குள் அனுமதிக்கமாட்டார் என்பதை எண்ணி வேதனைப் பட்டான். அதுபோல அவன் வீடு திரும்பியதும் கலீபா மிகவும் கோபப்பட்டான். கூடவே தனது ஒரே செல்வ மகளைக் காணவில்லை, என்றதும் கவலையினால் அப்படியே உட்கார்ந்து விட்டான். நசீரை அழைத்து நசீமா காணாமல் போனதற்கு அவன் தான் காரணமென்றும் நசீமா இல்லாமல் இனிமேல் தன்னுடைய முகத்திலேயே விழிக்கக்கூடாது என்றும் கட்டளையிட்டான். நசீர் என்ன செய்வான். பாவம். தங்கையைப் பிரிந்த துயரம் ஒரு பக்கம். தந்தையின் கோபம் ஒரு பக்கம்.

... தொடரும்





வன ராஜா
அலைகளின் ஆரவாரமற்ற அமைதியான கடல்... அதன் தெள்ளிய நீர்ப்பரப்பின் மேல் கம்பீரமாக மிதந்துகொண்டிருக்கிறது கப்பல் எவரெஸ்ட்—
அதோ... தூரத்தில் தெரிவதுதான் மர்மம் நிறைந்த தீவு என்று கருதப்படுகின்ற சூரியத் தீவு!
அத்தீவிலே வனராஜா என்பவர் ஆண்டு வருவதாக வயதானவர்கள் சொல்லுகிறார்கள்.
ஒருவேளை அதுவெறும் சட்டுக்கதையாகக் கூட இருக்கலாம்!
'எவரெஸ்ட்' ஆபத்தான கொடிய குற்றவாளிகள் மூவரை ஏற்றிக்கொண்டு அந்தமானை நோக்கிப் பயணமாகிக்கொண்டிருந்தது!
நண்பர்களே! நேரம் நெருங்கி விட்டது தயாராயிருங்கள்!
ம்ம்... சீக்கிரம்!
சமையல்காரன் உணவு எடுத்துவருவதன் அறிகுறியாக பாத்திரங்களின் ஓசை சமையலறையில் கேட்கவும் மூவரும் மறைவில் சென்று பதுங்கினர்.
ஜுமா! இதோ நம்முடைய விடுதலை நேரம்வந்துவிட்டது!
சமையல்காரன் உள்ளேவந்தான்.
ஹா! எங்கே அந்த மூவரும்? மாயமாய் மறைந்து விட்டார்களா என்ன?!
அவன் கதவைத் திறக்கவும்...
உஷ்! சத்தம் போட்டாயோ, தொலைந்தாய்!
அய்யோ!?
மறு விநாடி—
யாரையும் காணோம்! நல்லவேளை!
வேகமாகவும், அதே நேரத்தில் மிகுந்த எச்சரிக்கையுடனும் விரைந்தனர் குற்றவாளிகள் மூவரும்.
என் பின்னால் வாருங்கள்!
தொடரும்


ராமுவும் சோமுவும்
பதினெட்டு, இருபது வயதான சகோதரர்கள் இருவருக்கு லாட்டரியில் முதல் பரிசு கிடைத்துள்ளதாம்.
சரியான யோகக் காரர்கள்!
இந்த லட்சம் ரூபாய் அதிர்ஷ்டம்!
பணத்தை வைத்து என்ன தான் செய்யப்போகிறார்களோ? வீண்செலவு செய்து தொலைக்காமலிருந்தால் புத்திசாலிகள்தான்.
கூட்டாக மளிகைக்கடை ஒன்று நடத்தத் திட்டமிட்டிருக்கிறார்களாம்.
நல்ல திட்டம் தான்!
ராமு, சோமு, உங்களுக்கும் அதிர்ஷ்டமிருந்து...
இந்த லட்சம் பரிசு விழுந்தால்...
என்ன செய்வீர்கள்?
ராமு, உனக்கு பல் வைத்தியராக விருப்பமா?
இல்லே கூட்டாக கடை நடத்து வீர்களா?
இரண்டையுமே செய்வோம்!
நான் பல்வைத்தியம் செய்வேன். சோமு மிட்டாய் வியாபாரம் பண்ணுவான்...
...சிறுவர்களெல்லாம் சோமு விடம் மிட்டாய் வாங்குவார் கள். மிட்டாயைச்சாப்பிட்டு பல்வலி வந்ததும் என் னிடம் வைத்தியத்திற்கு வருவார்கள். எப்படி எங்க திட்டம்!


பேப்பரிலிருந்து பென்சிலை எடுக்கா-
மலும் ஒரே கோட்டின் மீது
திரும்பவும் செல்லாமலும் ஒரே
கோட்டில் இங்கே உள்ள
படங்களை வரைய முடியுமா
உங்களால்?
முயற்சி செய்து
பாருங்களேன்!
— விடை அடுத்த வாரம்

# புதிர் வட்டம்

**மங்கை**

அழகாபுரி என்று ஒரு நாடு. பிரதாபன் என்ற அரசன் அதை ஆண்டு வந்தார். ஏராளமான செல்வம். நல்ல குணம் படைத்த குடிமக்கள். அரசனுக்கு எந்தக் குறையும் இல்லை.

திடீரென அடுத்த நாட்டிலிருந்து ஒரு தூதுவன் வந்தான். அவசரமாக அரசரைப் பார்க்க வேண்டும் என்று அவன் சொன்னான்.

அரசர் சம்மதித்தார். தூதுவன் அரண்மனைக்குள் வந்தான். வந்தவன் வாய் திறந்து பேசவில்லை. நேரே அரசரின் அரியணை அருகே போனான். கையோடு கொண்டு வந்த கரிக்கட்டியால் அரியணையைச் சுற்றி வட்டமாகக் கோடுபோட்டான்.

அரசருக்கும், அமைச்சர்களுக்கும் தூதுவனின் செயல் புரியவில்லை; புதிராக இருந்தது.

''தூதுவரே! எதற்காக வந்தீர்! கரித்துண்டால் எனது அரியணையைச் சுற்றி வட்டமாக கோடு போட்டதன் அர்த்தம் என்ன?''-என்று அரசர் கேட்டார்.

அப்போதும் தூதுவன் பேசவில்லை. அமைச்சர்களையும் புலவர்களையும் பார்த்து ''இதற்கு அர்த்தம் என்ன?'' என்று அரசர் கேட்டார் அவர்களுக்கும் விளங்கவில்லை. அவர்கள் வெட்கத்தால் தலை குனிந்தார்கள்.

''யார் இதற்கு விடையும் விளக்கமும் சொல்கிறார்களோ அவர்களுக்குப் பத்தாயிரம் பொற்காசுகள் பரிசு தரப்படும். இதை நாட்டு மக்களுக்கு அறிவியுங்கள்'' என்றார் அரசர்.

சேவகர்கள் தண்டோரா போட்டு இந்தச் செய்தியை மக்களிடையே பரப்பினார்கள்.

பார்த்திபன் என்பவன் ஒரு தையற்காரன். அவன் தண்டோரா செய்தியைக் கேட்டான். சிந்தனை செய்தான்.

''அடுத்த நாட்டு தூதுவனின் செயலுக்கு நான் அர்த்தம் சொல்கிறேன். இதை அரசரிடம் கூறுங்கள்'' என்று பார்த்திபன் சேவகர்களிடம் சொன்னான்.

அரசர் கேட்டார். மகிழ்ச்சி கொண்டார். ஆனாலும் நம்பிக்கை ஏற்படவில்லை.

''எங்களுக்கே புரியவில்லை. சாதாரண தையற்காரனுக்கு தெரியவா போகிறது?'' அமைச்சர்களும் புலவர்களும் தங்களுக்குள் ஏளனமாகச் சொல்லிக் கொண்டார்கள்.

கையில் ஒரு கோழி; பையில் தானியங்கள், ஒரு எலும்புத்துண்டு, இவற்றை எடுத்துக்கொண்டு பார்த்திபன் அரச சபைக்குள் நுழைந்தான். அரசரை வணங்கினான், தூதுவனையும் அவன் போட்டிருந்த வட்டத்தையும் பார்த்திபன் பார்த்தான்.

கோழியை இறக்கி விட்டான் பார்த்திபன், தானியங்களை கீழே தூவி விட்டான்.

கோழி தானியங்களைக் கொத்தித் தின்றது.

அப்புறம் தன் கையில் இருந்த எலும்புத் துண்டை தூதுவனிடம் தூக்கிப் போட்டான் பார்த்திபன்.

தூதுவன் முகம் மாறியது, அவசரமாக எழுந்தான், அரசரிடம் போனான். ''மன்னித்து விடுங்கள் அரசே!'' என்று சொல்லிவிட்டு தூதுவன் ஓட்டமும் நடையுமாக வெளியேறினான்.

''பார்த்திபா! அந்தத் தூதுவன் கரித்துண்டால் வட்டம் வரைந்தான். கோழியும் தானியங்களும் எலும்புத் துண்டும் நீ கொண்டு வந்தாய், வந்தவன் மன்னிப்புக் கேட்டு ஓடிவிட்டான். இதற்கு எல்லாம் அர்த்தம் தான் என்ன?''-என்று அரசர் கேட்டார்.

பார்த்திபன் சொன்னான்;

''நமது நாட்டின் மீது அவர்கள் படை எடுக்கப் போவதாகவும், நம்மை வென்று தங்களை அவர்கள் நாட்டு அரசர் சிறையில் போட்டு விடுவார் என்றும் மிரட்டவே தூதுவன் தங்களைச் சுற்றி வட்டம் போட்டான்''

''சரி! நீ கொண்டுவந்த கோழி கதை என்ன?''-என்று அரசர் கேட்டார்.

''தானியங்களைக் கோழி கொத்துவது போல நமது நாட்டு வீரர்கள் எதிரிகளைக் கொத்தி விடுவார்கள் என்பதை கோழியை விட்டு எச்சரித்தேன். கடைசியில், எதிரிகளே! உங்களுக்கு உங்கள் படை வீரர்களின் எலும்புத்துண்டுள்தான் மிச்சப்படும் என்பதை எலும்புத்துண்டை வீசிக் காண்பித்தேன். இதைப் புரிந்து கொண்ட தூதுவன் ஓட்டம் பிடித்தான்'' என்று பார்த்திபன் விளக்கம் தந்தான்.

பார்த்திபனின் புத்திசாலித்தனத்தை அரசர் பாராட்டினார். அனைவரும் மகிழ்ச்சி கொண்டனர்.

வாக்குத் தந்தபடி பத்தாயிரம் பொற்காசுகளை பார்த்திபனுக்கு அரசர் பரிசு கொடுத்தார்.



# நல்ல பாம்பும் கட்டுவிரியனும்



முன்னொரு காலத்தில் நாட்டிலும் காட்டிலும் கடுமையான வறட்சி நிலவியது. ஆறுகளும், குளங்களும் வறண்டு கிடந்தன. தண்ணீர் கிடைக்காமல் மிருகங்கள் தாகத்தோடு தவித்தன.

மிகுந்த தாகம் கொண்ட ஒரு நல்ல பாம்பு தனது புதரிலிருந்து புறப்பட்டு தண்ணீரைத் தேடிக்கொண்டு அலைந்தது.

ஒரு பெரிய தோட்டத்தின் நடுவே வீடு ஒன்று இருந்தது. தோட்டத்தில் தொட்டி நிறைய தண்ணீரில் ஒரு பாப்பா குளித்துக் கொண்டிருந்ததை நல்லபாம்பு பார்த்தது.

அடங்காத தாகம் அதற்கு. எனவே குழந்தை குளித்துக் கொண்டிருந்த தொட்டி அருகே சென்று தலையை விட்டு தண்ணீர் குடித்தது.

அது பாம்பு என்றும், அது கடிக்கும் என்றும் பாப்பாவுக்குத் தெரியாது. தன் கையில் வைத்துக் கொண்டிருந்த கொட்டாங்கச்சியால் நல்லபாம்பின் தலையில் தட்டியது. 'குழந்தை தானே! விளையாடுகிறது' என்று நினைத்த நல்லபாம்பு தண்ணீரைக் குடித்துவிட்டுப் போய்விட்டது.

இப்படி தினந்தோறும் காலை வேளையில் பாப்பா தொட்டியில் குளிக்கும் போது நல்லபாம்பு வரும். தண்ணீர் குடிக்கும். பாப்பா அதன் தலையில் கொட்டாங்கச்சியால் தட்டும். கோபப்படாமல் நல்லபாம்பு போய் விடும்.

இப்படியிருக்கும்போது ஒருநாள் நல்லபாம்பைத்தேடி அதன் நண்பனான கட்டுவிரியன்பாம்பு வந்தது.

''எனக்குக் குடிக்கத் தண்ணீரே கிடைக்கவில்லை. நாக்கு வறண்டு போய்விட்டது. தொண்டை காய்ந்து போய்விட்டது. நல்லபாம்பு நண்பனே! எங்கேயாவது தண்ணீர் கிடைக்குமா?'' என்று கட்டுவிரியன் கேட்டது.

நல்லபாம்பு பதில் பேசவில்லை. தோட்டத்தில் குழந்தையின் குளிக்கும் தொட்டியைப்பற்றி சொல்லவில்லை. கட்டுவிரியனுக்கு நல்ல குணம் இல்லை என்பது நல்லபாம்புக்குத் தெரியும்.

''எனக்கும் தண்ணீர் கிடைக்கவில்லை'' என்றது நல்லபாம்பு

''இல்லை நீ பொய் சொல்கிறாய். உன்னைப்பார்த்தால் வறட்சியால் பாதிக்கப்பட்டவன் போலத் தெரியவில்லை. நான் உன் சிநேகிதன் இல்லையா? தண்ணீர் இருக்குமிடத்தைச் சொன்னால் உயிர் உள்ளவரை உன்னை நான் மறக்கவே மாட்டேன்.'' என்று கூறி கட்டுவிரியன் கண்ணீர் விட்டது.

''நான் தண்ணீர் இருக்கும் இடத்தை உனக்குச் சொல்லுவேன். ஆனால், அங்கே இருக்கும் குழந்தையை நீ கடிக்கக் கூடாது. கடிக்க மாட்டேன் என்று சத்தியம் செய்து கொடு!'' என்றது நல்லபாம்பு.

'சத்தியம் செய்தது கட்டுவிரியன். குழந்தையின் குளிக்கும் தொட்டி இருக்கும் இடத்தை நல்லபாம்பு சொன்னது.

## மதுமதி

மறுநாள் காலை, பாப்பா குளிக்கும் நேரம் கட்டுவிரியன் சொன்னபடி நடக்காது என்று நினைத்த நல்ல பாம்பு தோட்டத்திற்குப்போய் புதர் மறைவில் ஒளிந்திருந்தது.

கட்டுவிரியன் வந்தது. பாப்பா குளித்துக்கொண்டிருந்த தொட்டியில் தலைவிட்டு தண்ணீர் குடித்தது.


எப்போதும்போல பாப்பா தன்னுடைய கொட்டாங்கச்சியால் கட்டு விரியன் பாம்பு தலையில் தட்டியது.

நல்லபாம்புக்கு செய்து கொடுத்த சத்தியத்தை மீறி கட்டுவிரியன் பாம்பு பாப்பாவை கடிக்க வாயைப் பிளந்து சீறியது.

புதர் மறைவில் ஒளிந்திருந்த நல்ல பாம்பு வெளியில் வந்து கட்டுவிரியன் பாம்பு மீது பாய்ந்தது.

சொன்ன சொல்லை மீறிய கட்டு விரியனைக் கடித்துக் கொன்றது நல்லபாம்பு.

அன்றிலிருந்து ஊர் மக்கள் நல்ல பாம்பைத் தெய்வமாகக் கும்பிடத் தொடங்கினார்கள், கட்டுவிரியன் பாம்பைக் கண்ட இடத்தில் அடித்துக் கொல்லத் தொடங்கினார்கள்.



பையன்: முதலாளி, புரோட்டாவுக்கு மாவு பிசைந்த கையெல்லாம் வலிக்குது!

ஓட்டல் முதலாளி: அதுக்காக...?

பையன்: காலில் போட்டு மிதித்துப் பிசையலாமான்னு கேட்க வந்தேன்!

-இரத்தினம்



மகள்: அப்பா, இந்த விடுகதைக்கு விடை சொல்லு. 'கையில் கிடைத்தவுடன் காணாமல் போயிடும்' அது என்னப்பா?

அப்பா: என் சம்பளப் பணம்!

-இரத்தினம்



'எங்கப்பா வாங்கிய கடனுக்கெல்லாம் இப்போ நான்தான் பதில் சொல்லிக்கிட்டிருக்கேன்.'

'சின்னவனா - உன்னிடமா கேட்கிறாங்க?'

'ஆமாம். எங்கப்பாவை தேடிவந்தவங்க அப்பா எங்கேன்னு கேட்கும்போது, நான்தான் அவர் வீட்டிலே இல்லேன்னு பதில்சொல்லி அனுப்பிக்கிட்டிருக்கேன்!'

-ஆர். பி. ராஜு

Printed and Published by A. M. Thiyagharajhan at Muthu Comics, P. Box No 253, Chairman P. K. S. A. A. Road, Sivakasi. Editor: M. Saundrapandian


அதிமேதை அப்பு
சித்திரம் - செல்வம்
அப்பா வாங்கிக் கொடுத்த பட்டாசை நேத்தே கொளுத்தியாச்சு! விடிஞ்சால் தீபாவளி... ஒரு பட்டாசு கூட இல்லையே!
உண்டியல் லேயும் ஒண்ணு ரெண்டோ தான் காசு கிடக்கு.
பிரண்ட்ஸுங்க நிறைய பட்டாசு வச்சிருப்பாங்க.
டேய்... உங்க வெடிகளை வெடிக்க நான் உதவி பண்ணட்டுமா?
ஊஹூம் வேண்டாம்... நாங்களே வெடிச்சுக்கிடறோம்
உங்கிட்டே பட்டாசு இல்லையா...?
வாங்கடா... வாங்க...
அடேயப்பா... எவ்வளோ பட்டாசு வச்சிருக்கான்!
சரியா போச்சு கூப்பிடறேன்.
நாங்க எங்க முடிவை மாத்திக்கிட்டோம் அப்பு. எங்க பட்டாசை வெடிக்கும் போது நீ ஒத்தாசை பண்ணலாம்... இப்போ உன் பட்டாசை வெடிக்க நாங்க உதவி பண்றோம்
என் பட்டாசை நான் இப்போ கொளுத்த மாட்டேன். எட்டு மணிக்கு மேலே தான்!
அப்படீன்னா முதல்லே எங்க பட்டாசை வெடிக்கலாம்.
ரொம்ப சரி... வாங்க போகலாம்!
நிச்சயம் தாரேன்.
இந்தா புஸ்வாணம் - ஐயஞ்சு சைஸ்!
டமார்
பட்பட்
டேய் அப்பு.... உடனே வா இங்கே!
அல்ரைட்!
நான் போறேன்.
சரி... நான் இன்னும் வார்த்தை மீறலை... இந்தாங்கடா என் பட்டாசு மொத்தமும்... நீங்களே கொளுத்திக் கொள்ளுங்க
அடா... அப்புவுக்கு எத்தனை தாராள மனசு...
அம்மாடி போச்சு...!
ஒரே ஒரு புஸ்வாணம்...

# முத்து காமிக்ஸ் வாரமலர்



இளம் செல்வங்களின்
இதயம் கவரும்
இனிய இதழ்!

விலை 60 காசு
24.11.1982

பதிப்பாசிரியர்:
முல்லை தங்கராசன்


## ஒற்றைக்கண் மர்மம்.2




ஓடிச் சென்று திரையை விலக்கிப் பார்த்தார் மாயாவி.
ஏ...என்ன அது!
சட்டென்று தற்காப்பு உணர்ச்சி மாயாவியை இயக்கியது... அந்த விநோத ஜந்துவை குறிவைத்து இரும்புக் கையால் ஒரு குத்துவிட்டார்.
...ஈ-ஈ-ஈ-!
மறுகணம்...எதிர்பாராத அதிர்ச்சிக்கு உள்ளான மாயாவி பின்னோக்கி சரிந்தார்.
ஊ.....ய்...
சுதாரித்துக் கொண்டு எழுந்தார்.
பாதி மாயத்தோற்றம் ஏற்பட்டிருக்கிறது... அப்படியானால் அந்த ஜந்துவைத் தொட்டதும் லேசான மின் அதிர்ச்சி என்னை ஊடுருவியிருக்கக் கூடும்!
தோட்டத்துப் பக்கம் விரைந்தார் மாயாவி...
ஒற்றைக் கண் - சைத்தான் வடிவில்...!அப்பப்பா என்ன பயங்கரம்! ஒருவேளை கனவு கண்டிருப்பேனோ?
ஜன்னலுக்கு வெளியே எதையுமே காணாமல் மாயாவி திகைத்து நின்றபோது தொலைவில் ஒரு கார் வரும் ஓசை கேட்டது.
கிராமத்திலிருந்து வருகிறது போலும்!
தொலைவிலிருந்து கலங்கரை விளக்கத்தின் ஜன்னலிலிருந்து திடீரென்று ஓர் ஒளிக்கற்றை சாலையை நோக்கி பாய்ந்தது.
காரின் முகப்புக் கண்ணாடி அதன் இலக்காகியது.
ஆ...போச்சு என்னால் எதையுமே பார்க்க முடியவில்லையே!
அடுத்து அங்கே நடந்தது மாயாவியை உறைய வைத்தது.
அந்தக் கார்... அப்படியே உருகுகிறதே!
தொடரும்



# அந்தாளனின் கணக்குகள்

**—விஜய்—**

முன்னொரு காலத்தில் கண்டி ராஜாவின் அரசவையில் அந்தாளன் என்று ஒரு, விதூஷகன் இருந்தான்.

ராஜாவின் மந்திரிக்கு தூக்கம் வரவேயில்லை. பலநாட்களாக அவர் தூங்காமல் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். அவர் மூளையில் ஒரு பெரிய பிரச்சினை தீராமல் இருந்ததால் உறக்கம் வரவில்லை.

மனம் நெகிழ்ந்து வாய்விட்டுச் சிரித்து விட்டால் தூக்கம் வந்துவிடும் என்று அரச வைத்தியர் சொன்னார். எனவே விதூஷகன் அந்தாளனை அன்று இரவு தன்னோடு தங்கும்படி கேட்டுக் கொண்டார் மந்திரி. அவர் கட்டிலில் படுத்திருந்தார். அந்தாளன் அவர் எதிரே நாற்காலியில் அமர்ந்திருந்தான்.

''அந்தாளா! எனக்குச் சிரிப்பு வந்தால் தூக்கம் வரும் சிரிப்பூட்டக் கூடிய பெரிய கதை சொல்லு'' என்றார் மந்திரி.

கேட்டவுடனேயே விழுந்து விழுந்து சிரிக்கும்படியான ஒரு கதையை நிறைய தமாஷ்களுடன் மூன்று மணி நேரம் சொன்னான் அந்தாளன்.

மந்திரிக்குச் சிரிப்பும் வரவில்லை. தூக்கமும் வரவில்லை. அந்தாளனுக்குத் தூக்கம் வந்து கொண்டிருந்தது.

''அந்தாளா! உறக்கத்தில் ஆழ்ந்து கொண்டிருக்கிறாயா?''

''இல்லை அமைச்சரே! ஒரு கணக்கை மனதுக்குள் போட்டுக் கொண்டிருக்கிறேன்'' என்று சொல்லி விட்டு மனதில் கணக்குப் போடுவது போல முப்பது நிமிஷம் பேசாமலிருந்தான் அந்தாளன்.

''கணக்கை முடிக்கவில்லையா அந்தாளா?''

இன்னும் இல்லை அமைச்சரே... இது ரொம்பவும் கஷ்டமான கணக்கு!''

''கணக்கைச் சொல்லு! என்னால் முடிக்க முடிகிறதா பார்க்கிறேன்''

''வானத்தில் இருக்கும் நட்சத்திரங்கள் எல்லாம் ஒரு நாள் இரவு அகல் விளக்குகளாக மாறுமானால், அவற்றில் ஊற்ற எத்தனை பீப்பாய் எண்ணெய் தேவைப்படும்?''

அந்தாளனின் இந்தக் கணக்குக்கு மந்திரியால் விடை தர முடியவில்லை. யோசித்து யோசித்துப் பார்த்துக் கொண்டிருந்தார் மந்திரி. அந்தாளன் இந்த இடை வேளையில் உட்கார்ந்தபடியே தூங்கினான்.

''அந்தாளா?''

திடீரென அந்தாளன் கண்விழித்தான். ''என்ன?'' என்று கேட்டான்.

''நீ தூங்கிக் கொண்டிருந்தாயா?''

''இல்லை அமைச்சரே, இல்லை! நான் வேறு ஒரு கணக்கை மனதில் போட்டுக் கொண்டிருக்கிறேன். இது அந்தக் கணக்கை விட கடினமானது''

''இது என்ன கணக்கு அந்தாளா?''

''கடலில் உள்ள நீரெல்லாம் பேனா மையானால் அவற்றை எழுதித் தீர்க்க எவ்வளவு காகிதங்கள் தேவைப்படும்?''

அந்தாளனின் இந்தக் கணக்குக்கு விடை காண மந்திரிக்கு முடியவில்லை. ஒரு மணி நேரம் மூளையைப்போட்டுக் குடைந்து கொண்டிருந்தார் அவர். அந்த இடைவேளையில் அந்தாளன் நாற்காலியில் சாய்ந்தபடி தூங்கினான்.

''அந்தாளா?''

அந்தாளன் திடுக்கிட்டு கண் விழித்தான். ''என்ன?'' என்று கேட்டான்.

''இன்னும் பல கணக்குகளை வைத்திருக்கிறாயா அந்தாளா?''

''இப்போது நான் தீவிரமான ஓர் சிந்தனையில் இருக்கிறேன் அமைச்சரே!''

''எதைப்பற்றி சிந்தனை?'' மந்திரி கேட்டார்

''ஒன்று, இந்த முட்டாள் தூங்க வேண்டும் அல்லது என்னைத் தூங்க விடவேண்டும். இதுதான் அந்தச் சிந்தனை!''

மந்திரிக்குச் சிரிப்பு வந்து விட்டது. கலகல வென்று வாய் விட்டுச் சிரித்தார். சிரித்தபடியே தூங்கிப் போனார்.

அந்தாளன் தன்னுடைய வீடு போய்ச் சேர்ந்தான்.




'ஐஸ்க்ரீம் திட்டம்...' அது என்ன? ஐஸ்க்ரீமில் ஸ்பெஷல் அயிட்டமா!
நாசகாரக்கும்பல்.2
எனக்குத் தெரிந்த அயிட்டங்களெல்லாம் ...ஒன்று...
...அஹ்!
கும்!
இவனை பேசவைக்கும் வித்தை நம் பாஸிற்குத் தெரியும்!
காரில் ஏற்றுங்கள் இவனை.
யார் நீங்கள்? எங்கே என்னை அழைத்துச் செல்கிறீர்கள்?
என்னைப் போகவிடுங்கள்!
?!
என்ன நடக்கிறது இங்கே? அந்த அப்பாவி மனிதனைப் போகவிடுங்கள்!
BHARAT ICE-CREAMS
ஏய், கிழவி... உன் வேலையைப் பார்த்துக்கொண்டு போ!
என்ன துணிச்சல் இருந்தால் துப்பாக்கியை என் முன்னே நீட்டுவாய்!
நிறுத்து!
அங்கே ஏதோ குழப்பம்... ஓ! அது பீர்பால் அல்லவா?



ஓ...பகஸ்! இன்னொரு போலீஸ்காரன்!
அவர் இன்ஸ்பெக்டர் கருடா அல்லவா?
சீக்கிரம் கிளம்புங்கள், தப்பிச்செல்வோம்!
ஐயோ... என் குடை!
பல்பீர் முன்னேறிப் பாய—
பீர்பால், குண்டு தலையைக் காயப்படுத்திவிட்டதா?
இல்லை ஸார்!
வா, அவர்களை விரட்டிப் பிடிக்கலாம்.
டாக்ஸி!
அந்தக் காரைப் பின்தொடர்ந்து போ!
இன்ஸ்பெக்டர் தம்பி, நானும் உடன் வரவா?
என் உதவி உனக்குத் தேவைப்படலாம்!
வந்து... வேண்டாம்! தேவையில்லை அம்மணி.
தாங்கள் சற்றுமுன் செய்த உதவியே பெரிது!
அந்த மூதாட்டி லேசுப்பட்ட பெண்ணல்ல, ஸார்!
அந்தப் பெண்மணியை மறந்துவிட்டு நடந்த விஷயத்தைக் கூறு!
எல்லாம் ஐஸ்க்ரீம் ஆசையால் வந்த வினை. ஆரம்பத்திலிருந்தே கூறுகிறேன் உங்களுக்கு...
நடந்த விஷயங்களை பல்பீர் சொல்லி முடிக்க
ஐஸ்க்ரீம் திட்டம் என்பது அவர்களது சதித்திட்டத்தில் ஏதோ ஒரு சமிக்ஞைச் சொல்...
அதன் அர்த்தம் என்னவாக இருக்கும்?
அவர்களைத் தவறவிட்டுவிட்டேன் ஸார்!
தொடரும்.

## தொடர்கதை:

**2**

# காபூல் நகரத்து அடிமைகள்

முஸ்லிம்தாசன்



நசீமா காணாமல் போனதிலிருந்து மாளிகையிலிருந்த அனைவருமே துயரத்தில் மூழ்கியிருந்தனர். தந்தையின் கோபத்தால் வீட்டை விட்டு வெளியேறிய நசீர் என்ன செய்வது என்று தெரியாமல் அலைந்தான். தனது நண்பர்களிடமெல்லாம் ஆலோசனை கேட்டான். அவர்கள் எல்லோரும் நசீமாவை கடல் கொள்ளைக்காரர்கள் கொண்டு போயிருப்பார்கள் என்று மட்டுமே சொன்னார்கள். ஆனால் நசீமா எங்கிருப்பாள் என்பதை மட்டும் யாராலும் சொல்லமுடியவில்லை. ஆனால் சிலர் அவ்வூரிலுள்ள பள்ளிவாசலில் இருக்கும் இருநூறு வயதான 'முத்தவல்லி'' என்ற பெரியவரிடம் கேட்டால் ஏதாவது தெரியும் என்றனர். நசீர் முத்தவல்லியைத் தேடிப் போனபோது முத்தவல்லி பள்ளிவாசலில் நசீரை எதிர்பார்ப்பது போல் 'வா நசீர் நீ என்னைத் தேடி வருவாய் என்று எனக்கு தெரியும்'' என்றார். முத்தவல்லி செக்கச் சிவப்பாக இருந்தார். முகமெல்லாம் அடுக்கடுக்காக சுருக்கு விழுந்திருந்தது. அவரது வெள்ளி நிற தாடி முழங்கால்வரை வளர்ந்திருந்தது. கண்களுக்கு மேல் புருவத்தில் வளர்ந்திருந்த உரோமம் அவரது கண்களை மூடியிருந்தது. நடுங்கிய குரலில் பேசினார்.

'வா நசீர்' என்றதும் நசீருக்கு வியப்பாகி விட்டது. நசீர் கவலையுடன் அழுது கொண்டே எல்லா விபரங்களையும் சொன்னான். முத்தவல்லி எல்லாவற்றையும் கேட்டுவிட்டு, நசீர் உனது சகோதரி நசீமா கடலில் மூழ்கி இறக்கவில்லை. உயிருடன் தான் இருக்கிறாள். அவளை கடல் கொள்ளைக்காரர்கள் கடத்திக் கொண்டு போயிருக்கிறார்கள். அவர்கள் அவளை பல்சாரா என்னுமிடத்தில் கொண்டு போய் அடிமை வியாபாரியிடம் விற்பனை செய் இன்னும் இரண்டு தினங்களில் அதாவது வருகிற ஞாயிற்றுக்கிழமை அந்த வியாபாரி அவளை பல்சாரா அடிமைச் சந்தையில் நடைபெறும் அடிமை ஏலத்தில் அவளை விற்று விடுவான். எனவே ஞாயிற்றுகிழமைக்குள் பல்சாரா போய்ச் சேர்ந்தால் நசீமாவை மீட்டு வரலாம் இல்லையென்றால் ஏலத்தில். ஏதாவது ஒரு சுல்தான் அவளை விலைக்கு வாங்கி விடுவான். சுல்தான் அவளை விலைக்கு வாங்கி விட்டால் பிறகு அவளை யாராலும் பார்க்க முடியாது. யாராலும் மீட்கவும் முடியாது என்று சொன்னார். பின்னர் பல்சாராவிற்குப் போகும் வழியையும் சொன்னார். கடல் மார்க்கமாகப் போனால் நீண்டநாட்களாகுமென்றும், குதிரை மீது குறுக்கு வழியில் போனால் விரைவில் போய்ச் சேர்ந்து விடலாம் என்று சொன்னார். நசீர் முத்தவல்லிக்கு நன்றி சொல்லி விட்டு தனது மாளிகைக்கு வந்தான்.

மாளிகைக்கு வந்தபோது அவனது தந்தை கலீபா இன்னும் கவலையுடன் இருந்தான். நசீர் அவரிடம் போய் தான் இருநூறு வயது முத்தவல்லியைச் சந்தித்த விபரத்தைச் சொன்னான். தனது மகள் நசீமா எங்கோ உயிருடன் இருப்பதைக் கேட்ட கலீபா ஓரளவு மகிழ்ச்சியடைந்தான். நசீரை உடனே பல்சாராவிற்கு புறப்படச் சொன்னான். நசீருக்கு மிகவும் வேகமாக ஓடும் குதிரை ஒன்றையும் அளித்தான். நசீரும் அவனது தந்தை காலில் விழுந்து அவரது ஆசியைப் பெற்றுக் கொண்டு வழிச்செலவிற்கு தேவையான பணத்துடன் குதிரை மீது ஏறிப் பயணமானான்.

பல்சாராவில் அடிமை ஏலம் நடைபெற இன்னும் இரண்டு தினங்களே இருந்தன. நசீர் தனது குதிரையை எவ்வளவு வேகமாக ஓட்டமுடியுமோ அவ்வளவு வேகமாக ஓட்டினான். குதிரையும் காடு மேடு என்று பாராது மிகவும் வேகமாக ஓடியது. இப்படி ஒரு நாள் முழுவதும் ஓடி இரவு நேரம் ஆனது. நசீர் ஓர் அடர்ந்த காட்டிற்குள் சென்று கொண்டிருந்தான். குதிரை மிகவும் களைத்துப் போயிருந்தால் அதை மெதுவாக ஓட்டிச் சென்றான். காட்டின் மையப்பகுதிக்கு வந்ததும், யாரோ வேதனையில் முனகும் சத்தம் கேட்டது. உடனே குதிரையை நிறுத்திவிட்டு சுற்றுமுற்றும் பார்த்தான். பக்கத்தில் இருந்த பள்ளத்திலிருந்து சத்தம் வந்தது. குதிரையை விட்டு இறங்கிப் போய் அந்தப் பள்ளத்தைப் பார்த்தான். பள்ளத்தில் ஒருவன் ரத்தக் காயங்களுடன் கிடப்பது நிலா வெளிச்சத்தில் தெரிந்தது. அவன் பரிதாபமாக முனகிக் கொண்டிருந்தான். நசீர் தான் செல்லும் வேலையை மறந்தான்.

உடனே கிடுகிடுவென வேகமாக அந்தப் பள்ளத்திற்குள் இறங்கினான். நசீர் வாலிபனின் ரத்தத்தையெல்லாம் துடைத்து அவனது காயங்களுக்கு கட்டுப் போட்டான். மெதுவாக அந்த இளைஞனை கைத்தாங்கலாக பள்ளத்திலிருந்து மேலே கொண்டு வந்தான். தான் கொண்டு வந்திருந்த உணவில் அவனுக்கும் கொஞ்சம் கொடுத்தான். அந்த இளைஞனும் மயக்கம் தெளிந்து மரத்தில் சாய்ந்து உட்கார்ந்தான். பின்னர் நசீரிடம் அந்த இளைஞன் தனது கதையைச் சொன்னான்;

அந்த இளைஞன் பெயர் சலீம். அந்தக் காட்டுப் பகுதியில் உள்ள கொள்ளைக் கூட்டத்தின் தலைவனின் மகன். அவன் தந்தை சமீபத்தில் இறந்து போனார்.

எனவே முறைப்படி சலீம் தான் கொள்ளைக் கூட்டத்தின் அடுத்த தலைவனாக வர வேண்டும். ஆனால் சலீமுடைய சித்தப்பன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் முஸ்தபா. கொள்ளைக்கூட்டத்திற்கு அவன் தலைவனாக ஆசைப்பட்டான். எனவே திட்டமிட்டு சதி செய்து ஆட்களை வைத்து சலீமை அடித்துக் கொல்ல ஏற்பாடு செய்தான். முஸ்தபாவின் ஆட்களும், சலீம் தனியாக வந்து கொண்டிருந்தபோது முகமூடி அணிந்து கொண்டு வந்து தாக்கினார்கள். அடிபட்டு மயங்கி விழுந்த சலீம் இறந்து விட்டான் என்று கருதி பள்ளத்தில் தூக்கி வீசி எறிந்து விட்டுப் போய் விட்டார்கள். இந்த சமயத்தில்தான் நசீர் வந்து காப்பாற்றியிருக்கிறான்....

தன்னைக் காப்பாற்றியதற்காக சலீம் நன்றி சொன்னான். நசீரும் தான் புறப்பட்டு வந்த விபரங்களையெல்லாம் சொன்னான். சலீம் அதைக் கேட்டதும் தன்னால் உடனே எழுந்து புறப்பட முடியாது என்றும், முதலில் நசீரை புறப்பட்டுப் போகும்படி கேட்டுக் கொண்டான். உடல் நிலை தேறிய பிறகு தானும் வந்து உதவி செய்வதாகச் சொன்னான். நசீருக்கு மந்திர மோதிரம் ஒன்றையும் அளித்தான். அந்த மோதிரத்தைத் தேய்த்தால் நசீர் எங்கு இருந்தாலும் அங்கு சலீம் தோன்றுவான்.... நசீர் அந்த மோதிரத்தை அணிந்து கொண்டான். பின்னர் சலீமிடம் விடை பெற்றுக் கொண்டு குதிரை மீதேறி காட்டு வழியில் புறப்பட்டான்.

சலீமிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு புறப்பட்ட நசீர் குதிரையை வேகமாக ஓட்டிக்கொண்டு சென்றான். சிறிது தூரம் சென்றதும் பெரிய பெரிய குதிரைகளின் மீது, ஏழெட்டு முரடர்கள் அவனை நோக்கி வேகமாக வந்தனர். நசீர் தனது வாளை எடுப்பதற்குள் அவர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டனர். அவர்களைப் பார்ப்பதற்கே பயங்கரமாக இருந்தது. ஒவ்வொருவனுடைய கையிலும் பளபளக்கும் வாட்கள் இருந்தன. அவர்கள்




அவனிடமிருந்த பணத்தையும், வாளையும் பறித்துக் கொண்டனர். பின்னர் ஒருவன் அவனிடமிருந்த குதிரையையும் பறித்தான். நசீர் அந்தக் கொள்ளைக்காரர்களிடம் தன்னுடைய கதையைக் கூறி, பணத்தையும், வாளையும் எடுத்துக் கொண்டு தன்னையும், குதிரையையும் விட்டு விடும்படி கெஞ்சினான். நசீரின் தந்தை பெரிய பணக்காரர் என்று தெரிந்ததும் கொள்ளைக் கூட்டத்தினர் மனதில் ஒரு சதித்திட்டம் உருவாகியது. அவனைப் பிடித்து வைத்துக் கொண்டு அவனது உயிருக்கு ஈடாக நசீரின் தந்தை கலீபாவிடம் பணம் பறிக்க திட்டமிட்டனர். எனவே நசீரை விடவில்லை. அவனது கைகளைக் கட்டி தங்கள் இருப்பிடத்திற்கு கொண்டு சென்றனர்.

அந்தக் கொள்ளைக் கூட்டத்தினர் காட்டின் ஒரு பகுதியில் கூடாரங்கள் அமைத்து தங்கியிருந்தனர். கொள்ளையர்கள் நசீரை அவர்கள் தலைவன் முன்பாக கொண்டு போய் நிறுத்தினார்கள். கொள்ளைக் கூட்டத் தலைவன் மிக அழகான ஒரு கூடாரத்தில் தங்கியிருந்தான். அந்த கூடாரம் பாசிகளாலும், மணிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. கூடாரத்தின் ஒரு மூலையில் பெரிய பெரிய பஞ்சு மெத்தைகளும், தலையணைகளும் போடப்பட்டிருந்தன. அதன் மீது ஒரு வயதான கிழவன் தலையணையில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டு உக்காவில் புகையை உறிஞ்சிக் கொண்டிருந்தான். அவன்தான் கொள்ளைக் கூட்டத்தின் புதிய தலைவன் முஸ்தபா. நசீரைப் பிடித்துக் கொண்டு வந்தவர்கள் தலைவன் முன்பாக கொண்டு வந்து நிறுத்தினார்கள். நசீரும் முஸ்தபாவிடம் கெஞ்சிப் பார்த்தான். ஆனால் முஸ்தபா இணங்கவில்லை. நசீரைக் காவலில் வைக்கும்படி கட்டளையிட்டான்.


– தொடரும்


கபிஷ்
அந்த அடர் கானகம் அருமையான விலங்குகள் பலவற்றின் சரணாலயம். ஒற்றுமையாகவும் நேசபாவத்துடனும் பழகும் அவைகளில் குட்டிக் குரங்கு கபிஷ், கரடி பலூச்சா, குட்டிமான் பிந்து, குட்டியானை பண்டிலா போன்றவை குறிப்பிடத் தக்க மிருகங்களாகும். அவை வாழும் விந்தைக் கானகத்திற்கு சில சமயம் மனிதர்களும் விஜயம் செய்வதுண்டு. ஆனால் அங்கே அடிக்கடி வரக்கூடிய ஒரே மனிதன் வேட்டைக்காரன் ரங்கையா.
நண்பரே, அதோ குட்டிமான் பிந்து, சுட்டு வீழ்த்து!
காயமில்லாமல் பிடிப்பதும் நல்லதுதான்.
ரங்கையா, குட்டிக்குரங்கு கபிஷையும் பிடிக்கவேண்டும்.
முதலில் பிந்துவை வண்டிக்குள் போடுவோம்.
அதேசமயம் சடாரென நின்றது பிந்து—
கபிஷின் குரல் காதில் விழுகிறது ஆனால் கண்களுக்குத் தட்டுப்படவில்லையே.
சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டான் வேட்டைக்காரன்...
டுமீல்!
கதவைப் பூட்டிவிடுவோம்..
ஆனால் கதவைச் சாத்துமுன்—
ரங்கையா, ரங்கையா! நீ சொன்ன குரங்கு இதுதானே?
...அப்பாவி பிந்து தரையில் சாய்ந்தது.
கொன்றுவிட்டாயென்று நினைக்கிறேன்!
அதேசமயம் பிந்துவைச் சந்திப்பதற்காக அங்கு வந்து சேர்ந்த கபிஷும், பலூச்சாவும் திடுக்கிட்டு நின்றன!
கடவுளே! பிந்துவைக் கொன்றுவிட்டானே பாவி.
கதவைத் தாழிட மறந்தவனும் விரைந்தோடி வந்தான் ரங்கையா.
ஆம். கபிஷேதான். பழம் சாப்பிடுவதில் கவனமாயிருக்கிறது, சுட்டுத்தள்ளு!
சற்று நெருங்கிச் செல்ல, வேட்டைக்காரர்களின் உரையாடல் அவர்கள் காதில் விழுந்தது.
இந்தத் துப்பாக்கி கொல்லாது. வெறும் மயக்கத்தை உண்டாக்கும். எனது எஜமானர் சின்ன ராஜாவின் மிருகக் காட்சிசாலைக்கு உயிரோடு மிருகங்களைப் பிடிக்கவேண்டும்.
கபிஷ் நிம்மதிப் பெருமூச்சுவிட்டது.
அப்பாடா, பிந்து சாகவில்லை! எப்படியும் அதை நாம் காப்பாற்றி விடலாம். அருகில் வா... கிக...கிக...கிக...
பலூச்சா பயத்துடன் பார்த்துக்கொண்டிருந்தது.
என் அருமை நண்பனுக்கு ஆபத்து எதுவும் ஏற்பட்டுவிடக் கூடாது.
டுமீல்!

(3)


இங்கே சருகுக் குவியலின் மேல் 'பொத்'தென்று விழுந்தது கபிஷ்.
அதை விழச் செய்து விட்டேன்.
உண்மையில் தாக்குதலுக்கு ஆளாகவில்லை கபிஷ். ஆனால் பாசாங்கு செய்தது.
என்னை நோக்கி வருகிறான்.
வேட்டைக்காரன் தோளில் தூக்கிப் போட்டுக்கொண்டு...
.. வேனை நோக்கிச் செல்ல, மெதுவாகத் தன் வாலை வளர்த்தது கபிஷ்.
ஹோ! கானகத்தின் படர்கொடிகள் காலைச் சுற்றி நடக்கவிடாமல் தடுக்கின்றனவே!
அதேசமயம், புதர் மறைவிலிருந்து கவனித்துக்கொண்டிருந்த பபூச்சா தன் தோழனை எண்ணி வருந்தியது.
இனியும் தாமதித்தால் ஆபத்து! கபிஷையும் உன்னை தள்ளிக் கதவைப் பூட்டிவிடுவார்கள்!
ஐயோ, மீண்டும் கரடி வருகிறது!
திரும்பிய வேட்டைக்காரன் அருகே பபூச்சா நிற்கக் கண்டான்.
கரடி மிகவும் ஆபத்தானது. நான் அதைக் கொன்றுவிடுகிறேன்.
வேண்டாம், ரங்கையா. உயிரோடு பிடித்து விடுவோம்.
வேட்டைக்காரன் துப்பாக்கி விசையைத் தட்ட முயன்ற வேளையில் —

(4)


...கபிஷின் வால் அவனது கரத்தைச் சுற்றி இழுத்தது.
இலக்குத் தவறி ரங்கையாவின் தலையில் தாக்கியது.
கடவுளே, ரங்கையாவைச் சுட்டு விட்டேனே. காட்டின் படர்கொடிகள் விநோதமானவை. சந்தர்ப்பம் தெரியாமல் வகையைச் சுற்றுகின்றன.
ஆ..ஆ
தான் ஆபத்தில் சிக்கிக்கொண்ட விஷயம் சடாரெனப் புரிந்தது வேட்டைக்காரனுக்கு.
ஐயோ, கரடி விரட்டுகிறதே!
கபிஷை கீழே போட்டுவிட்டு தப்பித்தோம் பிழைத்தோமென ஓடினான் வேட்டைக்காரன்...
...எதிர்ப்பட்ட மரம் ஒன்றில் சரசர வென ஏற முயல...
என் துப்பாக்கியையும் பறித்துக்கொண்டதே... என்ன செய்வது நான்?
அரை மணி நேரத்திற்குப் பின் —
பிந்து, உனக்கு ஒன்றும் இல்லையே?
நலமாக இருக்கிறேன். ஆனால் எங்கே இருக்கிறேன்!
பபூச்சா! ரங்கையா எழுந்திருக்கு முன் நாம் சென்றுவிடுவோம்.
வெகு தொலைவு சென்றதும் ஒரு மரத்தடியமர்ந்து தாங்கள் ஆபத்தின்றி தப்பியதைப் பேசிப் பேசி மகிழ்ந்தன மூன்றும்.
முற்றும்

# டர்ர்க்... டர்ர்க்... நரி

பொன் அரசு



எப்போதும் எல்லோரையும் ஏமாற்றிக்கொண்டு வாழலாம் என்று, ஒரு குள்ள நரி நினைத்திருந்தது. தன்னுடைய தந்திரத்தின் மீது அதற்கு அவ்வளவு நம்பிக்கை.

வழக்கம் போல அன்றும் தனது பையை எடுத்துக்கொண்டு வெளியே புறப்பட்டது குள்ள நரி.

இன்றைக்கு என்ன. செய்யலாம் என்று நரி யோசித்துக்கொண்டு நடந்த போது, ஒரு சிட்டுக்குருவி பறக்க முடியாமல் நரியின் பைக்குள் வந்து விழுந்தது.

பையை மூடிப் பிடித்தவாறு குள்ள நரி நடந்தது. நடந்தது டர்ர்ர்க்... டர்ர்ர்க்... டர்ர்ர்க் என நடந்தது.

வழியில் ஒரு பெண் வீட்டின் முன்பு போய் நின்றது. ''நான் கொஞ்சம் வேலையாகப் போய்விட்டு வருகிறேன் அதுவரை இந்தப் பை இங்கேயே இருக்கட்டுமா?'' என்று கேட்டது.

அந்தப் பெண் ''சரி'' என்றாள்.

''ஆனால் ஒன்று இந்தப்பையைத் திறந்து பார்க்கக் கூடாது'' என்று சொல்லிவிட்டு குள்ளநரி புறப்பட்டது

பைக்குள்ளிருந்த சிட்டுக்குருவி வெளியே பறந்தது. அதைத்துரத்திக் கொண்டு அந்தப்பெண்ணுடைய சேவல் ஓடியது. குருவியைப் பிடிக்க முடியாமல் சேவல் திரும்பியது.

குள்ள நரி திரும்பிவந்து பையைப் பார்த்து ''என்னுடைய சிட்டுக்குருவி எங்கே?'' என்று கேட்டது

''குருவி பறந்து போச்சு! சேவல் துரத்திப்போய் திரும்பி வந்து விட்டது''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது குருவிக்குப் பதிலாக சேவலைக் கொடு!'' என்று சொன்ன குள்ள நரி சேவலைப்பிடித்துப்பைக்குள் போட்டுக் கொண்டு டர்ர்க்.. டர்ர்ர்க்...டர்ர்ர்க் என்று நடந்தது.

நடந்து போன குள்ளநரி மற்றொரு பெண் வீட்டின் முன்பு போய் நின்றது

''நான் கொஞ்சம் வேலையாக வெளியே போகிறேன். அதுவரை இந்தப்பை இங்கேயே இருக்கட்டுமா?''

''சரி!'' என்று சம்மதித்தாள் அந்தப் பெண்.

''ஆனால் ஒன்று. இந்தப்பையைத் திறந்து பார்க்கக் கூடாது'' என்று சொல்லி விட்டு குள்ள நரி சென்றது.



குள்ள நரி போனதும் சேவல் பைக்குள்ளிருந்து வெளியே வந்து ஓடிப் போயிற்று.

சேவலைத்துரத்திக் கொண்டு அந்தப் பெண் வளர்த்த வெள்ளைப் பன்றி ஓடியது. சேவலைப் பிடிக்க முடியாமல் திரும்பிவந்தது.

திரும்பி வந்த குள்ள நரி ''என்னுடைய சேவல் எங்கே?'' என்று கேட்டது.

''பையிலிருந்து சேவல் ஓடியதும் என்னுடைய பன்றி தேடிப்போய் ஏமாற்றத்தோடு வந்து விட்டது''

அதெல்லாம் எனக்குத் தெரியாது. சேவலுக்குப் பதிலாக வெள்ளைப் பன்றி வேண்டும்'' என்று சொல்லிக் கொண்டே பன்றியைப் பிடித்துப் பைக்குள்போட்டுக் கொண்டு குள்ளநரி டர்ர்ர்க்...டர்ர்ர்க்...டர்ர்ர்க் என்று நடந்தது.

நடந்த குள்ள நரி மற்றும் ஒரு பெண் வீட்டின் முன்பு நின்றது.

''நான் கொஞ்சதூரம் வரை போய் விட்டு வரவேண்டும் அதுவரை இந்தப்பை இங்கே இருக்கட்டுமா?''

''சரி'' என்று அந்தப் பெண்ணும் சம்மதித்தாள்.

''ஆனால் ஒன்று. இந்தப்பையைத் திறந்து பார்க்கக் கூடாது'' என்று சொல்லிவிட்டு குள்ள நரி சென்றது. நரி சென்றதும், பைக்குள்ளிருந்த வெள்ளைப்பன்றி வெளிவந்து ஓடியது அந்தப் பெண்ணின் ஐந்து வயதுப் பையன் அதைப் பிடிக்கத் துரத்தி ஏமாந்து திரும்பினான்.

குள்ள நரி வந்தது. ''எங்கே என்னுடைய வெள்ளைப்பன்றி?''

''பைக்குள்ளிருந்து வெளி வந்து ஓடிவிட்டது. பிடிக்கப்போன என்னுடைய மகன் பிடிக்கமுடியாமல் வந்து விட்டான்''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது என்னுடைய வெள்ளைப்பன்றிக்குப் பதிலாக இந்தப் பையனை எடுத்துக் கொள்கிறேன்'' என்று சொல்லி அவனைப் பைக்குள் போட்டுக் கொண்டு குள்ளநரி டர்ர்ர்க்... டர்ர்ர்க்.. டர்ர்ர்க் என்று நடந்தது.

நடந்த குள்ள நரி மற்றும் ஒரு பெண்ணின் வீட்டின் முன்பு நின்றது.

''நான் ஒரு நண்பனைப் பார்த்து விட்டு வருகிறேன். அது வரை இந்தப்பை இங்கே இருக்கட்டுமா?''

''சரி''

''ஆனால் ஒன்று, இந்தப்பையைத் திறந்து பார்க்கக் கூடாது.'' என்று சொல்லி விட்டு குள்ள நரி சென்றது.

அந்தப் பெண் மசால் வடை சுட்டுக்கொண்டிருந்தாள். அவளது மூன்று பெண்களும் இடது புறம் அமர்ந்திருந்தனர். அவள் வளர்க்கும் முரட்டு நாய் வலது புறம் உட்கார்ந்திருந்தது.

மசால் வடையின்மணம் மூக்கைத் துளைத்தது ''அம்மா அம்மா! எங்களுக்கு மசால் வடை தா!'' என்று சிறுமிகள் ஆவலோடு கேட்டார்கள்.

பைக்குள்ளிருந்த பையனும் ''மாமி மாமி! எனக்கும் மசால் வடை தா!'' என்றான்.



அப்போது தான் அந்தப் பெண் பையைத்திறந்து பார்த்தாள்.

சிறுவனை வெளியே எடுத்து விட்டு அதற்குப்பதிலாக தன்னுடைய முரட்டு நாயை வைத்து பையை மூடிவைத்தாள்.

குள்ள நரி திரும்பி வந்து பை கனமாகவே இருப்பதைப் பார்த்து மகிழ்வோடு தூக்கிக்கொண்டு ட்ர்ர்ர்க்... ட்ர்ர்ர்க்... ட்ர்ர்ர்க் என்று நடந்தது.

பையனைச் சாப்பிடுவதற்கு நல்ல இடமாகப் பார்த்து உட்கார்ந்து பையைப் பிரித்தது குள்ள நரி.

உள்ளேயிருந்த முரட்டு நாய் பாய்ந்து வெளியே வந்தது குள்ள நரியைக் கடித்துக் குதறி கொன்று விட்டது.

தன்னுடைய புதல்விகளுக்கும், பையனுக்கும் மசால்வடை கொடுத்துக் கொண்டிருந்தாள் அந்தப்பெண்.

குள்ள நரியைக் கொன்று விட்டு வந்த நாய்க்கும் மசால்வடை கொடுத்தாள்.

# வானமும் பூமியும்

பூபாலன் பெரிய அறிஞர். அறிஞரென்றால் வானமண்டல ஆராய்ச்சியில் பேரறிஞர் வானத்தில் எத்தனை நட்சத்திரங்கள் இருக்கின்றன, அவற்றுக்கு என்ன பெயர்கள் அவை எப்போது தோன்றும், மறையும், என்பதெல்லாம் பூபாலனுக்கு மனப்பாடமாகத் தெரியும்.

இரவிலும் பகலிலும் எப்போதும் வானத்தையே பார்த்துக் கொண்டிருப்பார்.

நட்சத்திர அறிஞர்' என்று ஊர் மக்கள் அவரை அழைத்தனர்.

யாருடன் பேசினாலும் நட்சத்திரங்களைப்பற்றியே அவர் பேசுவார் சாதாரண விஷயங்களைப் பற்றியாராவது பேசினால் அவர் கேட்கமாட்டார்.



நட்சத்திரங்களைப் பற்றி பேசினால் தான் கேட்பார்.

ஒரு நாளிரவு வானத்தில் லட்சக் கணக்கான நட்சத்திரங்கள் மின்னின பூபாலனுக்கு அளவில்லா மகிழ்ச்சி.

மகிழ்ச்சிப் பெருக்கோடு நட்சத்திரங்களை எண்ணிக் கொண்டும் அவற்றின் பெயர்களை நினைவுபடுத்திக் கொண்டும் தெருவில் நடந்து போனார் பூபாலன்.

வானத்தைப் பார்த்துக் கொண்டே நடந்துபோன பூபாலன் தெருவோரத்தில் இருந்த சாக்கடைக் குழியில் பொத்தென்று விழுந்து விட்டார். அது ஆழமான படுகுழி.

''உதவி செய்யுங்கள்! உதவி! உதவி! யாராவது என்னைத்தூக்கி விடுங்கள்'' என்று சாக்கடைக் குழியிலிருந்து கூக்குரல் போட்டார் பூபாலன்.

தெருவில் நடந்து போன ஒருவன் பூபாலனை குழியிலிருந்து தூக்கி கரையேற்றி விட்டான்.

அவன் பெயர் காடன்; படிக்கத் தெரியாதவன். காடன் சொன்னான்; ''அறிஞரே! நீங்கள் எப்போதும் வானத்தின் நட்சத்திரங்களையே பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள். பூமியின் படுகுழிகளையும் பார்த்தால் என்ன? நீங்கள் பேரறிஞர்! பெரிய பெரிய விஷயங்களைப் பற்றியே யோசிக்கிறீர்கள். வாழ்க்கையின் சாதாரண விஷயங்களைப் பற்றியும் யோசித்தால் தான் நல்லது''

அறிஞர் பூபாலன் வெட்கத்தால் தலை குனிந்தார்.



வாரமலர்

மலர்: 1
இதழ்: 2
21-11-1982

அன்பான செல்வங்களே!

உங்களது மனோவேகத்திற்கு இணையாக மின்னல் வேகத்தை ஒப்பிட்டுப் பார்ப்பது பொருந்துமா? யோசிக்கும்போதுதான் நிச்சயமாகப் பொருந்தாதுஎன்பது விளங்குகிறது!

முதல்இதழைக்கண்ணுற்றதுமே பாராட்டுக் கடிதங்களை எழுதி அனுப்பிக் குவித்த உங்களின் மனோவேகத்திற்கு இணையாகச் சொல்ல எதுவும் இருப்பதாகத் தோன்றவில்லை.

அதைப் போலவே, உங்கள் கடிதங்கள் எனக்கு வழங்குகின்ற மனம்கொள்ளாத மகிழ்ச்சிக்கு இணையாக எதையும் ஒப்பிட்டுச் சொல்ல முடியாது.

நமக்கிடையே நிலவும் இந்த எல்லையற்ற குதூகலம் என்றும் நிலைத்து விளங்க இறைவனிடம் வேண்டிக்கொள்வோம்.

முதல் இதழிலேயே அப்பு உங்களது நெஞ்சங்களில் இடம்பிடித்துக் கொண்டான் என்பது - அவனுக்கு வந்த ஏராளமான கேள்விகளிலிருந்தே தெரிகிறது. அவன் பாடு-உங்கள் பாடு!


அப்பு சிறந்த சிந்தனையாளன் அல்லவா! சிந்தித்துப் பதிலளிக்க சிறிது அவகாசம் கேட்கிறான். சற்று அவகாசம்தான் கொடுத்துப் பார்ப்போமே!

அன்புடன்,

முல்லை தங்கராசன்


வன ராஜா
கப்பலின் மேல் தளத்தை அவர்கள் அடைவதற்கும் அபாயமணி ஒலிப்பதற்கும் சரியாயிருந்தது!
நாம் தப்பியது அவர்களுக்குத் தெரிந்து விட்டது!
தனித்தனியே தப்பிச்செல்ல வேண்டியதுதான்
மூவரும் கடலில் பாய்ந்தனர்—
அதோ! அவர்கள்தான்! சுடுங்கள்!
இருண்ட கரிய நீர்ப்பரப்பின் மேல் ஒளிவெள்ளத்தைப் பாய்ச்சித்தேடினர்.
ஸார்! நம்மால் அவர்களைக் கண்டு பிடிக்கமுடியாது.
நினைத்தபடி நடக்கவில்லையே!
நீரினுள் மூழ்கியிருந்த மூவரும் சுவாசிக்க வேண்டி தலையை மெதுவாக நீரின் வெளியே நீட்டினர்.
ஒருவழியாய் விடுதலை கிடைத்துவிட்டது!
நன்றாக மூச்சு வாங்கிக்கொண்டு தொடர்ந்து நீந்துங்கள்!
கப்பலை முழு வேகத்தில் செலுத்துவோம்! கரையை அடைந்து அங்குள்ளோரின் உதவியை நாடவேண்டும். தப்பிய திருடர்களைப் பிடிக்க!
பலமணிநேரம் அலைகளுடன் போராடிய அவர்கள் களைத்துப்போயினர்.
உதவி! யாராவது உதவுங்களேன்!
விரைவிலேயே சூரியத் தீவில் கடற்கரைமணலில் அரை குறையாக நினைவிழந்த நிலையில் கிடந்தனர் மூவரும்.
தொடரும்



உள்ளே இருக்கும் வெள்ளைப்புள்ளியை அடைய வழிகாட்டவேண்டும். அவ்வளவுதானே என்று பென்சிலை எடுத்துக் கொண்டீர்கள் இல்லையா? சரி, மூளையைக் கசக்குங்கள்!

# திருடன் திம்மராயன்

முன்னொரு காலத்தில் கும்பராப்பா என்னொரு நாடு இருந்தது. கும்பரப்பா நாட்டை அம்பரப்பா என்ற அரசர் ஆண்டு கொண்டிருந்த போது இந்தக் கதை நடந்தது.

ஒரு நாளிரவு அரசர் அம்பரப்பா அரண்மனைக்குள் திருடன் ஒருவன் கன்னக்கோல் வைத்து புகுந்து விட்டான். பொக்கிஷ அறையில் புகுந்த திருடன் திம்மராயன் ஏராளமான நகைகளையும் பொற்காசுகளையும் தன் பைக்குள் அள்ளிப்போட்டுக் கொண்டு வெளியேறிய போது கெட்டிக்கார காவலன்காத்தவராயன் எட்டிப்பிடித்து விட்டான்.

விடிந்ததும் காத்தவராயன் திருடன் திம்மராயனை அரச சபையில் நிறுத்தினான்.

அரசர் அம்பரப்பா நீதி தவறாதவர்; யாரையும் விசாரணை செய்யாமல் தண்டிக்கமாட்டார். திம்மராயனை விசாரித்தார்.

"திருடுவது குற்றம் இல்லையா?"

"குற்றம் தான் பிரபோ!"

"அப்படியானால் நீ குற்றவாளி தானே?"

"இல்லை! மகாராஜா!"

அரசர் அம்பரப்பாவின் புருவங்கள் உயர்ந்தன. "திருடினேன் என்கிறாய் குற்றவாளி இல்லை என்கிறாய்! என்ன இது குழப்பம்?"

"அரண்மனைச் சுவரில் எனது கன்னக்கோலை வைத்தேன். வைத்தவுடன் சுவரில் சுலபமாக ஓட்டை விழுந்துவிட்டது. எனவே, அந்த மாதிரி அரண்மனையைக் கட்டிய கொத்தனார் தான் குற்றவாளி" என்றான் திம்மராயன்.

"கொத்தனார் குப்புசாமியைக் கொண்டு வாருங்கள்" அரசர் அம்பரப்பா உத்தரவிட்டார். அவர் நீதி தவறாதவர். யாரையும் விசாரணையின்றி தண்டிக்கமாட்டார்.

கொத்தனார் குப்புசாமி வந்தார்.

"அரண்மனைச் சுவரை சுலபமாக கன்னம் வைக்கும் தன்மையில் கட்டியது குற்றமா இல்லையா கொத்தனாரே?" அம்பரப்பா கேட்டார்.

"இல்லை! மன்னவா!"

"அதெப்படி?" அரசரின் புருவங்கள் உயர்ந்தன.

"மாளிகை வேலைக்காக இளைஞன் இன்பதாசனை நியமித்திருந்தேன். அவன் தான் சுவர் கட்டும் சுண்ணாம்புக் கலவையை மோசமாகக் கலந்திருக்கிறான். எனவே அவன் தான் குற்றவாளி" என்றார் கொத்தனார் குப்புசாமி.

"இன்பதாசனை இழுத்து வாருங்கள்" என்று அரசர் அம்பரப்பா கட்டளையிட்டார். அவர் நீதி தவறாதவர்; யாரையும் விசாரணையின்றி தண்டிக்கமாட்டார்.

காவலர்கள் இளைஞன் இன்பதாசனைப் பிடித்துவந்தனர்.

"நீ குற்றவாளிதானே?" அரசர் கேட்டார்.

"அரசர் பெருமானே! நான் குற்றவாளி இல்லை!"

"அதெப்படி?" அரசரின் புருவங்கள் உயர்ந்தன.

"சுண்ணாம்புச் சாந்தை நான் கலந்து கொண்டிருக்கும் போது அழகி அம்சவல்லி சாலையில் நடந்து போனாள். அவள் அழகில் மயங்கிப் போனேன். கலவையில் கூடுதலாக மணல் கலந்து விட்டது. எனவே குறுக்கே நடந்து போய் என் கவனத்தைத் திருப்பிய அழகி அம்சவல்லி தான் குற்றவாளி" என்றான் இளைஞன் இன்பதாசன்.


"அழகி அம்சவல்லியை அழைத்து வாருங்கள்" அரசர் அம்பரப்பா உத்தரவிட்டார். அவர் நீதி தவறாதவர். விசாரிக்காமல் யாரையும் தண்டிக்க மாட்டார்.

"பெண்ணே, குற்றவாளி தானே நீ"

"இல்லை அரசே!" அரசரின் புருவங்கள் உயர்ந்தன.

"அந்த நேரத்தில் என் நகையைத் தருவதாக பொற்கொல்லர் பொன்னுசாமி சொல்லியிரா விட்டால் நான் அந்தச்சாலையில் அந்த நேரம் நடந்து போயிருக்க மாட்டேன் எனவே பொற்கொல்லர் பொன்னுசாமிதான் குற்றவாளி." என்றாள் அழகி அம்சவல்லி.

"பொற்கொல்லர் பொன்னுசாமியைப் பிடித்துவாருங்கள்" அரசர் அம்பரப்பா உத்தரவிட்டார். அவர் நீதி தவறாதவர். விசாரிக்காமல யாரையும் தண்டிக்கமாட்டார்.



''குற்றவாளி தானே நீ?'' பொற்கொல்லர் பொன்னுசாமியை அரசர் அம்பரப்பா கேட்டார்.

பொன்னுசாமி பதில் பேசாமல் அமைதியாக இருக்கவே அவர் குற்றவாளிதான் என்று அரசர் தீர்மானித்து தீர்ப்பு வழங்கினர்; ''மௌனத்தின் மூலம் குற்றவாளி பொன்னுசாமி தன் தவறை ஒப்புக் கொண்டு விட்டான். எனவே, இவனை பாறையில் கட்டிப் போட்டு அரண்மனை யானையை முன் நிறுத்துங்கள். அது தும்பிக்கையால் இந்த துஷ்டனின் வயிற்றில் அடித்துக் கொல்லட்டும்''

அரசர் உத்தரவைக் கேட்டதும் அரண்மனைக் காவலர்கள் இருவர் ஓடிவந்து பொன்னுசாமியைப் பிடித்துக் கொண்டனர்.

அப்போது பொற்கொல்லர் பொன்னுசாமி அழத் தொடங்கினர்.

''ஏன் அழுகிருய்?'' அரசர் கேட்டார்.

' எனக்காக அழவில்லை அரசே! அரண்மனை யானையை நினைத்து அழுகிறேன்!''

''என்ன?''

''அரண்மனை யானை அழகானது. உங்கள் அன்புக்குரியது. பாறையில் கட்டப்பட்டிருக்கும் என் ஒடுங்கிய வயிற்றில் தும்பிக்கையால் யானை அடித்தால் அந்த தும்பிக்கை பாறையில் பட்டுவிடும். தும்பிக்கைக்கு பலமான அடிபட்டு காயம் ஏற்பட்டு அப்புறம் காய்ச்சல் வந்து யானை செத்துப்போகுமே அதை நினைத்துத் தான் அழுகிறேன்''

''அப்படியானல் தண்டனையை எப்படித்தான் நிறைவேற்றுவது?''

''வரும் வழியில் கோயில் அருகில் பானைபோல் வயிருள்ள பங்காருசாமியைப் பார்த்தேன். அவனைப் பாறையில் கட்டிப்போட்டு அடிக்கச் சொன்ஞல் யானையின் தும்பிக்கைக்குகாயம் படாது அரசே!'' என்ஞர் பொற்கொல்லர் பொன்னுசாமி.

## செல்வம்

''அதுதான் நல்லவழி! அப்படியே செய்யுங்கள்!'' என்றுகாவலர்களுக்கு அரசர் அம்பரப்பா உத்தரவிட்டார்.

பானை வயிறு பங்காருசாமியைக் காவலர்கள் பிடித்துக்கொண்டு வந்தார்கள்.

பங்காருசாமியையும் அவனது பானைபோல வயிற்றையும் பார்த்த திருடன் திம்மராயனுக்குச் சிரிப்பு வந்தது. அநியாயமாக அவனைக் கொல்லப்போகிருர்களே என்று திம்மராயன் வருத்தப்பட்டான்.

''அரசே!'' என்ருன் திம்மராயன்

''என்ன?''

இவனது பானைவயிறே பாறை மாதிரி இருக்கிறதே!''

''அதனல் என்ன?''

''இந்தப் பாறை வயிற்றில் அடித்தால் யானையின் தும்பிக்கையில் காயம் ஏற்படுமே!'' என்ருன் திம்மராயன்.

''ஆமாம்! ஆமாம்! ஆனலும் நான் நீதி தவருதவனயிற்றே இந்த வழக்கில் எப்படி தீர்ப்புச்சொல்வது?''

திம்மராயன் சொன்னன்:

''இந்த வழக்கில் மட்டும் மரண தண்டனைக்குப் பதிலாக சிறை தண்டனை கொடுத்துவிடுங்கள். ஏனென்ருல் யானைக்கு வலிக்கும்''

''ஆமாம் அப்படியே செய்யலாம்'' என்ருர் அரசர் அம்பரப்பா. அவர் நீதி தவருதவர்.

பானை வயிறு பங்காரு சாமிக்கு சிறையில் மூன்று வேளையும் சோறு கிடைக்கும் என்று சந்தோஷம். திருடன் திம்மராயன் நிம்மதியாக வீடு போய்ச் சேர்ந்தான்.



லஞ்சம் வாங்கிய ராமசாமியை வேலையைவிட்டு நீக்கிவிட்டார்களே, இப்ப என்ன பண்ருன்?

'லஞ்சம் வாங்க லட்சம் வழிகள்' ன்ன ஒரு புத்தகம் எழுதினுன். லட்சக் கணக்கான பிரதிகள் விற்பனை ஆயிட்டிருக்கு!

-இரத்தினம்



அப்பா..என்னோட..பஞ்சவர்ணம் ங்கிற பேரை மாத்தனும்.

ஏன்டா அது நல்லாத்தானே இருக்கு?

எல்லோரும் சுருக்கமா பஞ்சம்னு கூப்பிடுருங்க!

-ஆர். பி. ராஜ்



வருங்காலத்திலே உங்க மகன் பெஞ்ச் கோர்ட்டிலே பிரூஞக இருப்பான்!

எப்படி சொல்றீங்க?

தினசரி பெஞ்ச்மேலே நின்னு ஒரே செய்யுளை மூனு தடவை வாசிக்கிருன்!

-ஆர். பி. ராஜ்

சென்ற வாரப் புதிர்களுக்கு விடைகள்...



Printed and Published by A. M. Thiyagharajhan at Muthu Comics, P. Box No 253, Chairman P. K S. A A. Road, Sivakasi. Editor: M. Saundrapandian.


அதிமேதை அப்பு
சித்திரம் - செல்வம்.
ம்... எனக்கு ஞாபக சக்தி அடியோடு போயிடிச்சுங்கற மாதிரி நடிக்கப் போறேன்... அதான் சரியான வழி
இவனுக்கு என்ன ஆச்சு!
மறந்துடுச்சம்மா...
சரி... சரி... சமர்த்தா ஸ்கூலுக்குப் போயிட்டு வா.
டேய்... டேய்... நில்லுடா... ஸ்கூல் அந்தப் பக்கமா இருக்கு?
பின்னே... இந்தப் பக்கமா இருக்கு?
யார்ரா... இவன்?
டாக்டர் வீடு
தம்பி... இங்கே வா...
அது நானில்லே.
அப்பாடா...


இளம் செல்வங்களின் இதயம்
கவரும் இனிய இதழ்!
28.11.82
60
காசு
முத்து காமிக்ஸ்
வாரமலர்
பதிப்பாசிரியர்:
முல்லை தங்கராசன்


ஒற்றைக்கண் மர்மம்.3
மறுவினாடி...முழுவதுமாக உருகி மறைந்தே போய்விட்டது கார்!
ஹே.. திருத்து! என்னை யாராவது காப்பாற்றுங்களேன்!
சட்டென்று அந்த ஒளிக்கற்றை சுவடு இல்லாமல் மறைந்துவிட்டது!
காற்றில் மேகம் கலைந்ததுபோல் கார் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டதே!
அதிர்ந்துபோன மாயாவி முன்னால் நடந்தார்.
முதலில் அந்த ராட்சஸ கண்.. இப்போது இந்த ஒளிக்கற்றை.. ஒருவேளை கார் இங்கேஎங்காவது மறைவில் ஒதுங்கி யிருக்குமோ?
கார மாயமாய் மறைந்துபோன இடத்தை அவர் சமீபித்ததும்—
நான் எங்கே இருக்கிறேன்... யாராவது எனக்கு உதவுங்களேன்!
எங்கேயிருந்து வருகிறது குரல்-?
கீழே குனிந்து குரல்வந்த இடத்தை உற்று நோக்கினார் மாயாவி.
நம்பமுடியவில்லையே! இது...இது—
காணுமற்போன காரும அதை ஓட்டி வந்தவரும் மாயாவியின் காலடியிலேயே 'மினி' உருவில்.
சித்திரக்குள்ளன் மாதிரி இவரும், விளையாட்டுக் கார் மாதிரி இவருடைய காரும்— மாயமா? மந்திரமா?



மாயாவியின் முணுமுணுப்பு அந்த நபரின் காதில் விழுந்திருக்கவேண்டும்...
ஆ...! ராட்சஸன்!
அந்த சித்திரக்குள்ள ஆசாமி மாயாவியைக் கண்டு மிரண்டு ஓடலானார்...
என்னை விட்டுவிடு...
ஓடாதே...நில்! நான் உனக்கு உதவி செய்யவே வந்திருக்கிறேன்!
அந்த ஆசாமி நிற்பதாக இல்லை...தன் உயரம் இருந்த செடிகொடிகளை விலக்கிக்கொண்டு வெறித்தனமாக ஓடினார்!
நில்... நில்!
திடீரென்று ஏதோ 'விஷ்' என்ற ஓசையோடு சுழன்று வந்தது!
ஆ...ஆ
அந்த ஆசாமிக்கு நேர்ந்த கதியை அறியாத மாயாவி செடிகொடிகளுக்கிடையே தேடி அலுத்துப்போனார்...
எங்கே போனான்...? வைக்கோல் போரில் ஊசியைத் தேடிய கதையாகிவிட்டது... என்னுடைய சுயவுருவமும் திரும்புகிறது!
மாயாவி மீண்டும் சாலையை வந்தடைந்தபோது காலடி யோசைகள் நெருங்கி வருவதைக் கேட்டு நின்றார்.
ஹலோ...யாரது! சார்லியா?
கிராமவாசிகள்... கூடவே ஒரு போலீஸ் கான்ஸ்டபிள்!
யாரையோ தேடுகிறார்கள் போலிருக்கிறது... அவர்கள் கண்ணில் என் இரும்புக்கை பட்டால் தேவையில்லாத பிரச்னை எழக்கூடும்!
ஹேய்...!
மாயாவி ஓடத் தொடங்கியதும் சந்தேகமுற்ற கூட்டம் அவரை துரத்தத் தொடங்கியது...
அவன் சார்லி இல்லை!
அவன் ஏதோ தப்பு பண்ணியிருக்கிறான்... இல்லாவிட்டால் ஏன் பயந்தோட வேண்டும்!
சார்லி ஏன் வீடு திரும்பவில்லை என்ற விபரம் இவனுக்கு தெரிந்திருக்கும்!
மாயாவியை பின்தொடர்ந்து ஓடிய வேளையில் கலங்கரை விளக்கத்தின் உச்சியிலிருந்த ஒரு கோளம் 'ஹூம்' என்ற ரீங்கார ஓசையோடு இயங்கத் தொடங்கியது...
தொடரும்

## கிள்ளுவரும் மூடர்களும்



கிள்ளிவளவன் கிள்ளிவளவன் என்று ஒருவர் அந்தக் காலத்தில் வாழ்ந்து வந்தார். ஏராளமான நூல்களைப் படித்திருப்பதால் தன்னை ஓர் அறிவாளி என்றே அவர் நம்பி வந்தார்.

அந்த ஊர் மக்கள் அவரை கிள்ளுவர் என்று கூப்பிட்டு வந்தார்கள்.

''வள்ளுவர் போல அறிஞர் என்பதால்தான் தன்னை மக்கள் கிள்ளுவர் என்று அழைப்பதாக அவர் நம்பினார். திருவள்ளுவர் போலவே தாடியும் மீசையும் குடுமியும் வைத்துக் கொண்டார். கிராமத்து மக்கள் படிக்காத மூடர்கள் என்பது கிள்ளுவரது கருத்து.

ஒருநாள் கிள்ளுவர் கிராமத்து மாரியம்மன் கோயில் திருவிழாவுக்குப் போனார். அங்கே ஓரிடத்தில் கிராம வாசிகள் இரண்டு ஆடுகளை சண்டையிட வைத்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

இரண்டும் முரட்டு ஆடுகள். அவற்றுக்கு நீளமான கொம்புகள்.

கிள்ளுவருக்கு கோபம் வந்தது. ''மூடர்களே! வாயில்லாப் பிராணிகளை மோதவிட்டு வேடிக்கை பார்க்கிறீர்களே'' என்று சத்தம் போட்டார்.

செவலை நிறத்தில் ஓர் ஆடு. சத்தம் போடும் கிள்ளுவரைப் பார்த்தது. தாடியும் மீசையுமாக இருந்த அவரைக் கண்டதும் அந்த ஆட்டுக்கு வித்தியாசமாகப் பட்டது. அவர் மீது பாய்ந்து முட்ட வேண்டும் என்று அந்த ஆடு நினைத்தபடி. சண்டை போடுவதை நிறுத்தியது.

கிள்ளுவரைப் பார்த்தவாறு பின்வாங்கி முன்னங் கால்களை மண்டியிட்டது.

கிள்ளுவருக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. ''மூடர்களே! பார்த்தீர்களா? சான்றோரான என்னைக் கண்டதும் அந்த ஆடு பணிவாக மண்டியிட்டு வணக்கம் சொல்லுவதைப் பாருங்கள்'' என்றார்.

கிராமவாசிகளில் ஒருவன் சொன்னான்; ''ஐயா! அது வணக்கம் சொல்லவில்லை. உங்கள் மீது முட்டி மோத தோது பார்த்து பதுங்குகிறது. தயவு செய்து விலகி ஓடிப் போங்கள்'' என்றான்.

கிள்ளுவருக்கு கோபம்; ''மூடர்களே! பிராணிகளின் இயல்புகள் உங்களுக்குப் புரியாது'' என்றார்.

முன்னங் கால்களை மண்டியிட்டு தோது பார்த்துக் கொண்டிருந்த செவலை நிற ஆடு குபீர் என கிள்ளுவர் மீது பாய்ந்து தன் முரட்டுக் கொம்புகளால் குத்தியது.

''ஐயா! அம்மா!'' என்று அலறியபடி கிள்ளுவர் கீழே விழுந்தார். செவலை ஆடு மீண்டும் பதுங்கிப் பாய்ந்தது.

கிள்ளுவரால் மூடர்கள் என்று வருணிக்கப்பட்ட கிராம வாசிகள் அவரைக் காப்பாற்றி தங்கள் குடிசைக்கு அழைத்துப் போனார்கள்.

அங்கே அவரது காயங்களுக்கு மருந்து தடவி கட்டுப் போட்டு விட்டார்கள்.

அதன்பின்னர் கிள்ளுவர் மிகவும் மாறிவிட்டார். அனைவரையும் மதிக்கக் கற்றுக் கொண்டார்.



## நன்றியுள்ள பச்சைக்கிளி

இமய மலைச் சாரலில் ஏராளமான அத்தி மரங்கள். ஓர் அத்தி மரத்தில் அழகான பச்சைக்கிளி வாழ்ந்து வந்தது. அந்த மரத்தின் அத்திப் பழங்களை உண்டும் கங்கையில் நீர் அருந்தியும் அந்தப் பச்சைக்கிளி மகிழ்ச்சியோடு வாழ்ந்தது.

அந்தக் கிளியை பரிசோதிக்க தேவதை ஒன்று விரும்பியது. தனது மந்திர சக்தியால் அந்த அத்தி மரத்தை பட்டுப் போகச் செய்தது. காய்ந்த கிளைகளும் துளைவிட்ட உடம்புமாக அந்த மரம் காட்சியளித்தது.

இருந்தாலும் பச்சைக்கிளி அந்த மரத்தை விட்டுப் பறந்துபோகவில்லை. மரம் பட்டுப் போனதை நினைந்து வருந்தியபடி அங்கேயே இருந்தது.

மூன்றாவது நாள் தேவதை அன்னப் பறவையாக மாறி பச்சைக்கிளியிடம் வந்தது. ''இந்த மரம் பட்டுவிட்டது. இனி துளிர்க்காது. கிளியே நீ எங்கேயாவது பறந்து போய்விடு'' என்றது.

''நான் எங்கும் போக மாட்டேன். இந்த மரத்தில் இருந்த கூட்டில்தான் நான் பிறந்தேன். பிறந்தது முதல் இந்த மரத்தின் பழங்களைத் தின்றே வளர்ந்தேன். எனவே எங்கும் நான் போகமாட்டேன். வாழ்ந்தால் இங்கேயே வாழ்வேன். செத்தால் இந்த மரத்தோடே சாவேன்'' என்று கண்ணீர் மல்கச் சொன்னது பச்சைக்கிளி.

அதன் நன்றி உணர்ச்சியைக் கண்டு தேவதை மகிழ்ச்சியடைந்தது. அன்னப் பறவை உருவிலிருந்து பழையபடி தேவதையாக மாறியது.

''கிளியே! நான் ஒரு தேவதை! உனக்கு ஏதாவது வரம் வேண்டுமானால் கேள்! தருகிறேன்'' என்றது தேவதை.

''எனக்கு வரம் தர விரும்பினால், எனது பிரியத்துக்குரிய இந்த அத்தி மரத்தை பழையபடி துளிர்விடும்படி செய்க!'' என்று பச்சைக்கிளி சொன்னது.

கங்கையின் நீரை ஏந்தி வந்த தேவதை அதை மரத்தின் மீது தெளித்தது.

மரம் பச்சைப் பசேல் என துளிர் விட்டுக் குலுங்கியது.

அந்த மரத்தின் பழங்களை உணவாகக் கொண்டு, கங்கையின் நீரைக் குடித்து பச்சைக்கிளி மகிழ்ச்சிகரமாக வாழ்ந்தது.



வாரமலர்

மலர் : 1
இதழ் : 3
28.11.1982

இனிய செல்வங்களே!

தந்திரக்கணக்கு, விடுகதை, எளிய குழந்தைப்பாடல் எல்லாம் சேர்க்க வேண்டுமென்ற உங்களின் விருப்பங்கள் நியாயமானதே!

ஆயினும் உடனே இவைகளை செயல்முறையில் நிறைவேற்ற இயலாத நிலையை தெளிவுபடுத்தவிரும்புகிறேன்.

வாரமலராக இருப்பதால் பல அம்சங்களை நினைத்தவுடன் இணைக்க இயலாது. சிலவாரங்களுக்குப்பின்னரே சாத்தியமாகும்.

ஏனெனில் ஆரம்பத்தில் முடிவு செய்யப்பட்ட பகுதிகள் முடிவுற்ற பின்னரே புதிய பகுதிகளைத் தொடங்க முடியும்.

இது மூன்றாவது இதழ்தானே! அடுத்தடுத்து உங்களின் விருப்பங்கள் அனைத்தும் நிறைவேற ஆவன செய்கிறேன். மகிழ்ச்சிதானே!

அன்புடன்
முல்லை தங்கராசன்



நாசகாரக் கும்பல்-3
தொடர்ந்து போ! அவர்கள் அதிக தொலைவு சென்றிருக்க முடியாது.
அதோ போகிறது வண்டி!
வண்டியின் வேகம் குறைகிறது. நமக்கு ஏதோ வலை விரிக்கிறார்கள் போலும்!
தாங்கள் விரட்டிவந்த காரைச் சென்றடைந்தனர் அந்தக் காவலர்கள்.
ஆனால்—
பறவைகள் பறந்துவிட்டன!
அதோ போகிறார்கள்!
நாமும் ஒரு படகில் அவர்களை விரட்டுவோம்!
எங்கே போகணும், ஸார் ?
விரட்டு அவர்களை!
தாங்களும் ஒரு மோட்டார் படகில் ஏறிக்கொண்டு பின்தொடர்ந்தனர் இன்ஸ்பெக்டர் கருடாவும், கான்ஸ்டபிள் பல்பீரும்.
இடைவெளி குறைகிறது!
ஆனால் அவர்கள் தப்பி ஓடுபவர்களாகத் தெரியவில்லையே..
...நான் நினைக்கிறேன் .. ஒருவேளை இந்தப் படகு...


கைப்பற்றப்பட்ட கருடாவும், பல்பீரும் தீவு ஒன்றினை நோக்கி அழைத்துச் செல்லப்பட்டனர்.
இறங்குங்கள் கீழே!
அந்த வீட்டை நோக்கி நடங்கள்!
யார் உங்கள் பாஸ்?
விரைவில் தெரிந்துகொள்வாய்!
போலீஸ்காரப் பசங்களை ஏன் அழைத்து வருகிறார்கள்?
கரைக்குச் சென்ற நம் ஆட்களை பின்தொடர்ந்து வந்திருக்கிறார்கள்.
அதுவுமில்லாமல் நம் ஐஸ்க்ரீம் திட்டமும் அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது!
நம் ரகசியத் திட்டம் அவர்களுக்கு எப்படித் தெரிந்தது?
அப்படியானால் நம்மில் யாரோ ஒரு உளவாளி இருக்கிறானென்றுதான் அர்த்தம்.
இதோ வந்துவிட்டனர்.
இங்குதான் ஐஸ்க்ரீம் தயாரிக்கிறார்கள் போலும்!
இவர்தான் தயாரிப்பாளராய் இருக்கவேண்டும்!
உட்காருங்கள்!
உயிர்மேல் ஆசையிருந்தால் பேசாமல் உண்மையைக் கூறிவிடுங்கள்... எப்படித் தெரிந்தது எங்களது திட்டம்?
பாஸ், நமது வெளிநாட்டு விருந்தினர் வந்துவிட்டார்.
தொடரும்.



# அதிரசப் பாட்டியும் அதிசய யாத்திரையும்

தங்கக் கண்மணி

அதிரசப் பாட்டி' 'அதிரசப் பாட்டி' என்று ஒரு பாட்டி இருந்த கதை உங்களுக்குத் தெரியுமோ? தெரிந்திருக்காது! ஏனென்றால் எனக்கே இப்போது தானே தெரிய வந்தது.

ரொம்பக் காலத்துக்கு முன்பு, அதாவது விநாயகக் கடவுளும் முருகப் பெருமானும் பிறக்காததற்கு முன்பு அரக்கர்களின் கொடுமை அதிகமாக இருந்த தல்லவா—அந்தக் காலத்தில், ஒரு பாட்டி இருந்தாள். அம்மிணி அம்மாள் என்பதுதான் அவள் பெயர். அவள் சுடும் அதிரசம் ரொம்பவும் சுவையாக இருந்ததால் அவளை 'அதிரசப் பாட்டி' என்றே சொல்லுவார்கள்.

அதிரசத்தைச் செய்து அவளே தின்பாள். யாருக்கும் கொடுக்க மாட்டாள். ஆறு அதிரசம் சுடுவாள் வேளைக்கு இரண்டாகச் சாப்பிடுவாள். நாலைந்து நாட்களாக அவள் சுட்டு வைக்கும் அதிரசங்களில் ஒன்றோ இரண்டோ காணாமல் போய்விடுவதைக் கண்டு பாட்டிக்குக் கவலை ஏற்பட்டது.

ஒருநாள் ஒரே ஒரு அதிரசத்தை தட்டில் வைத்துவிட்டு அது எப்படிக் காணாமல் போகிறது என்று கண்டு பிடிக்க ஒளிந்திருந்தாள்.

தட்டுக்குப் பக்கத்தில் தரையில் ஒரு துவாரம் தோன்றியது. அதற்குள்ளிருந்து கத்தரிக்காய் அளவில் கத்தரிக்காய்க்கு கையும் காலும் முளைத்தது போல ஒரு மனிதன் வந்தான். அவன் அதிரசத்தை எடுத்துக்கொண்டு துவாரத்துக்குள் நுழைவதை பாட்டி பார்த்து விட்டாள்.

முதலில் பயம். இருந்தாலும் பாட்டிக்கு அதிரசம்தான் உயிர்.

துவாரத்துக்குள் கையை விட்டாள். துவாரம் பெரிதாகிப் பெரிதாகி அதற்குள் பாட்டி பொத்தென்று விழுந்தாள்.

எழுந்து பார்த்தாள் பாட்டி. அது வேறு ஒரு உலகம். ''ஐயோ! என் அதிரசம்! ஐயோ! என் அதிரசம்'' என்று கத்திக்கொண்டே ஓடினாள்.

இரு இறக்கைகளோடு ஒரு தேவதை பாட்டியின் எதிரே வந்தது. ''ஏ! கிழவி! இங்கேயிருந்து ஓடிவிடு! இது அரக்கர்களின் உலகம். அரக்கர்கள் மனிதர்களைத் தின்றுவிடுவார்கள். போய்விடு.''

''ஐயோ என் அதிரசம்!'' என்று கத்திக்கொண்டே பாட்டி ஓடினாள்.

நான்கு இறக்கைகளோடு இன்னொரு தேவதை வந்தது. ''ஏ கிழவி! இங்கேயிருந்து போய்விடு! இது அரக்கர்களின் உலகம்! அரக்கர்கள் மனிதர்களைத் தின்று விடுவார்கள்! போய் விடு!''

பாட்டி மேலும் ஓடினாள். ''ஐயோ! என் அதிரசம்!''

ஆறு இறக்கைகள் கொண்ட பெரிய தேவதை எதிரே தோன்றியது. ''ஏ! கிழவி! ஓடிவந்து என் காலடியில் ஒளிந்துகொள்! அரக்கன் ஒருவன் வருகிறான்,'' என்று தேவதை கூறவே அதன் காலடி ஆடையினுள் பாட்டி நுழைந்து கொண்டாள்.

ராட்சத கத்தரிக்காயில் கையும் காலும் முளைத்திருந்தது போல அந்த அரக்கன் தோற்றமளித்தான். அவன் பெயர் அரக்க ராஜா.

''இங்கே மனித வாடை அடிக்கிறது.'' என்றான் அரக்கன்.

''இல்லை!'' என்றது தேவதை.

''பொய் சொல்லாதே! அந்தக் கிழவி எனக்கு வேண்டும்.''

''அவளைக் கொன்று தின்னப் போகிறாயா?''

''இல்லை! அவள் அதிரசம் நன்றாகச் சுடுவாள். எங்களுக்கு அதிரசம் சுட்டுக் கொடுக்க அவள் வேண்டும்! விட்டு விடு''

''அவளைக் கொல்ல மாட்டேன் என்று சத்தியம் செய்து கொடு''

''சத்தியம்! சத்தியம்!'' என்று கத்தினான் அரக்கன்.

பாட்டியை விட்டு விட்டு தேவதை பறந்தது.

அரக்கன் பாட்டியை அழைத்துக்

கொண்டு நடந்தாள். நடுவே ஒரு பெரிய ஆறு.

பாட்டியை உட்கார வைத்து அரக்கன் படகைச் செலுத்தினான்.

அக்கரையில் ஏராளமான அரக்கர்கள். அதிரசப் பாட்டியைக் கண்டதும் மகிழ்ச்சியோடு குட்டிக் கரணங்கள் போட்டார்கள்.

தனது மாளிகையின் சமையல் கூடத்துக்கு பாட்டியை அழைத்துச் சென்றான் அரக்க ராஜா.

''இதில் அரிசி மாவு இருக்கிறது. இதை வைத்துக் கொண்டு எங்கள் ஆயிரம் பேருக்கும் பத்தாயிரம் அதிரசம் கொடு'' என்றான்.

பாட்டி சிரித்து விட்டாள்; ''துளியூண்டு மாவில் ஆயிரம் அதிரசமா?''

''சிரிக்காதே. இதோ இது மந்திரக் கரண்டி. இந்தக் கரண்டியால் மாவைக் கிளறினால் மாவு அதிகமாகிக்கொண்டேயிருக்கும்.''

குங்குமச்சிமிழ் ஜாடியிலிருந்த மாவை பெரிய அண்டாவில் கொட்டி மந்திரக் கரண்டியால் கிளறினாள் பாட்டி.

கிளறக் கிளற மாவு வளர்ந்து கொண்டேயிருந்தது. அதிரசங்களைச் சுட்டுப் போட்டுக் கொண்டேயிருந்தாள்.

சாப்பாட்டு வேளையில் அதிரசங்களைத் தொட்டுக் கொண்டு மனிதர்களை அரக்கர்கள் கடித்துத் தின்பதை பாட்டி பார்த்தாள்.

மனித மாமிசத்துக்கு அதிரசம் வேறு சாயா? பாட்டி தன் கண்ணெதிரே மனிதர்கள் கொல்லப்படுவதை வேதனையோடு பார்த்தாள்.

ஒரு நாள். இரண்டு நாள்... ஐந்து நாட்களுக்கு மேல் பாட்டியால் இந்தக் கொடுமையைச் சகிக்க முடியவில்லை. தன்னுடைய உலகத்துக்கு ஓடி விடத் தீர்மானித்தாள்.

மனித வேட்டைக்கு அரக்கர்கள் போயிருந்த ஆறும் நாள் பாட்டி அரக்க மாளிகையை விட்டு வெளியேறினாள் புத்திசாலிப்பாட்டி. மறக்காமல் மந்திர கரண்டியை எடுத்துக் கொண்டாள்.

ஆற்றைக் கடக்க படகில் ஏறி அமர்ந்து துடுப்புகளை அசைத்தாள். படகு புறப்பட்டது. பாதி தூரம் கூட வந்திருக்க மாட்டாள்.

அரக்க ராஜாவும் அரக்கர்களும் அவளைத் தேடிக் கொண்டு வந்து விட்டார்கள்.

அந்த லோகத்து அரக்கர்களுக்கு நீச்சல் தெரியாது. ''ஏ கிழவி திரும்பி வா!'' என்று கத்தினார்கள்.

''அரக்க குடி மக்களே கிழவி வர மாட்டாள். இருந்தாலும் விடக்கூடாது! நமக்கு நீச்சலும் தெரியாது! எனவே, ஆற்று நீரையெல்லாம் குடிப்போம். அப்புறம் வெறும் தரையானதும் ஓடிப் போய் கிழவியைப் பிடிப்போம்!'' என்று கூறிய அரக்க ராஜா ''ஹூம் குடியுங்கள்'' என்று உத்தரவிட்டான்.

ஆயிரம் அரக்கர்களும் மண்டியிட்டு ஆற்று நீரை குடிக்கத் தொடங்கினார்கள்.

ஆறு வற்றியது. பாதியாற்றின் வெறும் தரையில் படகு நின்றது. அரக்கர்கள் ஓடி வருவதை பாட்டி பார்த்தாள். படகின் மீது நின்று கொண்டே பாட்டி பரத நாட்டியம் ஆடத் தொடங்கினாள்.

குடு குடு கிழவியின் நடனத்தைக் கண்டதும் அரக்கர்களுக்கு அடக்க முடியாத சிரிப்பு வந்து விட்டது.

அரக்க ராஜாவும் தொள்ளாயிரத்து தொண்ணூற்றி ஒன்பது அரக்கர்களும் வாய் விட்டு ''ஹா ஹா ஹா!'' என்று சிரிக்கத் தொடங்கினார்கள்.

குடித்த நீரெல்லாம் அரக்கர்களின் வாயிலிருந்து கொட்டத் தொடங்கியது.

ஆற்றில் திரும்பவும் நீர் பெருகியதால் படகு மீண்டும் மிதக்கத் தொடங்கியது. அவசர அவசரமாகத் துடுப்புப் போட்டு பாட்டி அக்கரை சேர்ந்தாள்.

ஆறு இறக்கைகள் கொண்ட பெரிய தேவதை பாட்டியை பூலோகத்திற்கு கொண்டு வந்து அவள் வீட்டுக்கு எதிரில் விட்டது.

வீட்டுக்குள் நுழைந்த பாட்டி தன்னுடைய பொடி டப்பாவை எடுத்து அரிசி மாவை அளந்து எடுத்து அண்டாவில் போட்டு மந்திரக் கரண்டியால் கிளறினாள்.

கிளறக் கிளற மாவு வளர்ந்தது. ஆயிரம் அதிரசங்களைச் சுட்டு ஊரில் உள்ளவர்களுக்கெல்லாம் தர்மமாகக் கொடுத்தாள்.

இவ்வாறு தினம் தோறும் அதிரசங்களை அவள் ஊர் மக்களுக்கு தர்மம் செய்து கொண்டேயிருந்தாள்.

அதிரசப் பாட்டியை அப்புறம் ஊர் மக்கள் 'அதிரச வள்ளல் பாட்டி' என்று அழைக்கத் தொடங்கினார்கள். அம்மிணி அம்மாள் என்கிற பெயர் அம்மிணி அம்மாளுக்கே மறந்து போயிற்று. ●



# அக்பரும் பீர்பாலும்

மொகாலாயப் பேரரசர் அக்பர் பாதுஷாவின் அரசவையில் பீர்பால் விகடகவியாக இருந்தார். இவர் சிறந்த மதியூகி. பீர்பாலின் திறமையை வெளிப்படுத்தும் வண்ணம் அக்பர் கேள்விகளை கேட்பார்; சோதனைகள் செய்வார்.

ஒருநாள்.

''நமது மாநகரில் எவ்வளவு காகங்கள் இருக்கின்றன என்று எண்ணிச் சொல்ல முடியுமா, பீர்பால்?'' என்று கேட்டார் அக்பர்.

''ஓ! முடியும் நாளைக்கே சொல்கிறேன்!'' என்றார் பீர்பால்.

மறுநாள்.

''நமது மாநகரில் ஆறுலட்சத்து எண்பத்திமூன்றுயிரத்து நானூற்றிப் பதினேழு காகங்கள் இருக்கின்றன'' என்றார் பீர்பால்.

''இவ்வளவு கணக்காக எவ்வாறு சொல்கிறீர்?''

''சந்தேகமிருந்தால் எண்ணிப் பார்த்துக்கொள்ளுங்கள், பாதுஷா!''


''எண்ணிப்பார்க்கும் போது சில காகங்கள் குறைந்தாலோ?''

'',அவை வெளியூர்களுக்கு விருந்துக்குப் போயிருக்கின்றன என்று அர்த்தம்!''

''நீர் சொன்னதற்கு மேல் அதிகமாக சில காகங்கள் இருந்து விட்டாலோ?'' அக்பர் கேட்டார்.

''வெளியூர்களிலிருந்து இங்கே விருந்துக்கு வந்திருக்கின்றன என்று அர்த்தம்!'' என்றார் பீர்பால்.

அரசர் உட்பட அரசவையில் இருந்தவர்கள் அனைவரும் கொல் என்று சிரித்தார்கள்.









© RANG REKHA FEATURES PVT. LTD. 1980.


(3)
கீச்... கீச்...
இலகுவாகப் பிடிக்கமுடிகிறது. சந்தையில் இவைகளுக்கு நல்ல விலையும் கிடைக்கிறது.
சற்றைக்கெல்லாம் கீழிறங்கினான் ரங்கையா. அவன் பை நிறைந்திருந்தது.
இவர்களைத் தடுத்து நிறுத்தி பறவைகளைக் காப்பாற்றியாக வேண்டும்...என்ன செய்யலாம்?
ரங்கையா! நம்மை யாரோ கண்காணிப்பதாக உணருகிறேன்.
நான்சென்ஸ். இந்த நேரத்தில் யார் இங்கே வர முடியும்.
அந்தக் குன்றோரத்தில் இருக்கும் மரத்தில் பறவைகள் நிறையக் கிடைக்கும் அங்கே போவோம்.
கபிஷ் ஜீப்பைப் பின் தொடர்ந்தது—
இந்த நேரத்தில் கழுகு பஞ்சாவின் உதவி கிடைத்தால் நன்றாயிருக்கும். ஆனால் அதை எங்கே போய்த் தேடுவது...
குன்றோரத்தில் வண்டியை நிறுத்துகிறார்கள்... எனக்கொரு யோசனை தோன்றுகிறது.
முதலில் ரங்கையாவின் நண்பனை அப்புறப்படுத்தவேண்டும். அது ஒன்றும் சிரமமான வேலையல்ல.
© RANG REKHA FEATURES PVT. LTD. 1979.


(4)
கபிஷ் தன் அதிசய வாலை வளர்த்தி அவனது கழுத்தைச் சுற்றி இழுத்தது.
ஹே!
ரங்கையா, உதவி! இறங்கி வா!
விளக்கு ஒளியை குகையை நோக்கித் திருப்புவோம்!
குகை-கொடுஞ் சிங்கம் கேஷாவின் குடியிருப்பு என்பதை கபிஷ் அறியும்.
என் தூக்கத்தைக் கலைக்க யாருக்குத் தைரியம் வந்தது?
கர்ர்ர்ர்... ர்ர்ர்ர்ர்... கர்கர்
ஐயோ, சிங்கம்! ஓடு!
வா, ஜீப்பில் ஏறிக் கிளம்புவோம்.
சற்றுமுன் யாரோ என்னைக் கீழே இழுத்துத் தள்ளினார்கள்.
அதைப் பற்றிய கவலைவேண்டாம். பறவைகளை நிறையப் பிடித்துவிட்டோம்.
ஜீப் மரத்தினடியில் கடந்துசென்ற வேளையில் வாலை வளர்த்தி கோணிப் பையைப் பற்றித் தூக்கியது கபிஷ்.
பறவைகளைக் கைநழுவ விட்டுவிட்டோம் என்பதை அறியாமல் ரங்கையாவும் அவனது நண்பனும் ஜீப்பில் விரைந்தனர்.
கூடுகளில் சென்று அடையுங்கள், நண்பர்களே! இன்னும் பொழுது விடியவில்லை.
கீ..கீ..
முற்றும்

# காபூல் பட்டணத்து அடிமைகள்

தொடர்கதை 3



அந்தக் கொள்ளையர்கள் அவனைக் காவலில் வைப்பதற்காக வெளியே கொண்டு சென்றனர். அப்போது திடீரென சலீம் அந்த அழகிய கூடாரத்திற்குள் நுழைந்தான். சலீமைக் கண்டவுடன் நசீருக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. நசீரை கண்டதும் சலீம் திகைப்படைந்தான். உடனே கொள்ளையர்களைப் பார்த்து நசீரின் கட்டுகளை அவிழ்த்து விடும்படிச் சொன்னான்.

முஸ்தபாவும் சலீமைக் கண்டவுடன் திகைப்படைந்தான். ஆனால் அதை வெளியில் காட்டிக் கொள்ளவில்லை. சலீமிடம் வஞ்சமாகப் பேசினான். 'வா சலீம்! உன்னைக் காணாமல் நாங்களெல்லாம் எப்படித் தவித்துப் போனோம் தெரியுமா? உன்னைத் தேடிக் கண்டு பிடிக்கும்படி நம்முடைய ஆட்களை எங்கெல்லாமோ அனுப்பி வைத்தேன். ஆனால் நீ கிடைக்கவேயில்லை. உனக்கு என்ன நடந்தது, நீ எங்கே போயிருந்தாய்?" என்று ஒன்றுமே தெரியாதது போல முஸ்தபா கேட்டான். சலீமிற்கு முஸ்தபாவின் சூழ்ச்சி தெரியும். இருந்தாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லை. தனது மனதிற்குள்ளே சிரித்துக் கொண்டான். "சரி சித்தப்பா நடந்ததென்னவோ நடந்துவிட்டது. அதை விடுங்கள். இந்த இளைஞனை ஏன் கைது செய்து வைத்திருக்கிறீர்கள்? இவன் எனது நண்பன். என்னுடைய உயிரை காப்பாற்றியவன். எனவே இவனை உடனே விடுதலை செய்ய வேண்டும்" என்றான். அதற்கு முஸ்தபா "சலீம், இவனது தந்தை பெரிய பணக்காரன். இவனை நாம் பிடித்து வைத்துக் கொண்டால், இவனை விடுதலை செய்வதற்காக அவனிடம் நாம் ஏராளமான பணத்தைக் கேட்கலாம்" என்றான். உடனே சலீமிற்கு கோபம் வந்தது. "மூடு வாயை! இவன் என்னுடைய உயிர் காத்த உத்தம நண்பன். இவனுக்கு உதவி செய்வதே நம் கடமை. எனவே நான் இவனை இப்போதே விடுதலை செய்கிறேன்" என்றான் சலீம். இதைக் கேட்டதும் முஸ்தாபாவிற்கு கோபம் வந்தது. "சலீம், நீ சிறுபிள்ளை. விபரம் தெரியாமல் உளராதே. நமது கூட்டத்தின் சட்டப்படி, நம்முடைய இடத்தை தெரிந்து கொண்ட வெளி ஆட்கள் எவனும் உயிருடன் இங்கிருந்து திரும்பிப் போக முடியாது என்பதை மறந்துவிடாதே! எனவே இவனைக் கொல்ல வேண்டும் என்று சொல்லிக் கொண்டே முஸ்தபா கத்தியை ஓங்கிக் கொண்டே நசீரை நெருங்கினான். உடனே சலீம் அந்தக் கத்தியை தட்டி விட்டான்.

தன்னுடைய சூழ்ச்சிகளெல்லாம் பலிக்காமல் போகவே முஸ்தபா கோபத்துடன் கூடாரத்தை விட்டு வெளியேறினான். சலீமும் அதை பொருட்படுத்தவில்லை. தனது நண்பன் நசீரை மீண்டும் சந்தித்ததில் பெருமகிழ்ச்சி அடைந்தான். ஆனால் நசீரோ மிகவும் கவலையுடன் இருந்தான். ஏனென்றால் பஸ்சாரா சந்தைக்கு விரைவாகப் போய்ச் சேர வேண்டுமே? ஏற்கெனவே தாமதமாக புறப்பட்டவன், இப்போது முஸ்தாபாவால் மறுபடியும் தாமதம் ஏற்பட்டுவிட்டது. நசீரின் கவலையை எண்ணி சலீமும் வருத்தப்பட்டான். தனது நண்பனுக்கு மிகவும் வேகமாக ஓடக்கூடிய வேறு குதிரை ஒன்றை ஏற்பாடு செய்து கொடுத்தான். நசீர் சலீமுக்கு தனது நன்றியைச் சொன்னான். மீண்டும் அவனை சந்திப்பதாகக் கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டான்.

நசீர் தனது குதிரையை வெகு வேகமாக பஸ்சாரா நகருக்கு ஓட்டிச் சென்றான். ஆனால் எவ்வளவு வேகமாகச் சென்றும் அவனால் அடிமைச் சந்தைக்குப் போய்ச் சேர முடியவில்லை. பஸ்சாரா நகரத்திற்கு அவன் போய்ச் சேர்ந்தபோது அடிமைச் சந்தை முதல் நாளே முடிவடைந்து விட்டது. ஏமாற்றத்துடன் பஸ்சாரா நகரின் பல்வேறு தெருக்களைச் சுற்றி வந்தும் அவனால் ஒரு தகவலும் சேகரிக்க முடியவில்லை. எல்லோரிடமும் நசீமாவைப் பற்றி விசாரித்தான். முதல் நாள் ஏரானமான பெண்களை ஏலத்தில் விற்றதால் நசீமாவைப் பற்றி யாருக்கும் தெரியவில்லை. எனவே நசீர் மிகவும் கவலையடைந்தான். பகலெல்லாம் அலைந்தலைந்து இரவு ஒரு சத்திரத்தை அடைந்தான். அது ஒரு பாழடைந்த சத்திரம். அங்கே ஒருவருமே இல்லை. அந்த சத்திரத்தில் பல அறைகள் இருந்தன. நசீர் ஒரு அறையைத் திறந்தான். அந்த அறையில் கட்டில் ஒன்று இருந்தது. மிகவும் சோர்வுடன் அந்தக் கட்டிலின் மீது படுத்துக் கொண்டான். கொஞ்ச நேரத்தில் அயர்ந்து தூங்கி விட்டான்.

தூங்கிக் கொண்டிருந்த நசீர் தனது தலையருகே போடட்டுமா? "போடட்டுமா?" என்ற குரல் கேட்டு விழித்துப் பார்த்தான். ஒரு எலும்புக்கூடு ஒரு கனமான கல்லை தூக்கி வைத்துக் கொண்டு அவன் தலை மீது போடுவதற்காக நடனமாடிக் கொண்டிருந்தது. நசீர் உடனே தனது உடை வாளை எடுத்தான். பிறகு என்ன நினைத்தானோ மீண்டும் அதை வைத்துவிட்டு எலும்புக் கூட்டையே பார்த்தான். எப்படியிருந்தாலும் இனி நசீமா கிடைக்க மாட்டாள். நசீமா இல்லாமல் இனி ஊர் திரும்புவதில் பிரயோஜனம் இல்லை. நசீமா இல்லாமல் தந்தையின் முகத்தில் விழிக்கவும் முடியாது. எனவே இனி தங்கை இல்லாமல் உயிருடன் ஊருக்குத் திரும்புவதைவிட இந்த எலும்புக் கூட்டின் கையினால் சாவதே மேல் என்று எண்ணினான். எனவே எலும்புக் கூட்டைப் பார்த்து, "அந்தக் கல்லை என் தலைமீது போட்டுத்தான் தொலையேன். நான் சாகிறேன்" என்றான். உடனே அந்த எலும்புக்கூடு தனது கையிலிருந்த கனமான பாறாங்கல்லை அவன் தலைமீது ஓங்கிப் போட்டது. தான் சாகப் போகிறோம் என்று நசீர் தனது கண்களை இறுக மூடிக் கொண்டான். ஆனால் என்ன ஆச்சரியம்? அந்த எலும்புக்கூடு போட்ட கல் அழகான மாலையாக மாறி அவன் கழுத்தில் விழுந்தது. நசீர் கண்களைத் திறந்து பார்த்தான். எலும்புக்கூடு இருந்த இடத்தில் ஒரு அழகான பெண் நின்று கொண்டிருந்தாள். நசீர் கட்டிலை விட்டு எழுந்து நின்றான். அந்தப் பெண் நசீரை வணங்கி விட்டு "இளைஞனே! எனது பெயர் சுலேகா. ஓர் இளவரசி. இளம் வயதிலேயே நான்

தற்கொலை செய்து கொண்டதனால் இவ்வளவு நாட்கள் இந்த சத்திரத்தில் பேயாக உலவி வந்தேன். நான் எப்போது வீரமுள்ள ஒருவனை சந்திக்கிறேனோ அப்போது எனது பேய் வாழ்க்கை முடிவடையும் என்று பெரியவர்கள் சொல்லியிருந்தார்கள். அதனால் நான் வீரமுள்ள ஒருவனைச் சந்திப்பதற்காக இத்தனை நாள் இந்த சத்திரத்தில் இருந்தேன். இங்கே வழி தவறித் தங்கும் ஒவ்வொருவரையும் நான் கல்லைத் தூக்கி வைத்துக் கொண்டு 'போடட்டுமா, போடட்டுமா?' என்று பயமுறுத்துவேன். இதுவரை வந்தவர்களெல்லாம் பயந்து எழுந்து ஓடிவிடுவார்கள். ஆனால் நீ ஒருவன்தான் தைரியமாக உனது வாளை எடுத்தாய். கல்லையும் போடச் சொன்னாய். அதனால் எனக்கு விமோசனம்கிடைத்தது. இனி நான் சொர்க்கம் போய்ச் சேருவேன். நன்றி. உனக்கு ஏதாவது வேண்டுவதைக் கேள்'' என்றது.

நசீரும் காணாமல் போன தன் தங்கையைத் தேடிவந்த விபரத்தைச் சொன்னான். அதற்கு அப்பெண் நேற்று நடந்த அடிமைகள் ஏலத்தில் நசீமாவை காபூல் சுல்தான் அதிகமாகத் விலை கொடுத்து வாங்கியிருக்கிறான் என்கிற தகவலைச் சொன்னாள். காபூலுக்கு செல்லும் வழியையும் மற்ற விபரங்களையும் அவனுக்கு சொல்லிவிட்டு மறைந்தாள் காபூலுக்குஅங்கிருந்து செல்ல வேண்டுமானால் நாற்பது நாள்பிரயாணம் செய்ய வேண்டும். காபூல் சுல்தானுக்கு அடிமைப் பெண்களை விலைக்கு வாங்குவதுதான் பொழுது போக்கு. அவனிடத்தில் ஆயிரக்கணக்கான அழகான அடிமைப் பெண்கள் இருந்தனர். சுல்தானின் அரண்மனை நிலத்தில் இருந்தாலும், மலைமீது தனியாக ஒரு கோட்டை கட்டி அதில் இந்த அடிமைப் பெண்களை வைத்திருந்தான். அந்தக் கோட்டை மிகவும் உறுதியானது. அதற்கு காவலும் மிகவும் பலமாகப் போடப்பட்டிருந்தது. சுல்தானைத் தவிர வேறு ஆண்கள் யாரும் அங்கு போக முடியாது. நசீர் இந்தத் தகவல்களையெல்லாம் அந்தப் பெண்ணிடமிருந்து தெரிந்து கொண்டான். சுல்தானிடமிருந்து தனது தங்கையை மீட்பது அவ்வளவு சுலபம் அல்ல என்பதையும் உணர்ந்து கொண்டான். ஏதாவது தந்திரம் செய்தோ சூழ்ச்சி செய்தோதான் மீட்க முடியும் என்று திட்டமிட்டான்.

அடுத்த நாள் காலை விடிந்ததும் நசீர் கடைத் தெருவிற்குச் சென்று அரசர்கள் அணியும் விலையுயர்ந்த துணிகளை வாங்கி உடுத்திக் கொண்டான். தனது பழைய உடைகளைக் கழற்றி எறிந்துவிட்டு புதிய உடைகளை அணிந்ததும் ஒரு நாட்டின் இளவரசன் போல் தோற்றம் அளித்தான். முகத்தில் பொய்யாக ஒரு தாடியையும் மீசையையும் ஒட்ட வைத்துக் கொண்டான். கூலிக்கு ஆட்களைப் பிடித்து அவர்களைத் தனது சிப்பாய்கள்போல வைத்துக் கொண்டான். அரசர்கள் உபயோகப்படுத்தும் விலையுயர்ந்த குதிரை ஒன்றினையும் வாடகைக்குப் பிடித்து அதில் ஏறி அமர்ந்து கொண்டான். தனது பெயரை சுல்தான் பாட்சா என்று மாற்றி வைத்துக் கொண்டு பல்சாராவை விட்டு காபூலுக்குப் போய்ச் சேர்ந்தான். காபூலுக்குப் போய்ச் சேர்ந்ததும் அங்கு தங்குவதற்காக ஒவ்வொரு விடுதியாகப் போய்ப் பார்த்தான். பார்த்துவிட்டு இதில் தனது சிப்பாய்கூட தங்க லாயக்கில்லை என்று சொன்னான். சுல்தான் பாட்சாவின் பெயர் நகரெங்கும் பரவி விட்டது. காபூல் சுல்தான் அஹமதின் காதுக்கும் நகருக்குள் வந்திருக்கும் புதிய சுல்தானின் பெருமை எட்டியது. வேறு நாட்டு சுல்தான் தனது நகருக்கு வந்து, அவர் தகுதிக்கேற்ப தங்கும் விடுதி இல்லாதது தனக்கு அவமானம் என்று கருதினான். எனவே தனது தூதுவர்களை அனுப்பி தன்னுடைய அரண்மனையில் வந்து தங்கும்படி கேட்டுக் கொண்டான். நசீரும் ஏதோ அரை மனதுடன் தங்க சம்மதிப்பவன் போல நடித்தான். பின்னர் தனது கூலிப் பரிவாரங்களை அழைத்துக் கொண்டு அரண்மனைக்கு சென்றான்.


நசீர் தனது பரிவாரங்களுடன் காபூல் சுல்தான். அஹமதின் அரண்மனையை அடைந்ததும் அஹமது அரண்மனையின் தலைவாசற்படியிலே வந்துவரவேற்றான். இதனைக் கண்டதும் நசீருக்கு தனது தங்கை நசீமாவை எப்படியும் மீட்டு விடலாம் என்றநம்பிக்கை ஏற்பட்டது. உண்மையான சுல்தானைப் போலவே கம்பீரமாக நுழைந்தான். காபூல் சுல்தான் அஹமதுவும் நசீரை உண்மையாகவே பெரிய சுல்தான் என்று எண்ணிக் கொண்டு ஆடம்பரமாக வரவேற்பு அளித்தான் நசீரை அழைத்துக்கெக்கொண்டு போய் தனது அரண்மனை முழுவதையும் சுற்றிக் காண்பித்தான். தனது மந்திரி சேனாதிபதிகளையெல்லாம் அறிமுகப் படுத்தி வைத்தான்.

(தொடரும்)





வன ராஜா
3
நினைவு திரும்பியதும் தாங்கள் எழுந்துநிற்பதற்குக்கூட சக்தியற்ற நிலையில் இருப்பதை உணர்ந்தனர்.
குறைபட்டுக்கொள்வதை நிறுத்து!— தைரியத்தைக் கைவிடாதே!
ஓ! என்னால் காலைக் கூட நீட்டமுடியவில்லை—
தள்ளாடிய நடையுடன் தீவுக்குள் நுழைந்தனர்.
இந்தத் தீவில் மனிதர்கள் எவரும் வசிக்கிறார்களா என்பதே சந்தேகமாயிருக்கிறது எனக்கு!
ஹேர்! ஷியாம்! தூரத்தில் யாரோ மனிதன் போல் தெரிகிறது.
ஜுமா நீ சொல்வது சரிதான்! யாரோ காட்டுவாசி!
தனக்கு நேரவிருந்த ஆபத்தைச் சற்றும் உணராத அம்மனிதன் வெகு குதூகலத்துடன் நடந்துவந்து கொண்டிருந்தான்.
ஆனால்—
புதிய மனிதர்கள்! இவர்கள் எப்படி இங்கே வந்தார்கள்?
சடாரெனத் திரும்பிய காட்டுவாசி விரைந்து ஓட முற்பட்டான்.
நில்!
மறுவிநாடி காற்றைக் கிழித்துக் கொண்டு வந்த சுருக்குக்கயிறு அவனது கழுத்தில் விழுந்தது.
நல்லவேளை, பிடித்துக்கொண்டோம்! இல்லாவிட்டால் இந்த காட்டுவாசிகள் மத்தியில் அகப்பட்டிருப்போம்!
தொடரும்


ராமுவும் சோமுவும்
அம்மா, நாங்கள்...க்கர்விளையாடிக் கொண்டிருந்தபோது...பப்...பப்... ஒரு...
உனக்கு எத்தனை தடவைசொல்லி யிருக்கேன்வாய் நிறையசோற்றை வச்சுக்கிட்டுப் பேசாதேன்னு...
அப்படியானும் நான் வெறும் வாயால்பேசும் போதெல்லாம், "பேசாதே! சாப்பிடுன்னு!" ஏன்சொல்றீங்க?
பாவம், பசங்க! அதிகமாத் திட்டாதீங்க...
.. என்னைக்கேட்டா உங்கபையன்கள் ரொம்பவும் அடக்க ஒடுக்கமான நல்ல பையன்கள்னுசொல்வேன்.
பட்...டம்
டம்...பட்
ராஜு,மாப்படிக்கட்டு களில் இறங்கிவரும் போது இப்படியா டம்... டம்னுசத்தம் கேட்கற மாதிரி இறங்கிறது!
கொஞ்ச நேரத்திற்கு முன்னாடி ராமு இறங்கிவரும் போது கொஞ்சம்கூட சத்தம் கேட்கலியே! ராமு, படிக்கட்டில் ஓசை இல்லாமல் இறங்குகிறது எப்படின்னுராஜுக்குச் சொல்லிக்கொடு.
ராமு மாடிப்படிமீது ஏறிச் சென்றுநின்றான்.
இதோ! சத்தமில்லாமல்இறங்க என்வழி இதுதான்!


" இங்கிலீஷ் மீடியத்திலே படிக்கிற உங்க மகனை கொஞ்சம் அடக்கி வையுங்க! "
" என்ன செய்தான்? "
" எங்க வீட்டு கூரையிலே இருக்கிற ஓட்டைகளை யெல்லாம் பார்த்து 'ட்விங்கிள் - ட்விங்கிள் - லிட்டில் ஸ்டார்'னு பாட்டு பாடறான். "
-ஆர். பி. ராஜ்
" உங்கம்மா உன்னை அன்பா 'Come-son'னு கூப்பிடறாங்களே? ஆனா உன் முகம் ஏன்டா ஒருமாதிரியா மாறுது! "
" நீ ஒண்ணு! நான் மார்க்கெட் போனா ஒவ்வொரு தடவையும் கமிஷன் எடுத்துகிறதை அப்படி மறைமுகமாக கம்சன்-னு சொல்றாங்க! "
-ஆர். பி. ராஜ்
" எங்கப்பா...என்னை 'ஹை ஜம்ப்' பழகச் சொன்னார். நான் கேட்கலே... இப்போ கட்டாயமா பழகும்படி செய்திட்டார்! "
" அப்படி என்ன செய்தார்? "
" நீ வீட்டு வாசற்படியை மிதிக்காதேன்னுட்டார். நான் இப்போ, தினசரி சுவரேறி குதிச்சுதான் வீட்டுக்குள்ளே போறேன். "
-ஆர். பி. ராஜ்
ஆசிரியர்: 'இரண்டாம் கஜினி முகம்மது'னு பேர் போட்டிருக்கிற இந்தப் புத்தகம் யாருடைய புத்தகம்?
ராமு: (6-ம் வகுப்பில் 4-வது வருடம் படிப்பவன்) என்னுடைய புத்தகம்தான் சார். அப்படிப் புனைப்பெயர் வைத்திருக்கிறேன்.
-இரத்தினம்
" என் மகனுக்கு, TV, ரெப்ரிஜிரேட்டர் இல்லேன்னு சாப்பாடே இறங்காது! "
" உங்க மகன், TV. யையும், ரெப்ரிஜிரேட்டரையும்தான் சாப்பிடுவான்னு ஒரு வார்த்தை நீங்க சொல்லலியே! "
-ஆர். பி. ராஜ்

# கழுதை ஜோதிடம்



-பாலாஜி-

திருவாளர் திகம்பரநாத சச்சிதானந்த சுவாமிகள் ரொம்பவும் புகழ் பெற்றவர். புகழுக்கு காரணம் அவர் அரண்மனையில் மகாராஜாவுக்கு ஜோதிடம் சொல்பவர் என்பதால் மட்டுமல்ல; 'ஜோதிட மகாமேதை' 'ஜோதிட ரத்னகர; 'ஜோதிடப் பிரகாசா' என்று ஏராளமான பட்டப் பெயர்களும் அவருக்கு இருந்ததும் காரணமாகும்.

அரண்மனை ஜோதிடரான திருவாளர் திகம்பரநாத சச்சிதானந்த சுவாமிகளைத் தேடி பல தேசங்களிலிருந்தும் பணக்காரர்கள் வருவார்கள். இவரிடம் ஜோஸ்யம் கேட்டுக் கொண்டு போவதற்காக தங்கி காத்திருப்பார்கள்.

திருவாளர் திகம்பரநாத சச்சிதானந்த சுவாமிகளுக்கு ஏராளமான செல்வம் சேர்ந்தது. காயாம்பட்டியில் நிறைய வயல் அவருக்கு இருந்தது. பண்ணை ஊழியர்கள் வயலில் நெல் பயிரிட்டிருந்தார்கள்.

அறுவடைக்காக திருவாளர் திகம்பரநாத சச்சிதானந்த சுவாமிகள் காயாம்பட்டிக்கு பல்லக்கில் புறப்பட்டுப் போனார்.

கிராமத்தின் எல்லையில் கருப்பண்ணன் என்பவன் குடிசை கட்டி வாழ்ந்து வந்தான். பல்லக்கில் அரண்மனை ஜோஸ்யர் வருவதைக் கண்டதும் கருப்பண்ணன் மரியாதையாக எழுந்து நின்று வணங்கினான்.

''வாருங்கள்! அரண்மனை ஜோதிடரே! வணக்கம்!'' என்றான் கருப்பண்ணன்.

பதிலுக்கு வணக்கம் சொல்லாமல் பல்லக்கிலிருந்து கீழே இறங்கினார் திருவாளர் திகம்பரநாத சச்சிதானந்த சுவாமிகள், ''நிலத்தில் அறுவடைக்குப் போகிறேன்'' என்றார்.

''அறுவடைக்கா?'' என்று ஆச்சர்யத்தோடு கேட்ட கருப்பண்ணன் குடிசை ஓரத்தில் நின்று கொண்டிருந்த தன்னுடைய கழுதையைப் பார்த்தான்.



'' இன்று மழை கொட்டப் போகிறது. அதனால் இன்று அறுவடை செய்ய முடியாது சுவாமி!'' என்றான் கருப்பண்ணன்.

''போடா! முட்டாளே! நான், கோள், நட்சத்திரம் பார்த்து வான சாஸ்திரத்தை கணித்து அறிந்தவன் நான் வந்திருக்கிறேன். உன் போன்ற மூடர்களுக்கு அது புரியாது. வெய்யில் அனலாகக் கொட்டும் இந்தப்பருவத்தில் மழை எப்படி வரும்?'' என்று சொல்லிவிட்டு திருவாளர் திகம்பரநாத சச்சிதானந்த சுவாமிகள் தன்னுடைய வயலை நோக்கி நடந்தார்.

பாதி அறுவடை முடிந்த வேளையில்—

திடீரென வானம் இருண்டது. இடி இடித்தது, மழை கொட்டியது, அன்று பகல் முழுவதும் மழை பெய்து கொண்டேயிருந்தது.' இரவில் தான் வானம் ஓய்ந்தது.

அறுவடை செய்த தானியங்கள் சேதமானது குறித்து வருந்தியபடி பல்லக்கில் திரும்பிய திருவாளர் திகம்பரநாத சச்சிதானந்தசுவாமிகள் எல்லையில் கருப்பண்ணனைக் கண்டார்

''எலே, கருப்பண்ணா! இன்று மழை வரும் என்று எவ்வாறு நீ தெரிந்து கொண்டாய்?'' என்று கேட்டார்.

''இதென்ன பிரமாதம் சுவாமி! எனது கழுதையின் காதுகள் விடைத்துக் கொண்டு வானத்தைப் பார்த்த மாதிரி இருந்தால் மழை வரும் என்று அர்த்தம்'' என்றான் கருப்பண்ணன்.

அரண்மனைக்குத் திரும்பியதும் திருவாளர் திகம்பரநாத சச்சிதானந்த சுவாமிகள் மகாராஜாவிடம் நடந்ததைக் கூறினார். இந்த விஷயம் மெல்ல மெல்ல நகரெங்கும் பரவியது. கருப்பண்ணன் புகழ் ஓங்கியது.

காயாம்பட்டி கிராம எல்லையில் இருந்த குடிசையைத்தேடி பல நாடுகளிலிருந்து மன்னர்களும், பணக்காரர்களும் வரத் தொடங்கினார்கள். கருப்பண்ணன் தனது கழுதையின் கால் அசைவு, வாய் அசைவு, உடல் அசைவு, அதோடு கழுதையின் மூக்கைப்பார்த்தும் ஜோஸ்யம் சொல்லத் தொடங்கினான் 'கழுதைஜோதிடர் கருப்பண்ணனந்த சுவாமிகள் தனது கழுதைக்கு பட்டாடைகள் தைத்துப்போட்டு, ஐம்பது பவுனில் தங்கச் சங்கிலி செய்து அணிவித்தார். கழுதைஜோஸ்யர் கருப்பண்ணனந்த சுவாமிகளிடம் ஜோஸ்யம் கேட்க இரவு நேரங்களில் திருவாளர் திகம்பரநாத சச்சிதானந்த சுவாமிகள் வந்து போகலானார்.

# ஏழை அம்புஜமும் பணக்கார பங்கஜமும்



மதுமதி.

இரவு நேரம். குடுகுடு கிழவர் ஒருவர் தள்ளாடித் தள்ளாடி தெருவில் வந்து கொண்டிருந்தார்.

மாளிகை போன்ற பெரிய வீட்டில் பிரகாசமான விளக்குகள் ஒளி வீசிக் கொண்டிருந்தன. வாசலில் பங்கஜம் நின்று கொண்டிருந்தாள்.

கிழவர் அங்கே வந்தார். ''அம்மா! நான் வெளியூர்க்காரன். இந்த ஊரில் தெரிந்தவர்கள் யாருமில்லை. விடியும் வரை எனக்கு உங்கள் வீட்டில் தங்குவதற்கு இடம் தருவீர்களா?'' என்று பணிவோடு கேட்டார்.

''பிச்சைக்காரர்களைப் படுக்க வைக்கவா நாங்கள் மாளிகை கட்டி வைத்திருக்கிறோம்'' என்று எரிந்து விழுந்த பங்கஜம் ''போய்யா போ!'' என்று விரட்டினாள்.

மாளிகைக்குப் பக்கத்தில் ஓர் மண் குடிசை. உள்ளே 'மினுக்' 'மினுக்' என்று காற்றில் படபடக்கும் சிறியதோர் சிம்னி விளக்கு. வாசலில் அம்புஜம் நின்று கொண்டிருந்தாள்.

''அம்மா! நான் வெளியூர்க்காரன். இன்று இரவு மட்டும் நான் தங்குவதற்கு இடம் தருவீர்களா?'' என்று அம்புஜத்திடம் கிழவர் கேட்டார்.

''இருக்கிற இடத்தில் நீங்கள் தங்குவதில் எனக்கு ஆட்சேபமில்லை,'' என்று கூறிய அம்புஜம் கிழவரை குடிசைக்குள்ளே அழைத்துக் கொண்டு போனாள்.

''களைத்துப் போயிருக்கிறீர்கள். மோரும் சாதமும் சாப்பிடுங்கள்'' என்று அம்புஜம் உபசரித்தாள்.

கிழவர் சாப்பிட்டுக் கொண்டே குடிசை முழுக்கவும் பார்த்தார். எல்லா இடங்களிலும் ஏழ்மை தெரிந்தது. பழைய பாய்களில் ஆறு பையன்கள் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

''என்னுடைய பிள்ளைகள்'' என்றாள் அம்புஜம். ''வறுமையின் காரணமாக இவர்கள் அப்பா மூன்று வருஷங்களுக்கு முன்பு ஓடிப்போய் விட்டார்'' என்றாள் அம்புஜம்.

''பிள்ளைகள் கந்தல் உடைகளை உடுத்திக் கொண்டிருக்கிறார்களே?'' என்று வருத்தத்தோடு கேட்டார் கிழவர்.

''மூன்று முழம் துணிதான் புதிதாக இருக்கிறது. ஆறு பிள்ளைகள். யாருக்குத் தைத்துப் போடுவேன்'' என்று அம்புஜம் சொன்னாள்.

இருக்கிற பாய்களில் நல்ல பாயாக ஒன்றை எடுத்து கிழவருக்கு விரித்துப் போட்டாள் அம்புஜம்.

கையலம்பி விட்டு வந்த கிழவர் நிம்மதியாகத் தூங்கினார்.

''கொக்கரக்கோ கோ!'' அதிகாலையில் சேவல் கூவியது. கிழவர் எழுந்தார்.

''அம்மா! நான் எனது ஊருக்குப் புறப்படுகிறேன்'' என்றார் கிழவர்.

''வாசலை விட்டு இறங்கும்போது ''அம்மா! விடிந்ததும் முதன்முதலாக என்ன செய்வாயோ அதையே சூரியன் மறையும் வரை செய்து கொண்டிருப்பாய்'' என்று சொல்லிவிட்டு கிழவர் நடந்தார்.

முதல நாளிரவு பிள்ளைகளுக்கு நல்ல சட்டைகள் இல்லையே என்று வருந்திய படி தூங்கிய அம்புஜம் இருக்கிற புதுத் துணியை அளந்து பார்க்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தாள்.

விடிந்ததும் முழக்கோலை எடுத்து அந்தத் துணியை அளந்தாள். அளக்க அளக்க துணி வளர்ந்துகொண்டேயிருந்தது.

பத்து முழம், இருபது முழம், முப்பது முழம் என்று வளர்ந்துகொண்டேயிருந்தது துணி. அப்போதுதான் கிழவர் போகும்போது சொன்னது அம்புஜத்துக்கு நினைவு வந்தது.

சூரியன் மறையும் வரை அளந்து கொண்டேயிருந்தாள். புதுத்துணி மலைபோலக் குவிந்து கிடந்தது. வாழ்நாள் முழுதுக்கும் போதுமான துணி.

அந்தக் குடிசைப் பக்கம் வந்த பங்கஜம் இந்தக் காட்சியைப் பார்த்து விட்டாள். ''அடியே அம்புஜம், இது என்ன அதிசயம்?'' என்று கேட்டாள்.

முதல் நாளிரவு கிழவர் தங்கியதையும் போகும்போது சொன்னதையும் அம்புஜம் சொன்னாள்.

அதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த பங்கஜம் தனது மாளிகைக்குத் திரும்பியதும் வேலைக்காரனைக் கூப்பிட்டாள். ''ஒரு பிச்சைக்காரக் கிழவன் தெருக்களில் சுற்றிக் கொண்டிருப்பான். எங்கே இருந்தாலும் அவனை அழைத்துக்கொண்டு வா!'' என்று உத்தரவிட்டாள்.

வேலைக்காரன் தெருத் தெருவாய் அலைந்து கடைத் தெருவில் கிழவரைக் கண்டு பிடித்தான். ''ஐயா! எங்கள் எஜமானி பங்கஜம்மாள் உங்களை அழைத்துக்கொண்டு வரச் சொன்னார்'' என்றான்.

கிழவர் மறுத்தார்.

''உங்களைக் கூட்டிக் கொண்டு போகவில்லையானால் என் எஜமானி என்னை வேலையைவிட்டு நீக்கி விடுவாள்'' என்று வேலைக்காரன் கெஞ்சவே கிழவர் அவனோடு போனார்.

அவர் வருகைக்காக மாளிகை வாசலிலேயே காத்திருந்தாள் பங்கஜம். ''ஐயா! இன்று இரவு என் வீட்டில் தாங்கள் தங்கிப் போகவேண்டும்'' என்றாள்.

சாப்பிடுவதற்கு வடைபாயசத்தோடு உணவு படைத்தாள். பாலும் பழமும் கொடுத்தாள். இலவம் பஞ்சு மெத்தைக் கட்டிலில் கிழவரைப் படுக்க வைத்தாள். கிழவர் தூங்குகிறவரை பக்கத்திலேயே நின்று விசிறியால் வீசிகொண்டிருந்தாள்.

''கொக்கரக்கோ கோ!'' அதிகாலையில் சேவல் கூவியது. கிழவர் எழுந்தார். வெளியே புறப்பட்டார்.

''குடிசை வீட்டு அம்புஜத்துக்கு சொன்ன மாதிரி எனக்கும் ஏதாவது சொல்லிவிட்டுப் போங்கள்'' என்றாள் பங்கஜம்.

''விடிந்ததும் முதன் முதலாக என்ன செய்வாயோ அதையே சூரியன் மறையும் வரை செய்து கொண்டிருப்பாய்'' என்று சொல்லிவிட்டு கிழவர் போனார்.

விடியும்வரை பங்கஜம் பனியில் காத்திருந்தாள்.

பனியில் நனைந்ததால் விடியும்போது பயங்கரமாகத் தும்மல் வந்தது.

தும்மல், தும்மல், தும்மலுக்கு மேல் தும்மல்!

தும்மிக் கொண்டேயிருந்தாள் பங்கஜம். சூரியன் மறையும் வரை அவள் பயங்கரமாகத் தும்மிக் கொண்டிருந்ததை தெருவிலுள்ள மக்கள் எல்லோரும் கூடி வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

-○○-

Printed and Published by A. M. Thiyagharajhan at Muthu Comics, P. Box No. 253, Chairman P. K. S. Road, Sivakasi - 626123. Editor: M. Saundrapandian, Publishing Editor: Mullai Thangarasan.


அதிமேதை அப்பு
சித்திரம் - செல்லம்
பல்வலி தாங்க முடியலே... டாக்டர் கிட்ட போகவும் பயமா இருக்கு.
என்ன செய்யலாம்? ...ஹைய்யா- ஓர் ஐடியா!...
டேய்.. மது! என் சொத்தைப் பல் விழுகிறமாதிரி தாடையில் ஓங்கி ஒரு குத்து விடுடா!
ஆகா... தாராளமாய்!
ஜெய்.... புரூஸ் லீ!
டேய்... டேய்... நிறுத்தடா!
தடிமாடு... அப்பாவிப் பையனைப் போட்டு ஏன்டா அடிக்கிறாய்.
வந்து... இவன் தான்... அடிக்கச் சொன்னான்.
ஊஹூம்... பிரயோஜன மில்லே.
நீ ஒன்னும் சமாதானம் சொல்ல வேண்டாம்.
அந்த ஆசாமியைக் கேட்டு செய்து பார்ப்போம்.
யோவ்... குண்டப்பா!
போய்யா... கிண்டலா பண்ணுறே... இப்போ என் கை மட்டும் சரியாக இருந்தால் உன் தாடையில ஒரு குத்து விட்டிருப்பேன்.
ஹூம்... அதிர்ஷ்ட மில்லே எனக்கு
ஒரு ஜோக்கிலே படிச்சதை முயற்சி பண்ணிப் பார்க்கலாம்.
கதவு கும்மிழையும் சொத்தைப் பல்லையும் நைலான் கயிற்றால் இணைத்துக் கட்டி...
இப்படி உட்கார்ந்து கொண்டால்...
ஹை.. யாரோ வருகிறார்கள்... கதவை திறந்ததும் என் பல் கழன்று வந்துவிடும்.
அடக் கடவுளே.... சோபாவையும் சேர்த்து இழுத்து விட்டதே!
என்னடா... பல்வலியா! டாக்டர் கிட்டே போகப் பயந்துக்கிட்டு இந்த வேலை பண்ணிப் பார்க்கறியா!
இல்லைப்பா... வந்து — ஆமாம்!
ஹூம்... வேறு வழியில்லே.
பல்டாக்டர் DENTIST
நண்பருடன் டென்னிஸ் ஆடிக்கொண்டிருந்த டாக்டர் அடித்த பந்து அப்புவின் தாடையை தாக்கியது.
ஆவ்... ஸாரி தம்பி... நீ வருவதை நான் கவனிக்கவில்லை! கீழே விழுந்தது உன் சொத்தைப் பல் தானா... இருந்தாலும் இப்படி நடந்ததை நீ யார் கிட்டேயும் சொல்லிடாதே— இந்தா... காசு... வச்சுக்கோ...
தாங்க்ஸ்!
பல்லையும் பிடுங்கி காசையும் கொடுத்த டாக்டரை பாராட்டாமல் இருக்க முடியுமா? ஹா... ஹா...



பதிப்பாசிரியர்:
முல்லை தங்கராசன்
முத்து காமிக்ஸ் வாரமலர்
இளம் செல்வங்களின் இதயம் கவரும் இனிய இதழ்
60 காசு
5-12-1982
ஒற்றைக்கண் மர்மம்-4
வெளியூர் ஆசாமி மாதிரி தோன்றுகிறது!
சார்லிக்கும், ஓவனுக்கும் என்ன நேர்ந்தது என்று இவனுக்குத் தெரிந்திருக்கலாம்!
பாதையில் கிடந்த ஒரு பாறாங்கல்லில் தடுக்கி விழுந்தார் மாயாவி...
ஆ.ஆ!
கீழே விழுந்து விட்டான்... வாருங்கள் சீக்கிரம்!
கிராமவாசிகள் மாயாவியை சூழ்ந்துகொண்டனர்—
யார் நீ? இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்!
எங்களைக் கண்டு ஏன் ஓடினாய்?
பின்னால் ஏதோ ஊர்ந்துவரும் சலசலப்பு சத்தம் கேட்டு எல்லோருமே திரும்பிப் பார்த்தனர்.
அது... அது -என்ன!
மறுகணம்
அது ஒரு ராட்சஸ கண் ...விநோதமான சைத்தான்!
ஏதோ தந்திர ஜால காட்சி என்று நினைக்கிறேன்!
எதுவாக இருந்தாலும் தீர்த்துக்கட்டிவிடுகிறேன்!


குண்டு போய் தாக்குமுன் அந்த ராட்சஸ கண்ணின் இமைகள் மூடிக்கொண்டு விட்டன...
துப்பாக்கிக் குண்டு பயனற்றுப்போனது... அந்தக் கண் மீண்டும் விழித்துப் பார்த்தது!
நம்மையே உற்றுப் பார்க்கிறது... வாருங்கள் - ஓடிப் போய்விடலாம்!
கிராமவாசிகள் மாயாவியை மறந்துவிட்டு ஓட்டம்பிடித்த வேளையில்...
அதோ... மீண்டும் ஒளிக்கற்றை கலங்கரை விளக்க உச்சியிலிருந்து பாயத் தொடங்குகிறது!
மறுகணம்—
...ஆ..ஆ..ஆ
கண்ணைக் குருடாக்கும் பிரகாசத்தில் திக்குமுக்காடிப் போயினர் கிராமவாசிகள்!
ஆ... தாங்க முடியவில்லையே!
உதவி... உதவி!
இந்தத் தடவை... விளைவு வித்தியாசமாக இருந்தது. சித்திரக்குள்ளர்களை செடி கொடிகளிடையே தேடிய மாயாவி ஏமாந்துபோனார்!
அந்த காரோட்டிக்கு நேர்ந்த கதிதான் இவர்களுக்கும் நேர்ந்திருக்கலாம்.
ஓரிரு நிமிடங்களுக்குப் பின் அங்கே காற்றின் சலசலப்பு மட்டும்தான் மிஞ்சியது....
யாரையும் காணோமே! ஒளிபாய்ந்த இடத்தில் செடிகொடிகளனைத்தும் வெளிறிப்போய்விட்டதே!
இதற்கெல்லாம் என்ன பொருள்? விடை எங்கே இருக்கிறது என்று மாயாவிக்கு தெரியும்...
அந்தக் கலங்கரை விளக்கத்திற்குள் போய் ஆராய வேண்டும்...
கலங்கரை விளக்கத்தின் உள்ளே—
ஒரு மனிதன் இங்கே வருகிறான் ...டார்ச்சை தயார் செய்!
ஒளிவீச்சு முழு அளவில் இருக்கட்டும்!
தொடரும்

# யானைத்தலை தங்கக் கட்டி

ஒரு ஊரில் பெரிய பணக்காரர் ஒருவர் இருந்தார். அந்த நாட்டின் அரசர் வைத்துள்ள செல்வத்தைவிட அவரிடம் அதிக செல்வம் இருந்தது. அதனால் அவர் கர்வமும் அகம்பாவமும் கொண்டவராய் இருந்தார்.

அவர் பெயர் சீமான் சிங்கமுத்து. சீமான் சிங்கமுத்து தங்க நகை வியாபாரம் செய்து வந்தார். சீமான் சிங்கமுத்துவுக்கு ஏழைகளைக் கண்டாலே பிடிக்காது. அதிலும் வயலில் வேலை செய்யும் கறுப்பு நிற மனிதர்களைப் பார்க்கவே மாட்டார். அவரது மாளிகை இருந்த வீதியிலேயே ஏழைகளும் தொழிலாளிகளும் நடக்கக் கூடாது என்று சட்டம் போட்டிருந்தார். செல்வந்தர் ஆகையால் அவரது உத்தரவுக்கு ஊர் மக்கள் பயந்து அடிபணிந்து வாழ்ந்தனர்.

அந்த ஊரில் மூன்று நண்பர்கள் இருந்தார்கள். மாடன், காடன், சேடன் என்பது அவர்களது பெயர்கள். மூவரும் ஏழைகள். வயலில் வேலை செய்து கூலி வாங்கி வாழ்பவர்கள். மூன்று பேரில் மாடன் ரொம்பவும் ஏழை.

ஒரு நாள் சேடன் சொன்னான், ''நான் சீமான் சிங்கமுத்துவை அவர் பல்லக்கில் போகும் போது தூரத்திலிருந்து பார்த்திருக்கிறேனே.''

''ப்பூ! இவ்வளவுதானே! நான் சீமான் சிங்கமுத்துவை அவர் மாளிகையின் உப்பரிகையில் நிற்கும்போது பார்த்திருக்கிறேனாக்கும்'' என்றான் காடன்.

''ஹாஹ்ஹா!'' என்று சிரித்தான் மாடன். ''நீங்கள் தூரத்திலிருந்து சீமான் சிங்கமுத்துவைப் பார்த்துவிட்டு பெருமையடித்துக் கொள்கிறீர்களே! நான் சீமான் சிங்கமுத்துவோடு உட்கார்ந்து விருந்து சாப்பிட்டுவிட்டு வருவேன் தெரியுமா?''

காடனும் சேடனும் ஏளனமாய்ச் சிரித்தனர். ''பகல் கனவு காண்கிறாய்?'' என்றார்கள்.

''செய்து காட்டுகிறேன். என்ன பந்தயம்?'' என்று மாடன் சவால் விட்டான்.

''சீமான் சிங்கமுத்துவோடு உட்கார்ந்து அவரது மாளிகையில் விருந்து சாப்பிட்டுவிட்டு நீ திரும்பி வந்தால் நான்கு மூட்டை நெல் தருகிறோம்'' என்றார்கள் காடனும், சேடனும்.

மறுநாள் பகல். மாடன் சீமான் சிங்கமுத்துவின் மாளிகைக்குச் சென்றான். தொலைவில் நின்றபடி காடனும் சேடனும் மாடன் உள்ளே எப்படிப் போகப் போகிறான் என்று பார்த்துக் கொண்டு இருந்தனர். சீமானின் சேவகர்கள் ''போடா! இந்தத் தெருவைவிட்டே வெளியே போடா'' என்று சத்தம் போட்டார்கள்.



''நான் ஒரு ரகசியச் செய்தி கொண்டு வந்திருக்கிறேன். அதை சீமானிடம் மட்டுமே சொல்ல முடியும்'' என்றான் மாடன்.

சேவகர்கள் சீமானிடம் போய்ச் சொன்னார்கள்.

''ரகசியமான செய்தி என்றால் அது எனக்கு லாபகரமான செய்தியாகத்தான் இருக்கும். அவனைக் கூட்டிக் கொண்டு வாருங்கள்'' என்றார் சீமான் சிங்கமுத்து.

சேவகர்கள் மாடனை மாளிகைக்குள் அழைத்துப் போனார்கள்.

''சீமானே! நான் தங்களிடம் தனியாகப் பேச வேண்டும். ஏனென்றால் நான் கொண்டு வந்திருக்கும் செய்தி பரம ரகசியமானது'' என்றான் மாடன்.

மாடனை தன்னுடைய தனி அறைக்கு அழைத்துச் சென்றார் சீமான் சிங்கமுத்து.

சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு தணிந்த குரலில் மாடன் கேட்டான். ''சீமானே! ஒரு யானைத் தலை அளவுள்ள தங்கக் கட்டியின் விலை எவ்வளவு இருக்கும்?''

யானைத் தலை அளவுள்ள தங்கக் கட்டியா? இந்தப் பிச்சைக்காரனுக்குப் புதையல் கிடைத்திருக்குமா? இவனிடம் சாமர்த்தியமாகப் பேசி விலை கொடுக்காமலேயே அந்தத் தங்கக் கட்டியை வாங்கிவிட வேண்டும் என்று சீமான் சிங்கமுத்து மனதுக்குள் நினைத்துக் கொண்டார்.

''யானைத் தலை அளவுள்ள தங்கக் கட்டிக்கு எவ்வளவு விலை கிடைக்கும் சீமானே?'' மீண்டும் மாடன் கேட்டான்.

''அது தங்கக் கட்டியா இல்லையா என்று தெரியாமல் விலை எப்படிச் சொல்வது? யோசித்து கணக்குப் போட வேண்டும்'' என்றார் சீமான்.

''சரி, எனக்காக என் வீட்டில் மதிய உணவு காத்திருக்கிறது. பசிக்கிறது. நான் போகிறேன்'' என்று கூறி மிடுக்காக நடக்கத் தொடங்கினான் மாடன்.

''சாப்பாடுதானே—இங்கேயே என்னுடன் சாப்பிடு'' என்று சொன்னார் சீமான்.

சாப்பாட்டுக் கூடத்துக்கு மாடனை அழைத்துச் சென்றார் சீமான்.

நுனி வாழை இலை போட்டு மாடனுக்கும் சீமானுக்கும் வடை பாயசத்துடன் விருந்து பரிமாறினாள் சீமானின் மனைவி.

''இன்னும் கொஞ்சம்... இன்னொரு குவளை பாயசம்... மேலும் நான்கு வடை... அப்பளம்'' என்று சீமான் உபசரித்துக்கொண்டேயிருந்தார்.

மேலும் மேலும் என வயிறுபுடைக்கச் சாப்பிட்டான் மாடன். ஏப்பம் வந்த பிறகே சாப்பிடுவதை நிறுத்தினான்.

கைகழுவ சீமானே செம்பில் தண்ணீர் கொண்டு வந்தார்.

வெற்றிலை பாக்கு போட்டவுடன் சீமான் சொன்னார்: ''நீ எனது பல்லக்கில் போய் அந்த யானைத் தலை அளவுள்ள தங்கக் கட்டியை எடுத்துக் கொண்டு வா... ராத்திரிக்கும் நல்ல விருந்து தருகிறேன்.''

மாடன் சிரித்தான்: ''யானைத் தலை அளவுள்ள தங்கக் கட்டியும் கிடையாது. பூனைத் தலை அளவுள்ள தங்கக் கட்டியும் கிடையாது. யானைத் தலை அளவு தங்கக்கட்டிக்கு என்னவிலை இருக்கும் என்பதைத் தெரிந்துகொள்ளத்தானே நான் வந்தேன்'' என்றான் மாடன்.

சீமான் சிங்கமுத்துவுக்கு கோபம் குபீரென்று வந்தது; ''முட்டாளே! போடா வெளியே'' என்று கத்தினார்.

''நானா முட்டாள்? வயிறு முட்ட வடை பாயசத்துடன் சாப்பிட்டு விட்டேன். வெளியே போனதும் நான்கு மூட்டை நெல் எனக்குக் கிடைக்கப் போகிறது'' என்று சிரித்துக்கொண்டே சொல்லிவிட்டுப் புறப்பட்டான் மாடன்.

அவமானத்தால் முகம் சிவக்க நின்றார் சீமான். ●


எனக்கு அவசரமான வேலை இருக்கிறது. தாமதிக்காமல் சோதனையைச் செய்து காண்பியுங்கள்.
நிச்சயமாக, ஆனால்…
இதோ சோதனைக்கான தொகை!
ஓ.கே.!
நாசகாரக் கும்பல் - 4
இந்தாருங்கள் எங்கள் பங்கு.
அவர்கள் கிடக்கட்டும். உங்களுக்குச் செய்து காண்பிக்கும் மாதிரிச் சோதனைக்கு ஐஸ்க்ரீம் திட்டம் என்பது சங்கேதப்பெயர்!
உங்களுக்குத் தெரிந்திருக்கும்… கூடுதல் சுருதி கொண்ட ஒலியானது கண்ணாடியைச் சிதறடிக்கும் வலிமை கொண்டது.
ஆம்… உண்மைதான்!
அந்தவிதமாக பேரொலி எழுப்பும் இந்தக் கருவி பலமான கட்டிடங்களையும் தகர்க்கும் சக்தி படைத்தது.
இப்போது பாருங்கள்- அந்த ஐஸ்க்ரீம் பாக்டரியை எப்படித் தகர்க்கிறேனென்று!
இந்த பாக்டரிக்குப் பக்கத்தில்தான் உங்கள் ஆட்களைச் சந்தித்தோம்.
இருக்கலாம்.
இந்த மாதிரி படம் பிடித்து அனுப்புவதற்கு வசதியாக விடியோ-காமிராவை பக்கத்து கட்டிடத்தில் பொருத்துவதற்காக அவர்களை அங்கே அனுப்பிவைத்தேன்.
நடப்பதைக் கவனியுங்கள்.
ஒரு நிமிடம் பொறு.
அந்தக் கட்டிடத்தைத் தகர்த்துக் காண்பிப்பதில் உனக்கென்ன லாபம்?
ஒரு ஒப்பந்தத்திற்கான சோதனை இது…
…இந்தத் தேசத்தின் ராணுவ, கடற்படைக் கேந்திரங்களைத் தகர்க்க வெளிநாடு ஒன்றுடன் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தம் அது.
நான் எனது தேசத்தை நேசிக்கிறேன். ஆனால் பணத்தின்மீது நான் காட்டும் நேசம் அதைவிட அதிகம்… ஹா, ஹா…




*அன்பான கண்மணிகளே!*

இரண்டாவது மலர் உங்களிடம் இருக்கின்றதா? இது என்ன, உங்களிடம் இப்படிக் கேள்வி கேட்கிறேன். ஒவ்வொரு மலரையும் போற்றிப் பாதுகாத்து சேர்த்து வைத்திருக்காமல் இருக்க உங்களால் முடியாதே! சரி. இரண்டாவது மலரை எடுத்துப் புரட்டுங்கள்!

அந்த மலரில் சில தவறுகள் இடம் பெற்றுள்ளன. முதல் மலரோடு ஒப்பிட்டுப் பார்த்து அவைகளில் மூன்று தவறுகளைக் கண்டு பிடியுங்கள். அவை மூன்றும் எந்தப் பக்கங்களில் உள்ளன என்று




முத்து காமிக்ஸ் வாரமலர்

மலர் : 1
இதழ் : 4
5-12-1982


10-12-82 க்குள் ஒரு கார்டில் எழுதி அனுப்புங்கள்.

சரியாகக் கண்டு பிடித்து எழுதுபவருக்கு பரிசு ரூபாய் நூறு காத்துள்ளது. மூன்றுக்கு மேலும் தவறுகளைக் கண்டுபிடித்து எழுதினால் தனியான பரிசு உண்டு.

அப்புறம் அப்பு விஷயம். கேள்விகளை அனுப்புவோர், 'அதிமேதை அப்பு, முத்து காமிக்ஸ் வாரமலர், சிவகாசி-626123. என்று முகவரியை தெளிவாக எழுதவும். சிந்தனைமிக்க அவன் சீக்கிரம் பதிலளிக்கத் தொடங்கி விடுவான் என நம்புகிறேன். பிற அடுத்து.

அன்புடன்,
முல்லை தங்கராசன்



# வல்லரக்கன்

லட்சம் வருஷங்களுக்கு முன்பு பூமியில் அரக்கர்கள் நிறைய வாழ்ந்த காலத்தில் நடந்தது இந்தக்கதை.

அரக்கமாநாடு என்று ஒரு தேசமே இருந்தது. அந்த தேசத்தில் ஏராளமான அரக்கர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவர்களில் ஒருவன் பெயர் வல்லரக்கன்.

அவன் மகா பலசாலி, பலசாலி மட்டுமல்ல, தைரியசாலியும் கூட. தைரியசாலி மட்டுமல்ல, கடும் கோபக்காரனும் கூட.

அவன் பெயரைக் கேட்டாலே மனிதர்கள் நடுநடுங்குவார்கள். மனிதர்களை மட்டுமல்ல, அரக்கர்களையும் கூட அவன் கொடுமைப் படுத்துவான்.

வல்லரக்கன் நடந்து போகும் பாதையில் வேறு எந்த அரக்கன் எதிரே வந்தாலும் அவன் தொலைந்தான். ஓங்கி ஒரே ஒரு உதைதான் கொடுப்பான் வல்லரக்கன். எதிரே வந்த அரக்கன் எலும்பு நொறுங்கி செத்துப்போவான்.

அந்த தேசத்தில் வாழ்ந்த பல அரக்கர்கள் வல்லரக்கன் வழியில் வரவே மாட்டார்கள். வழியில வருகிறவர்களை மட்டுமல்ல, வேறு எந்த அரக்கனாவது பலசாலி தைரிய சாலி என்று பெயர் பெறத் தொடங்கினாலும் போதும் வல்லரக்கனே தேடிப்போய் வம்பு செய்து சண்டை யிட்டுக் கொன்று விடுவான்.

வல்லரக்கன் புகழ் வளர்ந்து கொண்டேயிருந்தது. அவனுக்கு ஒரே ஒரு வருத்தம். 'கில்லரக்கன்' 'கில்லரக்கன்' என்றொரு அரக்கன் வல்லரக்கனுக்கு நிகரான புகழ் பெற்றுக்கொண்டிருந்தான். கில்ல ரக்கன் எங்கேயிருக்கிறான் என்று வல்லரக்கனுக்குத் தெரியவில்லை. கில்லரக்கனைத் தேடிப்பிடித்து ஓங்கி ஒரே ஒரு உதை கொடுக்க வேண்டும் என்று வல்லரக்கன் ஆசைப்பட்டான்.

''எங்கேயிருந்தாலும் கில்லரக் கனைத் தேடிப்பிடித்து இன்னும் முப்பதே நாளில் உதைத்தே தீருவேன்!'' என்று பகிரங்கமாகவே ஒரு நாள் வல்லரக்கன் சபதம் செய்தான்.

வல்லரக்கனின் இந்தச் சபதம் அரக்கமாநாடு முழுக்க எதிரொலித்தது. கில்லரக்கனின் காதுகளுக்கும் போய்ச்சேர்ந்தது. இதைக்கேள்விப்பட்ட நாள் முதலாய் கில்லரக்கனுக்கு நடுக்கம் எடுக்கத் தொடங்கிவிட்டது.

வல்லரக்கன் மகாபலசாலி என்பதும் அவனது ஒரே ஒரு உதையில் பல அரக்கர்கள் செத்தே போயிருக்கிறார்கள் என்பதும் கில்லரக்கனுக்குத் தெரியும்,

கொண்டா மொண்டா மலையில் வீடுகட்டி வசித்து வந்த கில்லரக்கன் நாட்களை எண்ணிக்கொண்டு வீட்டுக் குள்ளேயே பயந்துகிடந்தான்.

# கில்லரக்கன்

இருபத்தொன்பதாவது நாள்.

கட்டைவிரலை வாய்க்குள் விட்டுச் சுவைத்தான் கில்லரக்கன். கட்டை விரலை வாய்க்குள் விட்டால் எந்தக் கேள்விக்கும் அவனுக்குப் பதில் கிடைக்கும்.

அப்போது அவனது கேள்வி ''எந்தவழியாக எப்போது வல்லரக் கன் வருவான்?'' என்பதுதான்.

வாய்க்குள்ளிருந்த அவனது கட்டைவிரல் சொல்லியது; ''கிழக்கே யிருந்து நாளை உச்சிப்பகலில் வல்லரக்கன் வருகிறான்''

தன் மனைவி பல்லரக்கியிடம் வல்லரக்கன் வரப்போகும் திசையை யும் நேரத்தையும் கில்லரக்கன் சொன்னான்.

''நீ கவலைப்படாதே மச்சான்! நான் அவனுக்கு விருந்து கொடுக்கப் போகிறேன். விருந்து முடிந்த வினாடியிலிருந்து வல்லரக்கன் உன் திசை நோக்கித் திரும்பவே மாட்டான்.'' என்று தைரியம் சொன்ன பல்லரக்கி, ''எனக்கு சில கேள்விகள். அவற்றுக்கு உன் கட்டைவிரல் மூலம் பதில் கண்டு பிடித்துச்சொல்'' என்றாள்.

''கேள்'' என்றான் கில்லரக்கன்.

''வரப்போகிறானே வல்லரக்கன் அவனுக்கு மிகவும் பிடித்தமான தின்பண்டம் எது?'' என்று கேட்டாள் பல்லரக்கி.

கில்லரக்கன் வாய்க்குள் கட்டை விரலை விட்டான். ''அவனுக்கு கடலை மிட்டாய்தான் மிகவும் பிடித்த மானது'' என்று சொன்னான்.

''வரப்போகிறானே வல்லரக்கன் அவனது பலம் அவன் உடலில எங்கேயிருக்கிறது?'' என்று கேட்டாள் பல்லரக்கி.

கட்டை விரலை வாய்க்குள் விட்டு கண்டுபிடித்தான் கில்லரக்கன். ''வல்லரக்கனின் வலது கை நடு விரலில்தான் அவன் பலம் இருக்கிறது'' என்றான்.

மனைவி பல்லரக்கியின் செயல்கள் கில்லரக்கனுக்கு எதுவும் புரியவில்லை

''இனி நிம்மதியாகத் தூங்கப் போ மச்சான்'' என்று சொன்னாள் பல்லரக்கி.

விடிந்தது. அன்றுதான் முப்பதாவது நாள்.

கில்லரக்கனைக் குளிப்பாட்டி விட்ட பல்லரக்கி ஒரு குழந்தை மாதிரி அவனுக்கு வேஷம் போடத் தொடங்கினாள். தலையில் கம்பளிக் குல்லாய், உடம்பில் குழந்தைகள் உடுத்தும் உடை. கையில் கிலு கிலுப்பை, வாயில் தான் எப்போதும் கில்லரக்கனின் கட்டைவிரல இருக்குமே!

# பல்லரக்கி

சூரியன் கொஞ்சம் கொஞ்சமாக உச்சிக்கு ஏறிக்கொண்டிருந்தது. கிழக்கே பெரும் புயல் போல சத்தம் கேட்கவே கில்லரக்கன் கட்டைவிரலை வாய்க்குள் விட்டுப் பார்த்தான். ''பல்லரக்கி! வல்லரக்கன் வந்து கொண்டிருக்கிறான். அதுதான் புயல் வீசுவது போல சத்தம் கேட்கிறது. ''ஐயோ!'' என்று பதறினான்.



''பய்ப்படாதே மச்சான்! தொட்டிலிலே படுத்துக்கோ'' என்றாள் பல்லரக்கி! கில்லரக்கன் படுத்ததும் பூப்போட்ட போர்வையால் தொட்டிலை மூடினாள், முகம் மட்டும் வெளியே தெரிகிற மாதிரி போர்வையை சரிசெய்தாள்.

கிண்டியிலே பாலை நிரப்பி தொட்டில் பக்கத்திலே வைத்தாள்.

சூரியன் உச்சியில் நின்ற போது ''அடேய் கில்லரக்கா வாடா வெளியே?'' என்ற சத்தம் வாசலில் கேட்டது, பல்லரக்கி எழுந்துபோய்ப் பார்த்தாள்.

வல்லரக்கன் நின்று கொண்டிருந்தான். ''எங்கே அந்தப் பயல் கில்லரக்கன்? அவன் பெரிய கில்லாடியாமே, வரச்சொல்லடி வெளியே !'' என்று கத்தினான்.

''வாங்கோ வாங்கோ?'' வாயெல்லாம் பல் தெரிய வரவேற்றாள் பல்லரக்கி.

அவர் வெளியே போயிருக்கிறார். வருகிற நேரம்தான், வாங்கோ? வீட்டுக்குள் வந்து உட்காருங்கோ?'' என்றாள்.

''கில்லரக்கனை உதைக்க வந்திருக்கிறேன். வீட்டுக்குள் வரமாட்டேன்'' என்றான் வல்லரக்கன்.

''நீங்கள் இருவரும் ஆண் அரக்கர்கள், உங்களுக்குள் ஆயிரம் சண்டை இருக்கலாம், அதைப்பற்றி தான் பொருட்படுத்த மாட்டேன், வாங்கோ'' என்றாள் பல்லரக்கி.

வீட்டுக்குள் வந்த வல்லரக்கன் நாற்காலியில் அமர்ந்த போது தொட்டிலைப் பார்த்தான்.

''அது என் மகன், இரண்டு வயது ஆகிறது'' என்றாள் பல்லரக்கி.

கடலை மிட்டாய் வாசம் கமகம வென்று வீசவே வல்லரக்கன் மூக்கால் முகர்ந்து பார்த்தான்.

''ஓ! அது கடலை மிட்டாய்கள்! நேற்றுத்தான் நெய்யும் வெல்லமும் கலந்து உருட்டி வைத்திருக்கிறேன்'' என்று சொன்ன பல்லரக்கி அலமாரியின் கீழ்த்தட்டில் இருந்த உருண்டைகளில் சிலவற்றை ஓர் தாம்பளத்தில் வைத்து எடுத்து வந்தாள், ''வீட்டுக்கு முதல் முதலில் வந்திருக்கிறீர்கள், சாப்பிடுங்கள்'' என்று உபசரித்தாள்.

கடலை மிட்டாய் விஷயத்தில் வல்லரக்கன் பகைமை பாராட்டுவதில்லை. ஒரு உருண்டையை எடுத்து வாயில் போட்டு ஒரே கடியாகக் கடித்தான், வாய்க்குள் ஒரு பல் உடைந்து நொருங்கியது, பல் உடைந்து போன செய்தியை வெளியில் சொன்னால் தன்னைக் கிழவன் என்று நினைத்து விடுவாள் என்பதால் சொல்லாமல் கடலை மிட்டாயை விழுங்கிவிட்டு பேசாமலிருந்தான் வல்லரக்கன்.

''என்ன இது? ஒன்று தானா? இது என் கணவருக்காக செய்தது. ஒரே சமயத்தில் ஐம்பது உருண்டைகளை அவர் அபக் அபக்கென்று சாப்பிடுவாரே..'' என்று பல்லரக்கி சொன்னதும் வல்லரக்கனுக்கு அவமானமாகப் போய்விட்டது.

இன்னும் இரு உருண்டைகளை ஒரே சமயத்தில் வாய்க்குள் போட்டு படக் படக்கென்று கடித்தான். ஆறு பற்கள் மேலேயும் கீழேயும் உடைந்து நொறுங்கியதைத் தெரிந்து கொண்டான் ஆனாலும் வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

''என் கணவர் ஒரே வாயில் ஐந்து உருண்டைகளை அள்ளிப் போட்டு லபக் லபக்கென்று சாப்பிடுவார். அவ்வளவு உறுதியானது அவருடைய பற்கள்'' என்று பல்லரக்கி சொன்னதும் வல்லரக்கனுக்கு மேலும் அவமானமாகப் போய் விட்டது.

ஐந்து கடலை மிட்டாய்களை ஒரே போடாக வாய்க்குள் போட்டு கடக் கடக்கென்று கடித்தான், வாய்க்குள் ஏழெட்டு பற்கள் உடைந்து நொறுங்கியது.

''போதும் போதும்—என் பற்களில் பாதி நொறுங்கி விட்டது'' என்று கத்தினான் வல்லரக்கன்.

''ஐயே! கடலைமிட்டாய் தின்பதற்கு இவ்வளவு கஷ்டப் படுகிறீர்களே.. என் இரண்டு வயதுக் குழந்தை கூட பத்துப் பதினைந்து கடலைமிட்டாய் சாப்பிடுமே!'' என்று சொன்ன பல்லரக்கி அலமாரியின் மேல் தட்டிலிருந்த நல்ல உருண்டைகளை எடுத்துக்கொண்டுபோய் தொட்டிலில் குழந்தை மாதிரி கிடக்கும் கில்லரக்கனிடம் கொடுத்தாள். அவன் படுத்துக்கொண்டே உருண்டைகளை கடக் முடக்கென்று கடித்துத் தின்றான்.

வல்லரக்கனுக்கு வலியோடு ஆச்சர்யம். ''இரண்டு வயசுக் குழந்தைக்கு எப்படி தின்ன முடிகிறது?'' என்று கேட்டான்.

''எங்கள் பரம்பரைக்கே உறுதியான பற்கள். ஏனென்றால் நாங்கள் பனை மரத்தால் தான் பல் விளக்குகிறோம்''

என்று பெருமையாக பல்லரக்கி சொன்னாள். ''உங்களுக்குச் சந்தேகம் இருந்தால் குழந்தை அருகே போய் பற்களைப் பாருங்கள்'' என்றாள்.

வல்லரக்கன் எழுந்து தொட்டில் அருகே போனான். கில்லரக்கன் வாயைத்திறந்து காட்டினான்.

''ஆ! குழந்தைக்கு எவ்வளவு பெரிய பற்கள்'' என்று ஆச்சர்யப் பட்டு பற்களின் உறுதியைத் தொட்டுப்பார்க்க குழந்தையின் வாய்க்குள் வலது கையை விட்டான்.

அவ்வளவு தான்!

வல்லரக்கனின் வலது கை நடு விரலை லபக்கென்று கடித்து துண்டாக்கி தின்று விட்டான் கில்லரக்கன்

அவ்வளவுதான்!

வல்லரக்கனின் சக்தியெல்லாம் குறைந்து போய்விட்டது.

தொட்டிலிலிருந்து சடாரென எழுந்து கில்லரக்கன் கும்கும் என்று குத்து விட்டான்.

''ஐயோ! அம்மா'' என்று அலறிக்கொண்டே ஓடினான் வல்லரக்கன்.

அன்றிலிருந்து வல்லரக்கன் யார் வம்புக்கும் போவதே இல்லையாம்.




கபிஷ்
கானகப் புலியான பீலுவுக்கோ கடும் பசி.
எங்களுக்கும் பசிக்கிறது.
கவலைப் படாதீர்கள்.
குட்டிமான் பிந்து நதியில் நீர் அருந்த ஆலமரத்தின் அருகேதான் வரும். அதை எதிர்பார்த்து இருப்பதால் இன்று நிச்சயம் இரை உண்டு.
பீலு சொல்வதைக் கேட்டாயா ஸிகல். நான் போய் பிந்துவை எச்சரித்து ஆலமரத்தினருகே வராமல் தடுக்கவேண்டும்.
ஆமாம், ஆமாம்.
எனக்கும் பசிக்கிறது. பீலு பிந்துவைக் கொல்லுமானால் மீதி இறைச்சி எனக்குக் கிடைக்கும். கபீஷ் செல்வதற்கு முன்னால் குறுக்கு வழியில் சென்று பிந்துவைப் பார்ப்போம்.
முந்திக்கொண்டு பிந்துவைச் சந்தித்தது ஸிகல்.
பிந்து, பீலு இந்த வழியாக வருகிறது. நீ இங்கிருந்து ஓடிவிடு.
நன்றி ஸிகல்.
கபீஷ் பிந்துவை நாடிவந்த வேளையில்—
பிந்து எங்கே போய்விட்டது?
கபீஷ் தேடி அலுத்துப்போய் ஆலமரத்துக் கிளையில் வந்தமர்ந்து காத்திருந்தது.
பிந்துவும் மற்ற மான்களும் இங்கு வந்ததும் எச்சரிக்க வேண்டும் .. ஹே, அது என்ன?
துப்பாக்கிக் குழல்போல் தோன்றுகிறதே!

1


அதேசமயம் தொலைவில் பிந்து தோழர்களுடன் ஆலமரம் நோக்கி வரக் கண்டது கபீஷ்.
உடனடியாக செயல்பட்டாக வேண்டும்.
ஸிகலும் மறைவில் காத்திருக்கக் கண்டது.
எனக்கு முன்னால் ஸிகல் பிந்துவைச் சந்தித்து தவறான தகவல் கூறி திசைதிருப்பிவிட்டிருக்கிறது.
பீலு!
ஹே, குரங்குப் பையா, என்ன செய்துகொண்டிருக்கிறாய் இங்கே?
பீலு, நீ சுவர் அலங்காரப் பொருளாய் மாறுவதைப்பற்றி என்ன நினைக்கிறாய்?
என்ன கிண்டலா செய்கிறாய்?
நீ உடனடியாக இங்கிருந்து கிளம்ப வில்லையானால் உன் தலை சுவரில்தான் மாட்டப் படும். அதோ தெரியுது பார் துப்பாக்கி...!
பீலுவும் பார்த்தது...
புர்ர்ர்...
...பார்த்ததும் தலைதெறிக்க ஓடலாயிற்று.
பீலு தப்பிச் செல்லக்கண்ட ரங்கையா கவலைப்பட்டான்.
நான் பீலுவைப் பின்தொடரவேண்டும். ஆனால் கீழிறங்கினால் என்மேல் அது பாயக்கூடும்...
தான் அமர்ந்திருக்கும் மரத்திலிருந்து நதியின் மறுகரையிலிருந்த மரத்திற்கு கயிறு ஒன்று கட்டப்பட்டிருப்பதைப் பார்த்தான்.
இந்தக் கயிற்றின்வழியே ஆற்றின் மறுகரையை அடைந்து பீலுவைப் பின்தொடரவேண்டும். புலித்தோலுக்கு நல்ல கிராக்கி இருக்கிறது.

2


ஆனால் ரங்கையாவின் கண்களுக்கு கயிறாகக் காட்சி தந்தது...
...உண்மையில் கபிஷின் வாலாகும். வாலை வளர்க்கும் அரிய சக்தி அது அனுமனை வேண்டிப்பெற்ற வரப்பிரசாதம் என்பது நாமறிந்ததே.
திடீரென, நதியைக் கடக்கும் யோசனையை ஒத்திப்போட்டான் ரங்கையா.
மான் கூட்டம் இந்தவழியாக வருகிறது. பீலு போனால் போகட்டும் மான் வேட்டையாடலாம்.
...மான் கூட்டத்தை நோக்கி தன் துப்பாக்கியைக் குறிபார்த்தான்.
அந்தக் காட்சியைக் கண்ட கபிஷ்
ஸீகல் உனக்கு இங்கென்ன வேலை?
பீலுவைப்பற்றி பிந்துவிடம் எச்சரிக்கவந்தேன்.
ராஸ்கல்... பிந்து கொல்லப்படுவதைப் பார்க்கவல்லவா நீ இங்கே காத்திருக்கிறாய்.
...பீலு ஓடிவிட்டது. பிந்துவிற்கு இனி கவலையில்லை.
இல்லை. நீ சொல்வது தவறு. ரங்கையா பிந்துவைச் சுட்டுக்கொல்லத் தயாராய்க் காத்து இருக்கிறான்...
சற்றேயோசித்துப்பார்: ரங்கய்யா பிந்துவைக் கொல்வதில் உனக்கொன்றும் லாபமில்லை. தான் சுடும் மிருகங்களை அவன் தூக்கிச் சென்றுவிடுவான். உனக்கு இரை கிடைக்கப்போவதில்லை.




தன் உள்நோக்கம் கபிஷிற்குத் தெரிந்துவிட்டதை எண்ணி வெட்கப்பட்டது ஸீகல்.
பிந்துவிற்கு நான் என்ன உதவி செய்ய வேண்டும் சொல்?
போய், ரங்கையாவைப் பற்றி எச்சரிக்கை செய். மான்கள் நீரருந்த வேறு இடம் செல்லட்டும்.
ஸீகல் கபிஷின் வேண்டுகோளை ஏற்றுக் கிளம்பியது...
...பிந்துவிடம் ரங்கையாவைப்பற்றி எச்சரித்தது.
அவன் அந்த மாமரத்தில் துப்பாக்கியுடன் காத்திருக்கிறான்.
பிந்துவும் அதன் தோழர்களும் வழக்கமான இடத்தைவிட்டு தள்ளி நீரருந்தச் சென்றுவிட்டன.
ஆற்றின் மறுகரைக்குச் சென்றால்தான் விலங்குகள் கிடைக்கும். இந்தக் கயிற்றைப் பிடித்துக் கடப்போம்.
தான் பிடித்திருப்பது கயிறெனக் கருதி ரங்கையா தொங்கிச் செல்ல...
...நட்டாற்றில் வரும்போது கபிஷ் வாலைச் சுருக்க தடாரென விழுந்தான் நீரினுள்.
ஐயோ ஆ ஆ ஆ
தொப் தொப்
அவனது கூக்குரலைக் கேட்டு மான்கள் திரும்பிப் பார்த்தன. ஆனால் அருகில் நெருங்கிச் செல்லப் பயந்தன.
பயப்படாதீர்கள். அவனது துப்பாக்கி ரவைகள் நனைந்துவிட்டன. எனவே ஆபத்தில்லை. ஹா ஹா!
ஹா ஹா!
முற்றும்.

# காபூல் பட்டணத்து அடிமைகள்

முல்லை தங்கராசன்

வாயத்திலுள்ள தனது குதிரை, ஒட்டகங்களையெல்லாம் காண்பித்தான். ஆனால் தன்னிடம் அடிமையாய் இருக்கும் அடிமைப் பெண்களைப்பற்றியோ, அல்லது அவர்கள் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் மலை மேல் உள்ள கோட்டையைப்பற்றியோ ஒன்றும்சொல்லவில்லை. இதனால் நசீர் ஏமாற்றமடைந்தான். எனவே மெதுவாக அடிமைப் பெண்களைப் பற்றி பேச்சை துவக்கினான். தன்னிடம் ஐந்நூறு அழகிய பெண்கள் அடிமைப் பெண்களாக உள்ளதாகப் புகன்றான். அதைக் கேட்டதும் அஹமதும் தன்னிடம் இரண்டாயிரம் பெண்கள் அடிமைகளாக உள்ளதாகவும், அவர்களுக்கென்றே மலை மீது ஒரு அரண்மனை கட்டி அதில் அவர்களை வைத்துள்ளதாகவும் கூறினான். இரண்டாயிரம் பெண்களா! என்னால்நம்பமுடியவில்லையே என்று நடித்தான் நசீர். அஹமதுவும் அவனது நடிப்பை உண்மையென்று நம்பிக் கொண்டான். உடனே கோபமாக உனக்கு நம்பிக்கையில்லா விட்டால் நாளை காலை என்னுடன் அடிமைக் கோட்டைக்கு வா காட்டுகிறேன் என்றான். அடிமைகள் இருக்கும் கோட்டைக்கு இரவு நேரம் வேற்று ஆண்கள் யாரும் நுழைய முடியாது. எனவே தான் நசீரை அடுத்த நாள் காலையில் அழைத்துக் கொண்டு செல்வதாகச் சொன்னான். பின்னர் நசீருக்கு பெரிய விருந்து ஒன்று அளித்தான். விருந்து முடிந்ததும் நசீர் தங்குவதற்காக தனிப் படுக்கை அறை ஒன்றையும் ஏற்பாடு செய்து கொடுத்தான்.

இரவெல்லாம் நசீர் தூங்கவேயில்லை. நசீமாவை எப்படிக் காப்பாற்றுவது என்று யோசனை செய்து கொண்டேயிருந்தான் அவ்வாறு அவன் யோசனை கொண்டே விடியற்காலம் கண்ணை மூடினான். அப்போது அவனது அறைக்குள் யாரோ ரகசியமாக நுழைவது தெரிந்தது. உடனே கண்ணைத் திறந்து பார்த்தான். சலீமின் கொள்ளைக் கூட்டத்தில் பார்த்த சலீமின் சித்தப்பா கிழவன் முஸ்தபா பயங்கரமாக சிரித்தபடி நின்று கொண்டிருந்தான். நசீர் அவனைப் பார்த்ததும் திடுக்கிட்டெழுந்தான். முஸ்தபா நசீரைப்பார்த்து ''நசீர், பயப்படாதே! நீ எதற்காக இங்கே வந்திருக்கிறாய் என்று எனக்குத் தெரியும். இப்போது நான் சலீமுடன் இல்லை. அன்று உன்னால் எனக்கும் சலீமிற்கும் சண்டை ஏற்பட்டு அந்த துரோகி என்னை விரட்டி விட்டான். நீ உனது தங்கையைத் தேடி இங்கு வருவாய் என்று எனக்கு தெரியும். எனவே உனக்கு முன்பாகவே இங்கு வந்து இந்த சுல்தானிடம் வேலைக்குச் சேர்ந்து விட்டேன். நீயும் உன் தங்கையும் இங்கிருந்து தப்பிப் போக என்னால் உதவி செய்ய முடியும். நீ அதற்கு பதிலாக எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும். இல்லையென்றால் நீ ஒரு போலி சுல்தான் என்பதை எல்லோரிடமும் சொல்லி விடுவேன். பிறகு நீ உன் தங்கையை காப்பாற்ற முடியாது. நீயும் இங்கிருந்து தப்பிப் போக முடியாது. என்ன சொல்கிறாய்'' என்று கேட்டான். நசீரும் பதிலுக்கு அவனிடம், ''சரி அதற்குப் பதிலாக நான் உனக்கு என்ன உதவி செய்ய வேண்டும்'' என்று கேட்டான். அதற்கு அந்தக் கிழட்டு முஸ்தபா வஞ்சகமாக சிரித்துக் கொண்டே, ''அதற்கு பதிலாக உன்னுடைய தங்கை சலீமாவைஎனக்கு திருமணம் செய்து கொடுக்கவேண்டும்'' என்றான். இதைக்கேட்டதும் நசீருக்கு ஆத்திரம் ஏற்பட்டது. முஸ்தபாவைப்பிடித்து உதை உதையென்று உதைத்தான். அவனிடம் அடி பொறுக்க முடியாமல் முஸ்தபா அங்கிருந்து தப்பி ஓடினான்.

முஸ்தபா தப்பி ஓடியதும் நசீர் யோசனை செய்தான். தப்பி ஓடிய முஸ்தபா எப்படியும் சுல்தானிடம் போய் உண்மையைச் சொல்லி விடுவான். சுல்தான் தனது ஆட்களை அனுப்பி தன்னை பிடிப்பதற்குள் தப்பி ஓடி விட முடிவு செய்தான். தப்பி ஓடும் முன்னர் அவனது மூளையில் ஓர் எண்ணம் உதயமாயிற்று. அறையை விட்டு யாருக்கும் தெரியாமல் ரகசியமாக அரண்மனை சமையல் அறைக்குப் போனான். சமையல் அறையில் அப்போது தான் காலை நேர உணவு தயாராகியிருந்தது. அடிமைப் பெண்கள் இருக்கும் கோட்டைக்கு கொண்டு செல்வதற்காக பெரிய பெரிய பாத்திரங்களில் உணவுப் பொருட்கள் தயாராக எடுத்து வைக்கப்பட்டிருந்தன. நசீர் ஏற்கனவே சுல்தான் அஹமதுடன் வந்திருந்ததால் சமையல் அறையிலிருந்த சமையல்காரர்கள் ஒன்றும் சொல்லவில்லை. நசீரைக் கண்டதும் வணங்கினார்கள். சலீம் சமையல் அறையை வேடிக்கை பார்ப்பது போல அப்படியே சுற்றி வந்தான். தனது மடியில் ஏற்கெனவே ரகசியமாக சொருகி வைத்திருந்த ஒரு டப்பியை எடுத்து திறந்தான். அந்த டப்பிக்குள் ஒரு பொடி இருந்தது. யாரும் பார்க்காத சமயத்தில் நசீர் அந்தப்பொடியை, அடிமைப் பெண்களுக்காக கொண்டு செல்ல வைத்திருக்கும் உணவில் கலந்து விட்டான். பின்னர் அங்கிருந்து நைசாக நழுவி குதிரை மீது ஏறி அந்த அரண்மனையை விட்டு தப்பி ஓடினான்.

நசீரிடம் உதை வாங்கி ஓடிய கிழட்டு முஸ்தபா நேரே சுல்தானிடம்ஓடினான். அப்போது சுல்தான் தூங்கிக் கொண்டிருந்தான். இன்னும் எழுந்திருக்கவில்லை. சுல்தான் தூங்கும்போது யாராவது எழுப்பினால், சுல்தானுக்கு கோபம் வந்துவிடும். எனவே சுல்தான் விழிக்கும்வரை காத்திருந்தான். கொஞ்ச நேரம் கழித்து சுல்தான் விழித்தான். முஸ்தபா அவனி



டம் வந்திருப்பவன் உண்மையான சுல்தான் அல்லவென்றும், அவனது பெயர் நசீர் என்றும். நசீமாவை மீட்டுக் கொண்டு போக வந்திருப்பதாகவும் சொன்னான். உடனே சுல்தான் தனது ஆட்களை அனுப்பி நசீரைப் பிடித்து வரும்படி சொன்னான். நசீர் இருந்தால் தானே? சுல்தானின் ஆட்கள் போவதற்குள் அவன் அந்த நகரின் எல்லையை விட்டு வெகு தூரம் போய் விட்டான். நசீர் கிடைக்காததனால் ஏமாற்றமடைந்த சுல்தானுக்கு ஆத்திரம் அதிகமாகியது. முன்னதாகவே ஏன் இதை தன்னிடம் சொல்லவில்லை என்று முஸ்தபாவை பிடித்து சவுக்கால் அடிக்கும்படி உத்திரவிட்டான். அவனை வேலையை விட்டு நீக்கி அந்த ஊரை விட்டும் துரத்தினான்.

சமையல் அறையில் உணவில் நசீர் கலந்த பொடி சாதாரணமான பொடி அல்ல. அது ஒருவித விஷக்காய்ச்சலை உண்டாக்கும் பொடியாகும். அன்றைக்கு அந்த உணவை சாப்பிட்டதும் கொஞ்ச நேரத்திலேயே அத்தனை அடிமைப் பெண்களுக்கும் கடுமையான விஷக் காய்ச்சல் ஏற்பட்டது. சுல்தான் அஹமதிற்கு இந்தத் தகவல் சொல்லி அனுப்பப்பட்டது. சுல்தான் தனக்குத் தெரிந்த மருந்துகளை கொடுத்தான். ஆனால் வியாதி குணமடையவில்லை. அரண்மனையிலுள்ள வைத்தியர்களை அழைத்துக் காண்பித்தான். அவர்களுக்கும் இந்த விநோதமான காய்ச்சலைப்பற்றி ஒன்றும் புரியவில்லை. விதவிதமான மருந்துகள் கொடுத்துப் பார்த்தனர். வியாதி குணமடைவதாக இல்லை. இதனால் சுல்தானுக்கு கவலை அதிகமாகியது. நாட்கள்தான் அதிகமாகிக் கொண்டிருந்தன.

நகரத்தை விட்டு தப்பி ஓடிய நசீர் நகரின் எல்லையைத் தாண்டி காட்டிற்குள் தலைமறைவாக ஒளிந்திருந்தான். அவனுக்கு இந்தச் செய்தி எட்டியது. பொய்யான தாடி, மீசை வைத்து தன்னை ஒரு வயதான வைத்தியன் போல மாற்றிக் கொண்டான். நகரத்திற்குள் வந்து ஒரு வைத்தியரிடம் மருந்துப் பெட்டிகள் முதலியவைகளை விலைக்கு வாங்கிக் கொண்டான். அவற்றையெல்லாம் தனது குதிரைமீது ஏற்றிக்கொண்டு சுல்தானின் அரண்மனையை அடைந்தான். சுல்தானிடம் போய் தான் ஒரு தலை சிறந்த வைத்திய நிபுணன் என்றும், தன்னால் அடிமைப் பெண்களுக்கு ஏற்பட்டுள்ள விஷகாய்ச்சலை குணப்படுத்த முடியும் என்றும் சொன்னான். இதைக் கேட்டதும் சுல்தானுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது.

வியாதியை குணப்படுத்தினால் அவன் கேட்கும் தொகையைக் கொடுப்பதாகச் சொன்னான். உடனடியாக வைத்தியத்திற்கு ஏற்பாடு செய்யும்படி சொன்னான். இதைக் கேட்டதும் நசீருக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. எப்படியும் தனது தங்கையை சந்தித்து விடலாம் என்று எண்ணினான். தனது மருந்து பெட்டிகளுடன் மலைமீதிருந்த கோட்டைக்கு சுல்தானுடன் சென்றான். ஆனால் நசீர் எண்ணியபடி நடக்கவில்லை. அவன் கோட்டையை அடைந்தபோது மாற்றமே அடைந்தான். சுல்தான் அடிமைப் பெண்களையெல்லாம் ஒரு அறையில் போட்டு பூட்டி வைத்திருந்தான். அந்த அறையின் சுவரில் மட்டும் வெளியே நீட்டுவதற்காக சதுரமாக ஒரு துவாரம் செய்து வைத்திருந்தான். துவாரத்தின் வழியாக ஒவ்வொரு பெண்ணும் வைத்திய செய்ய வருபவர்கள் கையை பிடித்து நாடி பார்க்க கையை நீட்டுவார்கள் வைத்தியம் செய்பவர்கள் அவர்களின் முகத்தை பார்க்கமுடியாது. அதன்படி சுல்தான் துவாரத்தின் அருகே நின்று கொண்டு ஒவ்வொரு அடிமைப் பெண்ணின் பெயரைச் சொல்லி அழைத்தான். அப்போது அந்தப் பெயருக்கு உரிய அடிமைப் பெண் துவாரத்தின் வழியே கையை நீட்டினாள். நசீர் ஒவ்வொரு அடிமைப்பெண்ணின் கையைப் பிடித்து நாடி பார்த்துக் கொண்டே வந்தான். அப்போது சுல்தான் நசீமா என்று சொன்னான். துவாரத்தின் வழியே ஒரு கை வெளியே வந்தது. நசீர் அந்தக் கையை பிடித்துப் பார்த்தான். விஷக்காய்ச்சல் இருந்தது. பின்னர் அவன் சுல்தானிடம், அடிமைப் பெண்கள் எல்லோருக்கும் விஷக்காய்ச்சல் இருப்பதாகவும் அவர்களுக்கு மருந்து தயாரித்து அடுத்த நாள் கொடுப்பதாகவும் சொன்னான். அத்துடன் மருந்து சாப்பிடும் எல்லோருமே பிழைத்துக் கொள்ள மாட்டார்கள் என்றும் இரண்டொருவர் இறந்து விடுவார்கள் என்றும் சொன்னான். அதற்கு சுல்தானும் இரண்டொருவர்கள் இறந்தாலும் பரவாயில்லை. மீதியுள்ளவர்கள் பிழைத்தால் போதும் என்றான். உடனடியாக மருந்து தயாரித்துக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டான்.


நசீரும் அடிமைக் கோட்டையை விட்டு வந்ததும் மருந்து தயாரிக்கவில்லை. அவனிடம் அந்த விஷக்காய்ச்சலை குணப்படுத்த ஏற்கெனவே மருந்து தயாராக இருந்தது. இருந்தும் அவன் வேண்டுமென்றே அந்த மருந்தை அடிமைப் பெண்களுக்கு கொடுக்கவில்லை. அவன் மனதில் வேறு ஒரு திட்டம் இருந்தது. அந்த மருந்துகளை ஒவ்வொரு அடிமைப் பெண்களுக்கும் கொடுப்பதற்காக காகிதத்தில் சிறு சிறு பொட்டலங்களாகக் கட்டி வைத்துக் கொண்டான். மற்றொரு காகிதத்தை எடுத்து, 'தங்கை நசீமாவிற்கு இந்தக் காகிதத்தில் உள்ள மருந்தைச் சாப்பிடவும். இதை நீ சாப்பிட்டால் மூன்று நாட்களுக்கு செத்தபிணம் போல் கிடப்பாய். சுல்தான் நீ இறந்து விட்டதாக கருதி உன்னை சுடுகாட்டுக்கு அனுப்புவான். நான் உன்னை அங்கு வந்து காப்பாற்றுகிறேன்' என்று எழுதினான். பின்னர் அந்தக் காகிதத்தில் வேறு ஒரு மருந்தை வைத்துக் கட்டினான். அந்தப் பொட்டலத்தை மட்டும் அடையாளமாக தனியே வைத்துக் கொண்டான்.



(தொடரும்)


வன ராஜா
மீனைப்பச்சையாகசாப்பிட்டதும் அந்தக் காட்டுமனிதனுடன் விளையாடத்தீர்மானித்தனர்.
தடியனே, நீ போகலாம் இப்போது!
பயந்துகொண்டிருந்த மனிதன் விடுதலை கிடைத்ததும் மகிழ்ச்சியில் ஓட்டமெடுத்தான்.
ஜுமா! உனக்குத்தான் முதல் சந்தர்ப்பம்!
இதோ!
ஆ!
காலில் பாய்ந்த கத்தியுடன் தொடர்ந்து ஓடினான் அம்மனிதன்.
இம்முறை கத்தி அவனுடைய முதுகுக்கு குறிவைக்கப்பட்டது!
இந்தா இதையும் வாங்கிக்கொள்!
ஆஆ!
விழுந்த மனிதன் மறுபடி எழுந்துஓடலானான்.
போதும்! விட்டு விடுவோம்!
இனிமேல் இவனை போகவிட்டுப் பயனில்லை. அப்புறம் நம்மை பிடிக்க இவனது கிராமமே திரண்டுவரும்!
அம்பு குறிதவறாது பாய்ந்தது. ஆனால் அவனோ அம்மூன்று குற்றவாளிகளின் பார்வையில் படாமல்புதருக்குள் சென்று விழுந்தான்.
தொடரும்



புள்ளியிட்ட பகுதிகளை வண்ணமிட்டு மறைந்திருக்கும் நபரைக் கண்டு பிடியுங்கள்.



பசியோடிருக்கும் பிராணியாருக்கு வழி காண்பித்து உதவுங்கள்.

# பின் பியூவின் பூனை ஓவியங்கள்

மதுமதி

ஜப்பான் தேசத்தில் ரொம்பக் காலத்திற்கு முன் ஓர் கிராமம். அதில் ஏழைவிவசாயி ஒருவர் இருந்தார். அவருக்கு ஆறு பிள்ளைகள். அவருக்கு விவசாயத்திலிருந்து வரும் வருமானத்தைக் கொண்டு குடும்பத்தின் தேவைகளையெல்லாம் நிறைவேற்ற முடியவில்லை.

அப்பா படும் சிரமத்தைக்கண்டு மூத்தவன் சின் பியூ, பதினெட்டு வயதுப்பையன் வேலைக்குப் போனான் அடுத்தவனும் சொற்ப சம்பளத்துக்கு கடையொன்றில் வேலைசெய்தான். அடுத்து நான்கு பெண்கள். அம்மாவுக்கு ஒத்தாசை செய்து வந்தார்கள்.

கடைக்குட்டி இருந்தானே அவன் படுசுட்டி; ஆனால் நோஞ்சான் மாதிரி இருந்தான். அவன் பெயர் பின் பியூ.

அப்பாவுக்கும் அம்மாவுக்கும் ஒத்தாசையாக ஏதாவது வேலை செய்ய வேண்டும் என்று பின் பியூவுக்கு ஆசை. ஆனால் அவனை வேலைக்கு அனுப்ப அப்பாவும் அம்மாவும் விரும்பவில்லை.

அவனது உடல் நிலைமைக்கு ஏற்ப எளிய வேலையில் அவனைப் பழக்க வேண்டும் என்று அப்பா விரும்பினார். உடலை வருத்தாமல் செய்யும் வேலை என்ன? கோவிலில் பூஜை செய்வது!

உள்ளூர் கோயிலுக்கு பின் பியூவை அழைத்துப் போனார் அப்பா. பூசாரியைப்பார்த்து சொன்னார்: ''இவன் என் மகன். புத்திசாலிப் பையன். ஆனால் உடலில் போதுமான வலிமை இல்லை. எனது விவசாய வேலைக்கு இவன் லாயக்கு இல்லை. எனவே, இவனை பூசாரி வேலைக்குப் பயிற்சி கொடுங்கள். இவனை உங்கள் சீடனாக ஏற்றுக் கொள்ளுங்கள்''

பின் பியூவை பூசாரி சீடனாக ஏற்றுக் கொண்டார். பூஜை செய்வதற்கு தேவையான வேத தத்துவங்களை பின் பியூவுக்கு சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தார்.

பின் பியூ நன்றாகப் பாடம் கேட்டுப் படித்தான். ஆனால் அவனிடம் ஒரு பழக்கம் இருந்தது. பூசாரி சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கும்போது கேட்டபடியே படம் போட்டுக் கொண்டிருப்பான். எல்லாம் பூனைப்படங்கள்.

கோயில் சுவர்கள், தரை, சுற்றிலுமுள்ள மதில் எல்லாவற்றிலும் பூனைகளின் படங்களை வரைந்து நிறைத்தான்.

காட்டுப்பூனை, வீட்டுப்பூனை, சுட்டிப்பூனை, சோம்பேறிப்பூனை, பூனை பூனை, ஏராளமான பூனைகளின் படங்களை வரைந்தான்.

படங்கள் தத்ரூபமாக இருந்தன. ஆனாலும் பூசாரிக்குப் பிடிக்கவில்லை. ''இதோ பார்! பின் பியூ நீ பூசாரி வேலைக்கு லாயக்கில்லை. நீ சிறந்த ஓவியனாக வருவாய். ஆகவே இங்கிருந்து போய்விடு'' என்றார் பூசாரி.

மிகுந்த மனவருத்தத்துடன் பூசாரியிடம் விடைபெற்றுக் கொண்டான் பின் பியூ.

கடைசியாக பூசாரி அவனிடம் சொன்னார்; ''பின் பியூ! உனக்கு ஒரே ஒரு அறிவுரை சொல்கிறேன். நீ அதன்படி நடந்து கொள். 'இரவில் பெரிய இடங்களில் தங்காதே. சிறிய இடத்தில் மட்டுமே தங்கு! இது தான் எனது அறிவுரை!''

பின் பியூ புறப்பட்டான். எங்கே போவது? வீட்டுக்குப் போனால் அப்பா திட்டுவார்.

பத்து மைல்களுக்கு அப்பால் ஒரு பெரிய கோயில் இருப்பது அவனுக்குத் தெரியும். பெரிய கோயிலில் நிறையப் பூசாரிகள். அத்தனை பூசாரிகளில் யாராவது ஒருவர் தன்னை சீடனாக ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையில் அந்த ஊரை நோக்கி நடக்க ஆரம்பித்தான் பின் பியூ.


நடக்கும் போது ''இரவில் பெரிய இடங்களில் நீ தங்காதே! சிறிய இடத்தில் மட்டுமே தங்கு!'' என்று பூசாரி சொன்ன அறிவுரை நினைவுக்கு வந்தது. ஆனால் புரியவில்லை.

நடந்தான். நடந்தான். நடந்து கொண்டேயிருந்தான். இருட்டி விட்டது.

பாவம் பின் பியூ. அவனுக்கு அந்தப் பெரிய கோயில் சமீபத்தில் நடந்து கொண்டிருக்கும் பயங்கர சம்பவங்கள் தெரியாது.

அந்தப் பெரிய கோயிலில் ஓர் பயங்கர பூதம் புகுந்து கொண்டு அட்டகாசம் செய்கிறதாம் அதனால் பூசாரிகள் பயத்தால் கோயிலுக்குள் போவதே இல்லையாம். வீரர்கள் சிலர் பூதத்தை அடித்து நொறுக்க உள்ளே போனவர்கள் வெளியே வரவேயில்லையாம். இதனால் கோயில் கதவுகள் இரவும் பகலும் மூடியே கிடக்கிறதாம். பாவம், பின் பியூ. இந்தச் செய்தி அவனுக்குத் தெரியாது.

இருட்டி நெடுநேரத்துக்குப் பிறகே பின் பியூ அந்த ஊருக்கு



வந்து சேர்ந்தான். ஊர் மக்கள் எல்லாரும் உணவு முடித்து வீடுகளில் உறங்கிக் கொண்டிருந்தார்கள். பெரிய கோயிலில் புகுந்திருக்கும் பூதம் பற்றி பின் பியூவுக்கு எடுத்துச் சொல்லி எச்சரிக்க யாரும் விழித்திருக்கவில்லை.

பெரியகோயிலை வந்தடைந்தான் பின் பியூ. உள்ளே ஒரே ஒரு விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தாலும் கதவு சாத்தப்பட்டிருந்தது. உள்ளே விளக்கு எரிவதால் பூசாரிகள் இருப்பார்கள் என்று கருதிய பின் பியூ கதவைத்தட்டினான். தாழிடப்படாத கதவு திறந்து கொண்டது.

உள்ளே அகலமான பிரகாரம், உயரமான சுவர்கள், தூண்கள். பூசாரிகள் வருவார்கள் என்று காத்திருந்தான் பின் பியூ

அப்போது தான் ஓர் மூலையில் வண்ணச்சாந்தும் தூரிகைகளும் இருப்பதைப் பார்த்தான். ஓவியம் வரையும் ஆசை வந்துவிட்டது.

சாந்தைக் குழைத்தான். தூரிகையைக் கையில் எடுத்தான். சுவர்கள், தூண்கள் எல்லாவற்றிலும் படங்கள் வரைந்தான், வரைந்து கொண்டேயிருந்தான்.

எல்லாம் பூனைகளின் படங்கள். கருப்புப் பூனை பழுப்புப்பூனை, வீட்டுப் பூனை, காட்டுப்பூனை. பூனை. பூனை, பூனைகள், நூற்றுக்கணக்கான பூனைகள்.

பெரிய பெரிய சுவர்களும் தூண்களும் ஆனதால் பெரிய பெரிய ராட்சதப் பூனைகளாக வரைந்தான் பின் பியூ.

களைத்துப் போனான். எந்தப் பூசாரியும் வராததால் பிரகாரத்திலேயே படுத்துக்கொண்டான்.

ஊரில் பூசாரி கடைசியாக சொன்ன அறிவுரை மனதில் எதிரொலித்தது. "இரவில் பெரிய இடங்களில் தங்காதே. சிறிய இடத்தில மட்டுமே தங்கு!"

சொந்த ஊர்ப் பூசாரியின் புத்திமதி நினைவுக்கு வரவே பெரிய பிரகாரத்திலிருந்து எழுந்த பின் பியூ அதையொட்டியிருந்த சின்னஞ்சிறிய ஒடுங்கலான அறையொன்றில் போய்ப் படுத்துக்கொண்டான்.

காற்று வீசியதில் பிரகாரத்தின் விளக்கு அணைந்தது.

கும்மிருட்டு.

நள்ளிரவு.

பிரகாரத்தில் இன்னதென்று புரிந்துகொள்ள முடியாத பேய்க் கூச்சல் எழுந்ததை சிறிய அறையில் படுத்திருந்த பின் பியூ கேட்டான்.

ரத்தமே உறைகிற மாதிரி சத்தத்தைக் கேட்டதும் பின் பியூ பயத்தால் நடு நடுங்கினாலும் வெளியே வந்து பார்க்க அஞ்சினான். அந்த அறைக்குள்ளேயே அடங்கிக் கிடந்தான். ஆனால் தூங்கவில்லை.

நீண்டநேரத்திற்குப் பிறகு சத்தம் ஓய்ந்தாலும் விடியட்டும் என்று காத்துக்கிடந்தான்.

விடிந்தது சூரியக்கதிர்கள் சாளரங்கள் வழியாக உள்ளே புகுந்து வெளிச்சம் பரவியது.

பின் பியூ வெளியே வந்து பார்த்தான்.

எருமை மாடு உயரமும் பருமனும் கொண்ட ராட்சத எலி ஒன்று ரத்த வெள்ளத்தில் செத்துக் கிடந்தது

யார் கொன்றது? எந்தப்பிராணி இந்தக் காரியத்தைச் செய்தது? பின் பியூவுக்குப் புரியவில்லை.

சுற்றுமுற்றும் பார்த்தான்.

என்ன ஆச்சர்யம்? அவன் வரைந்த பெரிய பெரிய பூனைகளின் வாயெல்லாம் ரத்தம்.

ஓவியப்பூனைகள் உயிர் பெற்று பூத எலியைக் கொன்றுவிட்டனவா?

உயிருள்ள பூனைகளைப் போல தன்னைச்சுற்றிலும் சுவர்களில் காட்சியளித்ததைக்கண்டு பூத எலி அவற்றோடு முட்டி மோதி சண்டை போட்டுச் செத்துவிட்டது.

அந்த ஊர் மக்கள் கூடினார்கள். பூத எலியை ஒழித்த மாவீரன் பின் பியூவைப் பாராட்டினார்கள்.

பின் பியூ புகழ்பெற்ற ஓவியக் கலைஞன் ஆனான். அவன் வரைந்த பூனை ஓவியங்கள் ஜப்பான் நாட்டில் இப்போதும் பல கோயில்களில் இருக்கின்றனவாம்!

# எண்ணங்கள்

...'முத்து காமிக்ஸ் வாரமலர்', அருமை. இல்லை... அருமையிலும் அருமை. ஆல் போல் தழைக்க நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்.

-எஸ். ஜெகநாதன், பேரூர்-641 010

...சிறந்த வண்ணக் கலவையில் சித்திரக் கதைகள். கண்களுக்கும், எண்ணங்களுக்கும் நல் விருந்து.

-எல். பசுபதி, எல். கணேஷ், எல் ராஜேஷ், கோவை-12

அதிமேதை அப்பு உண்மையிலேயே மேதைதான். அவனுக்கு என் வாழ்த்துக்கள்.

-ஏ. ஆர். ராஜமன்னார், திருநெல்வேலி

...படக் கதைகள், வேடிக்கைக் கதைகள், சிரிப்புகள்- அடேங்கப்பா! வெகு ஜோர்!

-சி. எல். ரவிச்சந்திரன், மதுரை.

...மலரைப் படித்து முடித்ததும் எனக்கு வருத்தமே. ஆமாம் ஒரு ரூபாய் மதிப்புள்ள மலருக்கு காசு குறைத்துகொடுத்துவிட்டோமே என்றுதான்.

-மு. ஜெகன்னாதன், சின்னமனூர்.

...நியாயமான விலையில் உயர்தரமான ஒரு வாரமலர். மட்டற்ற மகிழ்ச்சியடைந்தோம். வளர்க. நல்வாழ்த்துக்கள்.


-வெ. ஜனார்த்தனய்யர், பாளையங்கோட்டை.



உங்கப்பா... சுத்த கஞ்சாம்பட்டியார்சே... அவருக்கு லாட்டரிசீட்டிலே விழுந்த பணத்தை என்ன செய்தார்?

எல்லாப் பணத்தையும் பேங்கிலே போட்டுட்டு இப்பவும் இரப்பிச்சைக்கு போய்க்கிட்டிருக்கிறார்.

-ஆர். பி. ராஜ்



நான் பள்ளிக்கூடம் போகணும்னா பத்து அம்ச திட்டத்தை நீங்க ஒத்துக்கணும்!

அதென்னடா பத்து அம்ச திட்டம்?

ஆசிரியர் மாணவர்களை தூக்கி வச்சுக்கணும். ஒரு பீரியட் முடிஞ்சதும் ஒரு கோன் ஐஸ் கொடுக்கணும்.... என்னப்பா மயக்கம் போட்டு விழுந்துட்டீங்க?

-ஆர். பி. ராஜ்



கூட்டத்தில் ஒருவர்: "ஏம்பா, இதுவரைக்கும் மேடையில் பத்து பேர் பேசினாங்க. அப்போ யாருமே கைதட்டலே, இப்போ யாருமே பேசலே; ஆனா கைதட்டறாங்களே ஏன்?"

மற்றவர்: "அட, நீ கவனிக்கிற லட்சணம் இதுதானா? தலைவர் மேடையிலிருந்து தவறிக் கீழே விழுந்தாரே! நீ பார்க்கலையா?"

— இரத்தினம்

Printed and Published by A. M. Thiyagharajhan at Muthu Comics, P. Box No. 253, Chairman P. K. S. Road, Sivakasi - 626123. Editor: M. Saundrapandian, Publishing Editor: Mullai Thangarasan.


அதிமேதை அப்பு
சித்திரம்: செல்லம்
ஃபுட் பால் விளையாடலாம்னு பார்த்தால் பந்து காற்று இறங்கிப் போய்க் கிடக்கிறது.
உன் வாய்தான் வலிக்கும்.
என் கூட வாயேன்!
காற்று இலவசம்னு போட்டிருக்கீங்களே... இந்தப் பந்துக்கு கொஞ்சம் காற்று அடிச்சுக் கொடுக்கலாமா
FREE AIR
GARAGE
ஸாரி தம்பிகளா... பம்ப் ரிப்பேர்!
அதோ ஒத்து ஊதுகிறவர்... அவரைக் கேட்டுப் பார்ப்போம்.
கொஞ்சம் 'தம்' பிடித்து இதை ஊதிக் கொடுங்களேன்.
தயவு செய்து இந்தப் பந்தை ஊதிக் கொடுங்களேன்.
உம்ம்...ம்...ம்ம்...ம்!!! போங்கடா! வியாபார வேளையில் வீண் தொந்தரவு கொடுக்காதீர்கள்!
இனிமேல் இதுக்குள்ளாற பந்துக்கு காற்றடிக்க முடியாதுன்னு தோணுது.
டேய் இங்கே யாருடா....
கால்பந்து பயிற்சி ஆட்டம்
அதை அப்படியே வச்சுக்கோ... என்னுடையதை உள்ளே போட்டு விடலாம்.
ம்... வா இப்போ போகலாம்.
இந்தாங்க உங்க பந்து... உங்க கையிலிருக்கிறதை கொடுங்க... அது என்னுடையது....
சமயோசிதமாக உன் பந்துக்கு காற்றடிச்சுக் கொண்டு விட்டாய்... கெட்டிக்காரப் பையன்.
எதற்கும் மூளை வேணும்!

# முத்து காமிக்ஸ் வாரமலர்

இளம் செல்வங்களின் இதயம் கவரும் இனிய இதழ்!

12-12-1982

பதிப்பாசிரியர்: முல்லை தங்கராசன்

## ஒற்றைக்கண் மர்மம்-5




வெளிவந்த விசித்திர ஜந்துக்களைப் பார்த்த மாயாவிக்கு, தான் கனவு காண்கிறோமா என்ற சந்தேகம் வந்துவிட்டது!
மூளைக்கு கால் முளைத்ததுபோல்... பிரம்மாண்டமான ஒற்றைக் கண்... அப்பப்பா இந்த சைத்தான்கள் எங்கேயிருந்து வந்தன ?
அந்த சைத்தான்கள் தங்கள் பாஷையில் பேசிக்கொண்டன...
டார்ச்சில் ஏதோ கோளாறு ஏற்பட்டிருக்கவேண்டும்... எதிர்பார்த்த விளைவு நிகழக் காணோமே!
நாற்புறமும் கலைந்துசென்று தேடுங்கள்... முதல் நபரைப் போல் சித்திரகுள்ளனாக மாறி எங்காவது ஒளிந்துகொண்டிருக்கப் போகிறான்!
அவர்கள் என்னைத் தேடக்கூடும்... நல்லவேளை நான் மாயஉருவில் இருக்கிறேன். என்னுடைய இரும்புக் கையை மட்டும் மறைத்துக்கொள்ள வேண்டும்!
அவர்கள் பேசிக்கொண்டது மாயாவிக்குப் புரியவில்லை.
மணலுக்குள் தன் கையை நுழைத்துக்கொண்டான் மாயாவி...
...ஒரு ஜந்து அவருக்கு மிக அருகில்வந்து நின்றபோது! தடக் தடக்கென்று அடித்துக்கொண்டது மாயாவியின் இதயம்!
மாயத் தோற்றத்திலிருந்த மாயாவியை அந்த ராட்சஸ கண்களும் கண்டுபிடிக்க முடியவில்லை!
அவனைக் காணோமே!
இந்த இடத்தில்தானே நின்றான்!
...பாரு... ஏதோ சப்தம் கேட்கிறது பார்...
ஓ...ஒரு கார்...கிராமத்தை நோக்கிச் செல்கிறது... இவைகள் காரைக் கண்டுகொண்டுவிட்டன!
அந்த இயந்திரத்தினுள்ளும் மனிதன் இருப்பான்!
டார்ச் பழுதாகிக் கிடக்கிறது... நாமே நேரில் சென்று காரை மறிப்போம்!
கார் நெருங்கி வந்தது...
இந்த சைத்தான்கள் காரை மறிக்கப் போகின்றன... டிரைவரை நான் எச்சரித்தாக வேண்டும்.
தொடரும்

# தண்ணீர் ஊற்றிய குரங்குகள்!..

குப்புசாமியின் தோட்டம் அந்த ஊரிலேயே மிகப்பெரியது. ஏராளமான பழச்செடிகளும் காய்கறிச் செடிகளும் அவனது தோட்டத்தில் இருந்தன.

தோட்டத்தில் மேயவரும் ஆடு மாடுகளை விரட்டியடிப்பதற்காக பத்து குரங்குகளைப் பழக்கி வளர்த்து வந்தான் குப்புசாமி.

மேயவரும் ஆடு மாடுகளையும் பழங்களைத் திருட வரும் சிறுவர்களையும் அந்தப் பத்துக் குரங்குகளும் துடிப்போடு பாய்ந்து விரட்டியடிக்கும்.

பக்கத்துக்கிராமத்தில் மாரியம்மன் திருவிழா. இரண்டு நாட்களும் இரவும் பகலும் வேடிக்கைகளும் கேளிக்கைகளும் விழாவில் கோலாகலமாக நடைபெறும். குப்புசாமி திருவிழாவுக்குப் போக விரும்பினான்.

பத்து குரங்குகளில் வயதில் மூத்த குரங்கின் பெயர் ராமு. இதர குரங்குகளுக்குத் தளபதிபோல ராமுவைப் பழக்கி வைத்திருந்தான் குப்புசாமி.

ராமுக்குரங்கைக் கூப்பிட்டான் குப்புசாமி. "நான் இரண்டு நாள் திருவிழாவுக்குப் போகிறேன். இரண்டுநாளும் காலையிலும் மாலையிலும் செடிகளுக்கு தண்ணீர் ஊற்ற வேண்டும். நீ கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்கவேண்டும். இதர குரங்குகள் பானைகளில் மொண்டு கொண்டுபோய் செடிகளுக்கு ஊற்ற வேண்டும். வறட்சிநேரம். ஆகையால் தண்ணீரை வீணாக்காமல் உபயோகிக்க வேண்டும்" என்று கட்டளையிட்டான் குப்புசாமி.

"சரி!" என்றது ராமு.

குப்புசாமி மாரியம்மன் திருவிழாவுக்கு மகிழ்ச்சியோடு சென்றான்.

மறுநாள் காலையில் ஒன்பது குரங்குகளையும் அழைத்து ராமுக் குரங்கு சொன்னது; "நான் தண்ணீர் இறைப்பேன். நீங்கள் பானைகளில் தண்ணீர் எடுத்து செடிகளுக்கு ஊற்றவேண்டும். வறட்சி நேரமானதால் தண்ணீரைசிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். எனவே செடிகளை நன்றாகப் பாருங்கள். பெரிய வேர் இருந்தால் நிறைய தண்ணீர் ஊற்றுங்கள். சிறிய வேர் இருந்தால் கொஞ்சமாக தண்ணீர் ஊற்ற வேண்டும்"

"அப்படியே செய்கிறோம்" என்று குரங்குகள் தலையாட்டின.

மூன்றாவது நாள் காலை மாரியம்மன் திருவிழா பார்த்தமகிழ்ச்சியோடு வந்து சேர்ந்த குப்புசாமி செடிகள் எல்லாம் பட்டுப்போயிருப்பதைப் பார்த்தான்.

ராமுக்குரங்கை கோபத்தோடு கூப்பிட்டான் குப்புசாமி.

"பெரிய வேருக்கு நிறைய தண்ணீரும், சிறிய வேருக்கு குறைவான தண்ணீரும் ஊற்றச் சொன்னேன். வேர் பெரியதா சிறியதா என்பதைக் கண்டறிய எனது குரங்கு சகோதரர்கள் செடிகளைப் பிடுங்கிப் பார்த்து சிக்கனமாகத் தண்ணீர் ஊற்றினார்கள்" என்று ராமுக் குரங்கு சொன்னது.

குரங்குகளை தண்ணீர் ஊற்றச் சொன்ன தனது முட்டாள் தனத்தை நினைத்து வருத்தப்பட்டான் குப்புசாமி.




விநோதக் கொலையாளி
இன்ஸ்பெக்டர் கருடாவின் இயற்பெயர் ஆனந்த்! ஆனால் சமூக விரோதிகளை கருடனைப்போல் பாய்ந்து குறி தவறாது பிடித்துவிடுவார் என்பதால் 'கருடா' என்ற பெயரே அவருக்கு நிலைத்துவிட்டது. இன்ஸ்பெக்டர் கருடாவின் அரிய சாகஸங்களை தொடர்ந்து காண்போம்...
நாளை விமான நிலையத்தில் பலத்த பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது, பீர்பால்..
...தென் அமெரிக்க தேசம் ஒன்றின் ஜனாதிபதி நம் நாட்டிற்கு வருகைதருகிறார் -மேலும்...
இன்ஸ்பெக்டர், நான் விரட்டுதலுக்காளாகி தப்பியோடி வருகிறேன்.
என் பெயர் படேல். நகர மருத்துவமனையில் டாக்டராகப் பணிபுரிகிறேன்.
சரி, உட்காருங்கள் டாக்டர்.
உங்களை விரட்டுவது யார்?
ஒரு பறவை!
பறவை என்று நான் குறிப்பிடுவது அந்தக் காக்கையைத்தான்!
நான் மருத்துவமனையை விட்டு வெளிவந்ததும் விடாது என்னைப் பின்தொடர்ந்து வருகிறது.
உங்களைத் தாக்க முயற்சித்ததா?
இல்லை, ஸார்... இந்த விஷயத்தில் உங்களால் செய்யக்கூடிய உபகாரம் எதுவுமில்லை என்பதும் எனக்குத் தெரியும்.
யாரிடமாவது இதைச் சொல்லவேண்டுமென்ற எண்ணத்தில்தான் உங்களிடம் கூறினேன். வருகிறேன் ஸார்.


காகம் ஒன்று டாக்டரை துரத்துவது ஏன் பீர்பால்?
அதற்கு உடல்நலமில்லாமல் இருக்குமென நினைக்கிறேன் ஸார்!
அல்லது அவர் சுகமற்றிருக்க வேண்டும்.
இருக்காது...
தொடர்ந்து அவரை விரட்டிச் செல்கிறது!
வா, காக்கையின் நோக்கம் என்னவென்பதைக் கண்டறிவோம்..
டாக்டரை விரட்டிக்கொண்டு காகம் செல்ல இருவரையும் பின்தொடர்ந்தனர் கருடாவும் பல்பீரும்.
கொஞ்ச நேரத்தில்—
டாக்டரின் காரின் மேலேயே அமர்ந்துவிட்டது.
டாக்டர் வண்டியை நிறுத்திவிட்டார். காகம் அவரை ரொம்பவும்தான் பீதியடையச் செய்கிறது!
டாக்டர், மேலே பாருங்கள்!
ஆ!
உங்களைக் காயப்படுத்தவில்லையே?
இல்லை, இன்ஸ்பெக்டர்.
முதலில் காகம் உங்களை விரட்டி வந்தது. இப்போது கழுகு ஒன்று தாக்குகிறது...
நடப்பது ஒன்றும் புரியவில்லை, இன்ஸ்பெக்டர்...
ஆனால் என் வருங்கால மனைவிக்கு இது சம்பந்தமாக ஏதேனும் தெரிந்திருக்குமென நினைக்கிறேன்.
தொடரும்

# இடையனின் கனவு!

இது மிகவும் பழைய கதை. பல நாடுகளில் சொல்லப்பட்டு வரும் கதை. ஆனால் இக்கதை எப்போது தோன்றியது என்று யாருக்கும் தெரியாது. ஆனாலும் இது ஒரு கதை. கனவு நனவான கதை.

பல்லாண்டுகளுக்கு முன்பு, ஒரு இடையன் இருந்தான். அவன் பெயர் தாமஸ். நாள் தோறும் ஆடுகளை ஓட்டிக் கொண்டு மலையடிவாரத்துக்குப் போவான். பகல் முழுதும் புல் மேயும் ஆடுகளையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு மாலையில் ஆடுகளோடு வீடு திரும்புவான்.

இந்த வாழ்க்கை அவனுக்கு அலுத்துவிட்டது. பகலில் யாரோடும் பேசுவதற்கு இல்லை. யாரோடும் விளையாட வாய்ப்பில்லை. வானத்தையும், புல் வெளியையும் அதில் மேயும் ஆடுகளையும் பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர வேறு கதியே இல்லை.

எனவே அவன் பகல் கனவில் ஆழ்ந்ததில் ஆச்சர்யம் இருக்க முடியாது. உலகத்தைச் சுற்றி வருவதைப் போலவும், பல சாகஸங்கள் செய்வது போலவும் மரத்தடியில் பகல் கனவுகள் காண்பான் தாமஸ்.

ஒரே ஒரு கனவு மட்டும் அவனுக்கு இரண்டாம் தடவையாக வந்தது. அந்தக் கனவில் அவன் பல சாகஸங்களைச் செய்கிறான். அழகான இளவரசியை கல்யாணம் செய்து கொள்கிறான். ஸ்பெயின் தேசத்துக்கு அரசனாகிறான்.

''இந்தக் கனவு இன்னொரு முறை வருமானால் நான் ஸ்பெயின் தேசத்துக்குப் போவேன். கனவு நனவாகிறதா, இல்லையா? என்று பார்ப்பேன்'' என்று தாமஸ் மனதுக்குள் சொல்லிக் கொண்டான்.

என்ன ஆச்சர்யம்! மறுநாள் கதகதப்பான பகல் போதில் அந்தக் கனவு அவனுக்கு மூன்றாம் தடவையாக வந்தது. முந்திய இரண்டு நாள் கனவின் முடிவைப் போலவே மூன்றாம் நாள் கனவின் முடிவிலும் அவன் ஸ்பெயின் தேசத்துக்கு மன்னன் ஆனான்.

அன்று இரவு வீடு திரும்பியதும் தாய் தந்தையரிடம் தனது கனவு பற்றிச் சொல்லி தன்னை ஸ்பெயின் தேசத்துக்குப் போக அனுமதிக்கும்படி மன்றாடினான் தாமஸ். முதலில் அவர்கள் ஏளனமாகச் சிரித்தார்கள். இடைவிடாமல் தாமஸ் கெஞ்சிக் கேட்கவே இறுதியில் சம்மதித்தார்கள்.

மறுநாள் காலையில் வழியில் உண்பதற்கான சாப்பாட்டுப் பொட்டலங்களுடன் ஸ்பெயின் நோக்கி தாமஸ் புறப்பட்டான்.



பகல் முழுதும் நடந்தான். இரவில் ஒரு காட்டில பெரிய மரத்தடியில் தங்கினான். மரத்தின் மறு பக்கத்தில் சில மனிதர்களின் பேச்சுக் குரல் கேட்டது. ஒளிந்திருந்து பார்த்தான். மூன்று திருடர்கள். தாங்கள் திருடி வந்த மூன்று பொருள்கள் பற்றி மிகவும் சந்தோஷமாக அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். தோலினால் தைக்கப்பட்ட ஒரு ஜோடி பழைய செருப்புகள், பழுப்பு நிறம் பரவிய கோட்சட்டை, துருப்பிடித்த வாள்! இந்த மூன்றைக் குறித்துத்தான் திருடர்கள் அபாரமாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

விடியும் நேரம் திருடர்கள் தூங்கிக் கொண்டிருந்த போது தாமஸ் மெதுவாக எழுந்து சென்று செருப்புகளையும், கோட்சட்டையையும், வாளையும் எடுத்துக் கொண்டான்.

''இவற்றுக்கு உரியவர்களிடம் நாம் கொடுத்துவிட வேண்டும்'' என்று மனதுக்குள் தாமஸ் சொல்லிக் கொண்டான். ''அது வரை இந்த செருப்புகளை நான் காலில் போட்டுக் கொண்டால் அவர் மன்னித்து விடுவார்'' என்று நினைத்து அந்தச் செருப்புகளை காலில் போட்டுக் கொண்டான்.

இவன் புறப்பட்டுப் போய்க் கொண்டிருந்த போது திருடர்கள் துரத்திக் கொண்டு வருவதைக் கண்டான்.

தாமஸ் வேகமாக காலை எடுத்து வைத்து ஓடத் தொடங்கினான். என்ன ஆச்சர்யம். ஒவ்வொரு காலை எடுத்து வைக்கும் போதும் ஒரு மைல் தூரம் அவன் முன்னேறினான். சிறிது நேரத்தில் செருப்புகள் தாமஸைத் தூக்கிக் கொண்டு வானத்தில் பறந்தன.

ஆம், அந்தச் செருப்புகள் மந்திரச் செருப்புக்கள். தாமஸ் பல நூறு மைல் தூரத்தை சிறிது நேரத்தில் கடந்து விட்டான். திருடர்களால் அவனைப் பிடிக்க முடியவில்லை.

ஓய்வுக்காக ஓரிடத்தில் தாமஸ் அமர்ந்தான். "இந்த கோர்ட்டை நான் அணிந்து கொண்டால் எப்படியிருக்கும்?" திருடர்கள் திருடிவந்த கோர்ட்டை அணிந்துகொண்டான். பாக்கெட்டில் கைவிட்டுப் பார்த்தான். உள்ளே எதுவுமே இல்லை. ஆனால் கையை வெளியே எடுக்கும்போது அதற்குள்ளிருந்து தங்கக் காசுகள் வெளி வந்தன. மீண்டும் கைவிட்டான். மீண்டும் தங்கக் காசுகள்.

"ஓ! இதனால் தான் திருடர்கள் இந்தப் பொருட்களைப் பற்றி வெகுவாகப் புகழ்ந்திருக்கிறார்கள். என்ன இருந்தாலும் இவற்றுக்குச் சொந்தக்காரரைக் கண்டு பிடித்துக் கொடுத்து விட வேண்டும்."

தாமஸ் மீண்டும் தனது பயணத்தைத் தொடங்கினான். காடுமலை கடந்து வந்து கொண்டிருந்தபோது ஓரிடத்தில் யாரோ சிலர் கூக்குரலிடுவது கேட்டது. மலை உச்சியில் நின்று கீழே பார்த்தான் தாமஸ்.

முதியவர் ஒருவர், மற்றும் சிலர், இவர்களைச் சுற்றிலும் ஆயுதம் தாங்கிய பலர் நின்று கொண்டு அவர்களை மிரட்டிக் கொண்டிருந்தனர்.

தாமஸ் கோழையல்ல. பெரியவரையும் அவர்களைச் சேர்ந்தவர்களையும் காப்பாற்ற நினைத்தான். தன் கையிலிருந்த பழைய வாளை எடுத்துக் கொண்டு கீழே போக நினைத்து அதை உறையிலிருந்து உருவினான்.

உறை விட்டு வாள் வெளியே வந்த உடன் பெரிய அதிசயம் நிகழ்ந்தது. தளபதி உட்பட நூற்றுக்கணக்கான போர் வீரர்கள் அணிவகுத்து தாமஸ் எதிரே நின்றார்கள்.

"எஜமானே! தங்கள் உத்தரவு என்ன?" தளபதி கேட்டான்.

"என்னைப் பின் தொடர்ந்து வாருங்கள்!" என்றான் தாமஸ். அவனும் அவனது படையினரும் மலையிலிரு'து கீழே இறங்கினர்.

இந்த மாபெரும் பட்டாளத்தைக் கண்டதும் பெரியவரையும் அவரைச் சேர்ந்தவர்களையும் தாக்கிக் கொண்டிருந்த கொள்ளைக் கும்பல் பயந்து ஓடியது.

சிறிது நேரத்திலேயே தாமஸுக்கு விஷயம் புரிந்துவிட்டது. அவனால் பாதுகாக்கப்பட்ட அந்தப் பெரியவர் தான் ஸ்பெயின் தேசத்து அரசர். பக்கத்தில் நின்று கொண்டிருந்தது இளவரசி. அரண்மனைப் பணியாட்களுடன் வந்து கொண்டிருந்த இவர்களைத் தான் கொள்ளைக் கும்பல் வழி மறித்துத் தாக்கியிருக்கிறது.

தன்னைப் பாதுகாத்த தாமஸை ராஜா பாராட்டி நன்றி சொன்னார். அவனை தனது தேசத்துக்கு அழைத்துச் சென்றார்.

இளவரசி தாமஸை விரும்பவே அவர்களுக்கு திருமணம் செய்து வைத்தார் மகாராஜா.

அப்புறம் என்ன?

வயதாகி விட்டதால் ராஜா தாமஸை பட்டங்கட்டி பதவியில் அமர்த்தினார். தாமஸ் ஸ்பெயின் தேசத்து மன்னன் ஆனான்.





பதவியில் அமர்ந்ததும் அந்த மூன்று மந்திரப் பொருட்களின் உரிமையாளரை தாமஸ் கண்டு பிடித்தான்.

அவர் ஒரு பெரிய மந்திரவாதி. நடந்ததையெல்லாம் சொல்லி அவரிடம் செருப்புக்களையும் கோர்ட்டையும் வாளையும் கொடுத்தான் தாமஸ்.

"இது வரை நல்ல காரியங்களுக்குத் தான் இவற்றை நீ பயன்படுத்தினாய். இனியும் அவ்வாறு தான் செய்வாய். எனவே இவற்றை நீயே வைத்துக் கொள்" என்று சொல்லிவிட்டு மந்திரவாதி போய் விட்டார்.

இது தான் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த தாமஸின் பகல் கனவு பலித்த கதை.


கபிஷ்
1
கானகத்திற்கு வேட்டைக்குச் சென்ற ரங்கையா, குட்டிக் குரங்கு கபிஷ் டமாரம் ஒன்றைத் தட்டிக்கொண்டிருக்கக் கண்டான்.
டமார ஒலியை வெகுவாக ரசித்துக் கொண்டிருந்தது கபிஷ்.
குரங்குகளுக்கு விளையாட்டுப் பொருள்கள் என்றால் வெகுவிருப்பம்...
...பந்து கிடைத்தால் இது இன்னும் ஆர்வமாக விளையாடக் கூடும்.
மறுநாள் குன்றினருகே பந்து ஒன்று கிடக்கக் கண்டது கபிஷ். உருட்டி விளையாடத் துவங்கியது.
சபாஷ்!
குன்றின் சரிவில் ஓடிவரும்போது நிலைதடுமாறி விழுந்து உருண்டது கபிஷ்.
அகப்பட்டுக் கொண்டது!
டொக்!!
2
கபிஷை பெரிய கூடை ஒன்றில்போட்டு இறுகக் கட்டினான்...
...தலையில் சுமந்துகொண்டு காட்டைவிட்டு வெளியேறினான்.
கிரவுன் சர்க்கஸ் நகரில் முகாமிட்டிருக்கிறது. அவர்களுடன் பேரம் பேசி இந்தக் குரங்கை 2000 ரூபாய்க்கு விற்க வேண்டும்.
சர்க்கஸ் கூடாரத்தில்—
இது ஒரு விசேஷமான குரங்கு. விரும்பியவாறு இது தன் வாலை நீட்டக்கூடியது.
ஒரு குட்டிக் குரங்கிற்கு ரூ. 2000 விலை அதிகம்.
இந்தக் குரங்கு வாலை நீட்டி நான் பார்த்ததில்லை. அது சாத்தியம் என்று நான் நம்பவுமில்லை. இது பயிற்சி இல்லா உபயோகமற்ற குரங்காகவே தோன்றுகிறது.
இந்த அறையில் இது பூட்டப்பட்டு கிடக்கட்டும். விளையாட ஒரு கால்பந்து கொடுங்கள். பயம் தெளிந்ததும் வேடிக்கைகள் செய்துகாட்டும்.
இதன் விலை ரூ. 200 தான்.
ரூபாய் 2000க்கு ஒரு பைசா குறைந்தாலும் வாங்கமாட்டேன். எனக்கொன்றும் பணத்திற்கு அவசரமில்லை. நான் நாளை வருகிறேன். இது உங்கள் பராமரிப்பில் இருக்கட்டும்.
பின்னர்—
பார்! உனக்காக இந்த பிளாஸ்டிக் பந்தைக் கொண்டு வந்திருக்கிறேன்- வேடிக்கை செய்து காண்பி பார்க்கலாம்.


சர்க்கஸ் முதலாளிக்கு வேடிக்கை செய்து காண்பிக்கும் மனநிலையில் கபிஷ் இல்லை.
குரங்கே, வேடிக்கை செய்து காண்பி!
பின்னர் மாலை வேளையில்—
ஸார்! நான்கு திருடர்கள் ஜெயிலிலிருந்து தப்பி விட்டார்களாம்.
போலிஸாரின் தகவல்படி இந்தப் பகுதியில்தான் சுற்றிக் கொண்டிருக்கிறார்களாம்.
அப்படியானால் நம்மிடமிருக்கும் பணத்தைப் பத்திரப்படுத்தி வைக்க வேண்டும்.
சரியான யோசனை! நூறு ரூபாய் நோட்டுக்களை இந்தப் பந்திற்குள் பத்திரப்படுத்தி வைப்போம். யாரும் பணத்தை அங்கே தேட மாட்டார்கள்.
பணம் இப்போது பாதுகாப்பாய் உள்ளது. காற்றை நிரப்பிவைப்போம். ரகசியம் யாருக்கும் தெரியாது.
ஆனால் கபிஷிற்குத் தெரியும் என்பதை அவன் உணரவில்லை.
உள்ளே பணத்தைப் போட்டு வைத்திருக்கிறான்.
மறுநாள் காலை—
செய்தி
திருடர்கள் நால்வரும் பிடிபட்டனர்.




திருடர்களைப்பற்றி இனி பயமில்லை. ஆனால் பணம் உள்ளேயே இருக்கட்டும். வேலை ஆட்களுக்கு சம்பளத்தை தராமல் ஒத்திவைப்போம்.
பின்னர்—
ஸார்! சம்பளம்!
பாங்கில் டெப்பாசிட் செய்த பணத்தையெல்லாம் செலவழித்தாயிற்று. கையில் பைசாக் காசு கிடையாது ..
...சம்பளத்தை அடுத்த மாதம் சேர்த்துத் தருகிறேன்.
எங்களுக்கு உடனடியாக வேண்டும் ஸார்.
நான் செயல்பட வேண்டிய தருணம் வந்துவிட்டது.
கபிஷின் வால் நீளமாக வளர்ந்து மேஜைமீதிருந்த கத்தியைப் பற்றியது.
வேகமான கீறலில் பந்து படாரென வெடித்தது!
ஆஹா! நூறு-ரூபாய் நோட்டுக்கள்!
சம்பளம் தர பணம் இல்லை என்று கூறினீர்களே!
பணத்தை என்னிடம் கொடுங்கள். சம்பளத்தை தந்துவிடுகிறேன்.
இந்தக் குரங்கினால்தான் நமக்கு சம்பளப்பாக்கி கிடைத்தது. அதற்கு விடுதலை தந்து விடுவோம்.
ஆம். அவிழ்த்து விட்டு விடுவோம்.
மிகுந்த மகிழ்ச்சியோடு அறையைவிட்டுத் தாவிச் சென்றது கபிஷ்.
பண்டிலாவிடம் நம் சாகசச் செயலைக் கூறவேண்டும்.
முற்றும்.

## தொடர்கதை



# 5

# காடுபட்டணத்து அடிமைகள்

முல்லை தங்கராசன்

மறுநாள் நசீர் சுல்தானுடன் அடிமைப் பெண்கள் வைக்கப்பட்டிருக்கும் கோட்டைக்குச் சென்றான். முதல் நாள் போலவே சுல்தான் அந்த துவாரத்தின் அருகே நின்று கொண்டு ஒவ்வொரு பெண்ணின் பெயரையும் சொல்லிக் கூப்பிட்டான். கதீஜா ... பாத்திமா ... ஜுபேதா ... நூர் ஜஹான் நசரத் பேகம்...என்று ஒவ்வொரு பெயராகச் சொல்லி அழைக்க ஒவ்வொரு பெண்களும் கையை துவாரத்தின் வழியாக வெளியே நீட்ட நசீரும் ஒவ்வொரு பெண் கையிலும் ஒவ்வொரு பொட்டலமாகக் கொடுத்துக்கொண்டே வந்தான்.

பின்னர் சுல்தான் நசீமா என்று பெயர் சொல்லி அழைத்தான். நசீர் உடனே உஷாரானான். தான் தனியாக எழுதி வைத்திருந்த அந்தப் பொட்டலத்தைத் தயாராக எடுத்து வைத்துக் கொண்டான். துவாரத்தின் வழியாக கை வெளியே வந்ததும் அந்தப் பொட்டலத்தை கையில் வைத்து அழுத்தி, 'பொட்டலத்தை பிரித்து, நன்றாக பார்த்து மருந்தைச் சாப்பிடு' என்று சொன்னான். வேறு யாருக்கும் நசீர் இவ்வாறு சொல்லவில்லை. தனது குரல் தனது தங்கை நசீமாவுக்கு தெரியவேண்டுமென்பதற்காக சொன்னான். பிறகு எல்லோருக்கும் மருந்து கொடுத்து முடிந்ததும், சுல்தானிடம், தான் கொடுத்த மருந்தினால் எல்லோரும் குணமடைந்து விடுவார்கள் என்றும், அப்படி குணமடையாமல் யாராவது ஒருவர் இறந்தாலும் தான் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொள்வேன் என்றும் சொன்னான். பின்னர் நசீர் தனக்காக ஒதுக்கப்பட்டுள்ள அறைக்குச் சென்றான்.

சுல்தானை விட்டு தனது அறைக்குச் சென்றதும், நசீர் அவசரம், அவசரமாக தனது வைத்தியர் வேடத்தைக் கலைத்தான். தனது தலையிலிருந்த பெரிய தொப்பியை எடுத்தான். பொய்யான தாடி மீசையைப் பிடுங்கி எறிந்தான். உண்மையான வைத்தியர்கள் போடும் பெரிய அங்கியையும் கழட்டினான். பிறகு இரவோடு இரவாக அவற்றையெல்லாம் தனது அறைக்கு அருகிலிருந்த கிணற்றில் போட்டான். அதன் பின்னர் நவாப்பிற்குச் சொந்தமான சுடுகாட்டில் போய் ஒரு மரத்தின் மீது ஏறி ஒளிந்து கொண்டான்.

மறுநாள் காலை சுல்தான் அடிமைப் பெண்கள் இருக்கும் கோட்டைக்குச் சென்று பார்த்தான். வைத்தியர்கள் மருந்தினால் எல்லா அடிமைப் பெண்களும் குணமாகியிருப்பதைக் கண்டான். ஆனால் நசீமா என்ற ஒரே ஒரு அடிமைப் பெண் மட்டும் இறந்துவிட்டதை அறிந்தான். ஆனால் அதற்காக அவன் கவலைப்படவில்லை. மீதியுள்ள பெண்கள் வைத்தியரின் மருந்தினால் பிழைத்ததை எண்ணி சந்தோஷப்பட்டான். இறந்து போன அந்தப் பெண்ணை அடக்கம் செய்ய உத்தரவிட்டான். அரண்மனைக்குத் திரும்பியதும் வைத்தியரை அழைத்து தக்க சன்மானம் கொடுக்க எண்ணினான். ஆட்களை அழைத்து வைத்தியரை அழைத்து வரும்படி கட்டளையிட்டான். அவனது ஆட்கள் நசீரை அறை முழுதும் தேடினார்கள். பின்னர் அறைக்குப் பக்கத்தில் உள்ள கிணற்றை எட்டிப் பார்த்தார்கள். கிணற்றில் வைத்தியவரின் உடைகள் மிதந்து கொண்டிருந்தன. வைத்தியர் கிணற்றில் விழுந்து விட்டதாக எண்ணினார்கள். ஓடிப் போய் இதனை சுல்தானிடம் சொன்னார்கள். சுல்தானும் வைத்தியர் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டதாகவே எண்ணினான். ஏனென்றால் வைத்தியர் மருந்து கொடுத்து யாராவது பிழைக்கவில்லை என்றால் தற்கொலை செய்து கொள்வேன் என்று சொல்லியிருந்தாரல்லவா? அதன்படி நசீமா என்ற ஒரு அடிமைப் பெண் இறந்து விட்ட செய்தி கேட்டு வைத்தியர் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டார் என்று சுல்தான் நம்பினான். அதனால் வைத்தியரைப் பற்றி கவலைப்படவில்லை. சுல்தானுடைய ஆட்களும் இறந்து போன அடிமைப் பெண்ணை ஒரு மரப்பெட்டியில் வைத்து சுடுகாட்டில் புதைப்பதற்காக எடுத்துச் சென்றார்கள்.

சுல்தானின் அரண்மனையைச் சேர்ந்த சுடுகாட்டில் ஒரு மரத்தின் மீது ஒளிந்து கொண்டிருந்த நசீர், தான் ஏற்கெனவே கையில் கொண்டு வந்திருந்த கருப்புப் போர்வையை எடுத்துப் போர்த்துக் கொண்டான். சுல்தானின் ஆட்கள் பெட்டியைச் சுமந்து கொண்டு வந்து வைத்துவிட்டு பிணத்தை புதைப்பதற்காக குழி தோண்ட ஆரம்பித்தார்கள். மரத்தின் மேலிருந்த நசீர் பேய்கள் ஊளையிடுவது போலக் குரலை மாற்றி மாற்றி கூச்சல் போட்டான். தான் உட்கார்ந்திருந்த மரத்தின் கிளையை உலுக்கினான். அது அரண்மனையைச் சேர்ந்த சுடுகாடு. அங்கு அந்நியர்கள் யாரும் உள்ளே நுழைய முடியாது. எனவே பேய் தான் கூச்சலிடுகிறது என்று சுல்தானின் ஆட்கள் நம்பினார்கள். மரத்தின் மீது அண்ணாந்து பார்த்தார்கள். ஏதோ ஒரு கரிய உருவம் தென்படவே நிச்சயமாக அது பேய்தான் என்று நம்பினார்கள். குழி வெட்டுவதை விட்டுவிட்டு ஒரே ஓட்டமாக அந்த இடத்தைவிட்டு ஓட்டமெடுத்தார்கள்.

சுல்தானின் ஆட்கள் அந்த இடத்தை விட்டு ஓடியது நசீர் மரத்தைவிட்டு வேகமாக இறங்கினான். சுற்று முற்றும் பார்த்து விட்டு அவசர அவசரமாகப் பெட்டியைத் திறந்தான். பெட்டியைத்திறந்து உள்ளே பார்த்ததும் அதிர்ச்சி அடைந்தான். ஏனெனில் பெட்டியினுள்ளே நசீமா இல்லை. பதிலாக வேறு ஒரு பெண் இருந்தாள். நசீருக்கு ஒன்றும் புரியவில்லை. நசீமா இருக்க வேண்டிய இடத்தில் இவள் எப்படி வந்தாள்? என்று எண்ணினான்.

பிணம் போல மயங்கிக் கிடந்த அவளது மயக்கத்தை தெளிய வைப்பதற்காக தனது மடியிலிருந்த ஒரு



மூலிகையை எடுத்து அந்தப் பெண்ணின் மூக்கின் அருகே காண்பித்தான். சற்று நேரத்தில் அந்தப் பெண் மயக்கம் தெளிந்து கண் திறந்தாள். உடனே நசீர் கோபமாக அந்தப் பெண்ணிடம், "என்னுடைய தங்கை நசீமாவைத் தானே இறந்தது போல வரச்சொல்லி கடிதமும், மருந்தும்கொடுத்தேன். ஆனால் இந்தப் பெட்டியில் நீ எப்படி வந்தாய்? யார் நீ? என் தங்கை நசீமா எங்கே? என்று?"

கேட்டான். அதற்கு அந்தப் பெண், தன்னுடைய பெயர்கலீகா என்றும், தான் காபூலி பட்டணத்தை சேர்ந்த சுல்தான் ஒருவருடைய மகள் என்றும் கடற் கொள்ளைக் காரர்கள் தன்னை ஏலத்தில் இந்த சுல்தானிடம் விற்று விட்டதாகவும் கூறினாள். மேலும் இந்த சுல்தான் தான் விலைக்கு வாங்கும் பெண்களின் உண்மையான பெயரை எல்லாம் மாற்றி வைத்து விடுவது வழக்கம். அதன்படி கலீகா என்ற தனது பெயரை நசீமா என்று மாற்றி வைத்து விட்டான். நசீரின் தங்கை நசீமாவின் பெயரை பாத்திமா என்று வைத்துவிட்டான். இதனால் நசீரும் கலீகாவை நசீமா என்று சுல்தான் அழைத்த போது அவளை தனது தங்கை என்று எண்ணி கடிதத்தையும், மயக்கமருந்தையும் கொடுத்து விட்டான். இதையெல்லாம் கேட்ட பிறகு நசீருக்கு குழப்பம் நீங்கி எல்லாம் விளங்கியது. ஆனால் தனது தங்கையைக் காப்பாற்ற தான் செய்த கடைசி முயற்சி வீணாகி விட்டதை எண்ணி வருத்தப்பட்டான். தங்கை இல்லாமல் தான் மட்டும் எப்படி நாடு திரும்புவது? தந்தையின் முகத்தில் எப்படி விழிப்பது என்று எண்ணிக் கலங்கினான்.

நசீரின் குழப்பத்தையும் கவலையும் கண்ட கலீகா அவனுக்கு ஆறுதல் சொன்னாள். தன்னை சுல்தானிடமிருந்து காப்பாற்றியதற்கு நன்றிக் கடனாக நசீமாவை காப்பாற்ற தான் உதவி செய்வதாக உறுதி அளித்தாள். கலீகா சுல்தானின் அடிமையாக ஐந்து ஆண்டுகள் அவனது கோட்டையில் இருந்திருக்கிறாள். அதனால் அவளுக்குக் கோட்டையில் உள்ள எல்லா இடங்களும் தெரியும். முன்பொரு சமயம் சுல்தானுடன் அரண்மனையையும் சுற்றிப் பார்த்திருக்கிறாள். மலைமீது இவர்களை அடைத்து வைத்திருக்கும் கோட்டைக்கும், அரண்மனையிலுள்ள ஒட்டக லாயத்திற்கும் ஒரு சுரங்கப்பாதை உண்டு. இதனை சுல்தானின் முன்னோர்கள் ஏற்படுத்தி இருந்தார்கள். போர்க்காலங்களில் பகைவர்கள் மலை மீதுள்ள கோட்டையைச் சூழ்ந்து கொண்டால், இந்த சுரங்கத்தின் வழியாக ஒட்டகம், குதிரை லாயத்திற்கு வந்து குதிரை மீதும் ஒட்டகம் மீதும் ஏறி தப்பிச் சென்றுவிடுவார்கள். ஆனால் இப்பிடி ஒரு சுரங்கப்பாதை இருப்பது சுல்தானுக்குத் தெரியாது. ஐந்து வருடங்களாக அடைப்பட்டிருந்த கலீகா இதை எப்படியோ கண்டு பிடித்து விட்டாள். ஒரு நாள் யாருக்கும் தெரியாமல் இந்த சுரங்கப் பாதையின் உள்ளே நுழைந்து சென்று பார்த்திருக்கிறாள். வெளியே வரும் வழி அடைப்பட்டிருந்தது. யாராவது ஒட்டகலாயத்திற்குள் சென்று சுரங்கத்தின் வெளிக் கதவைத் திறந்து விட்டால்தான் சுரங்கத்தின் உள்ளே இருப்பவர்கள் வெளியே வர முடியும். எனவே அந்தக் கதவைத் திறந்து அது வழியே போனால் நசீமாவை காப்பாற்றலாம். ஆனால் ஒட்டக லாயத்திற்குள் எப்படிச் செல்வது? முதலில் அரண்மனைக்குள் செல்ல வேண்டும். அரண்மனைக்குள் நுழைந்தாலும் லாயத்திற்குள் நுழைவது மிகவும் கடினம். ஏனென்றால் சுல்தானின் லாயத்தில் ஏராளமான விலையுயர்ந்த குதிரைகளும், ஒட்டகங்களும் இருந்ததால், பலத்தகாவல் போடப் பட்டிருந்தது.



நசீரும், கலீகாவும் அந்த சுரங்கப்பாதைக்குள் எப்படிச் செல்வது என்று வெகு நேரம் யோசனை செய்தும் ஒன்றும் புலப்படவில்லை. அப்போது நசீருக்கு திடீரென தனது நண்பன் சலீமின் நினைவு வந்தது. சலீம் அன்று தனக்கு கொடுத்த மோதிரத்தை எடுத்தான். எப்படியும் சலீம் தனக்கு உதவக்கூடும் என்று எண்ணினான். எனவே அந்த மோதிரத்தை எடுத்துத் தேய்த்தான். அதைத் தேய்த்த சிறிது நேரத்தில் சலீம் ஒரு குதிரைமீது அங்கே வந்தான். சலீமைக் கண்டவுடன் நசீருக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. நசீரும் கலீகாவும் சுல்த்தானின் சுரங்கப் பாதையைப் பற்றிச் சொன்னார்கள். சலீம் கொஞ்சநேரம் யோசனை செய்துவிட்டு இருவரையும் அழைத்துக் கொண்டு அருகிலிருந்த காட்டிற்குச் சென்றான்.

காட்டிற்குபோனதும்சலீம் பெரிய பெரிய ஒட்டகத் தோல்களைத் தேர்ந்தெடுத்தான். பின்பு அவைகளை ஒட்டகங்களைப் போல உருவங்கள் ஆக்கி அந்த ஒட்டகங்களின் உடம்பிற்குள் ஆயுதங்களுடன் தனது ஆட்களையும் நசீரையும் உள்ளே ஒளித்து வைத்தான். விலை உயர்ந்த உண்மையான குதிரைகளையும், ஒட்டகங்களையும் ஓட்டிக் கொண்டு அதன் நடுவிலே ஆட்கள் நிரம்பிய போலியான ஒட்டகங்களையும் ஓட்டிக்கொண்டு சுல்தானின் நகருக்குப் போனான். தான்|ஒரு ஒட்டக வியாபாரி போலமாறு வேடம் போட்டு கொண்டான். கலீகாவை காட்டில் தனது கூடாரத்திலேயே விட்டு விட்டு வந்திருந்தான்.

சலீம் ஒட்டகங்களுடன் நகருக்குள் நுழைந்து அரண்மனைக்குப் போய் தான் விலை உயர்ந்த குதிரைகளையும், ஒட்டகங்களையும் சுல்தானுக்கு விற்க விரும்புவதாகச் சொன்னான். விலையையும் வேண்டுமென்றே குறைத்துச் சொன்னான். மிக உயர்ந்த ஜாதி குதிரைகளையும், ஒட்டகமும் குறைந்த விலைக்கு கிடைக்கிறது என்றவுடன சுல்தான் எல்லாவற்றையும் விலைக்கு வாங்கிக் கொண்டான். அவைகள் அனைத்தையும் லாயத்தில் அடைக்கும்படி உத்தரவிட்டான். பணத்தை பெற்றுக் கொண்ட சலீம் அரண்மனைக்கு வெளியே வந்துஒர் இடத்தில் பதுங்கிக் கொண்டான்.

சுல்தானின் ஆட்கள் உண்மையான ஒட்டகங்களுடன் போலியான ஒட்டகத்தையும் ஓட்டிச் சென்று லாயத்தில் அடைத்துப் பூட்டி வைத்தார்கள். ஒட்டகத்தின் உள்ளே ஒளிந்து கொண்டிருந்தநசீரும், ஆட்களும்இரவு நேரம் வரட்டும் என்று காத்திருந்தார்கள். இரவு நேரம் வந்ததும் நசீர் மெதுவாக ஒட்டகத்தை விட்டு கீழே இறங்கிவந்தான். காவலுக்கு நின்றிருந்த சுல்தானின் ஆட்கள் லாயத்திற்கு வெளியே நின்று கொண்டிருந்தார்கள். சத்தம் செய்யாமல் மெதுவாக சுரங்கத்தின் கதவு இருக்கும் இடத்திற்குச் சென்றான்.

-தொடரும்


வன ராஜா
5
அவ்வழியாக வந்த வேடுவர் இருவர் அருகாமையிலிருந்து முனகல் சத்தம் வருவதைக்கேட்டு நின்றனர்.
அதோ! அங்கே!
வா, சீக்கிரம் போவோம்! உயிர் இருப்பதுபோல் தெரிகிறது!
செத்துக்கொண்டிருந்த அம்மனிதனின் அருகில் சென்று அமர்ந்தனர் இருவரும்...
வனராஜாவிடம் சொல்லுங்கள்... மூன்று பிசாசுகள் நம்முடைய தீவில்...
ஓ! உயிர் பிரிந்துவிட்டதே!
தாங்கள் கொல்ல முற்பட்ட காட்டுமனிதனைத் தேடிவந்துகொண்டிருந்த மூவருக்கும் எதிரே—
கிராமம்!
அங்கே நமக்குவேண்டிய உணவு உடை அனைத்தும் கிடைக்கும்.
அது எப்படி?
நமக்குத்தேவையானதைப் பெறவேண்டுமானால் கிராமமக்கள் நமக்கு அடிபணிபவர்களாக இருக்க வேண்டும்!
நல்லது பையன்களா! கொஞ்சம் யோசிக்க விடுங்கள்...
வேடுவர்கள் வனராஜாவிடம் போய்ச்சேர்ந்தனர்.
பவனு இறந்து விட்டான்.
எப்படி?
மூன்று கத்தி ஒரு அம்புபாய்ந்து கொல்லப்பட்டிருக்கிறான்.
யார் கொன்றது?
மூன்று பிசாசுகள்.
நம்முடைய சூரியத் தீவில் பிசாசுகளா?
தொடரும்






இரண்டு படங்களுக்கும் குறைந்தது ஆறு வித்தியாசங்கள் உள்ளன. கண்டுபிடியுங்கள் பார்ப்போம்.

# ஒன்றுக்கு இரண்டு

**-பாலாஜி-**

வேலாண்டி பாளையத்தில் ஆயிரம் வருடங்களுக்கு முன்பு இந்தக் கதை நடந்ததாகப் பாட்டி பலமுறை சொல்லியிருக்கிறாள்.

வேலப்பன் ஓர் விவசாயி. கடுமையான வறட்சி ஏற்பட்டு விளையாமல் போன பத்து வருஷங்களுக்கு முன்பு அந்த ஊரின் வட்டிக் கடைக்காரர் வள்ளியப்ப செட்டியாரிடம் ஐநூறு பொன் கடன் வாங்கியிருந்தான் வேலப்பன். வருடா வருடம் அந்தக் கடனுக்காக நூறு பொன் வட்டியாக வசூலித்துக் கொண்டிருந்தார் வள்ளியப்பச் செட்டியார். இதனால் வேலப்பன் குடும்பம் நிரந்தரமாக வறுமையில் வாடியது.

பதினோராவது வருடம். விளைந்த நெல்லை அறுத்து, கதிர் அடித்து, தூற்றி மூட்டைகளாகக் கட்டிக் கொண்டிருந்தபோது செட்டியார் வந்தார். "நூறு பொன் பெறுமானமுள்ள நெல்லைக் கொடு" என்றார்.

வேலப்பன் தடுமாறிப் போனான். விளைந்த நெல்லை யெல்லாம் கொடுத்தாலும் போதாது.

"செட்டியாரே! ஐநூறு பொன் கடன் வாங்கினேன். பத்து வருடங்களில் ஆயிரம் பொன் வட்டியாகக் கொடுத்துவிட்டேன். இன்னமும் கேட்கிறீர்களே?" என்று கேட்டான் வேலப்பன்.

"அப்படியானால் வாங்கிய கடன் ஐநூறு பொன்னையும் நீ ஒரே தடவையில் கொடுத்துவிடு" என்று செட்டியார் மிரட்டவே விளைந்த நெல்லையெல்லாம் செட்டியாருக்கே கொடுத்தான் வேலப்பன்.

வருத்தத்தோடு வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்தான் வேலப்பன். அப்போது எதிரே ஒரு சாமியார் வந்து கொண்டிருந்தார்.

"வேலப்பா! உன் துயரங்கள் எல்லாம் எனக்குத் தெரியும். இந்த மீளாத வறுமையிலிருந்து கடைத்தேற நீ மகான் கஜிபிஜியோவைப் போய்ப் பார்" என்றார் சாமியார்.

"மகான் கஜிபிஜியோ எங்கே இருக்கிறார்? என்று வேலப்பன் கேட்டான்.

"மூன்று வெள்ளிப் பாத்திரத்தில் பணியாரங்களை எடுத்துக் கொண்டு மேற்குத் திசையில் காட்டில் போய்க் கொண்டேயிரு. மகான் கஜிபிஜியோ அகப்படுவார்" என்றார் சாமியார்.

மூன்று வெள்ளிப் பாத்திரங்களுக்கு என்ன செய்வது? வேலப்பன் தடுமாறிப் போனான்.

கடைசியில் வட்டிக்கடை வள்ளியப்பச் செட்டியாரிடம் சென்று மூன்று வெள்ளிப் பாத்திரங்கள் கேட்டான்.

"எதற்காக என்று செட்டியார் கேட்கவே சாமியார் சொன்னதை யெல்லாம் கூறினான் வேலப்பன்.

செட்டியார் சொன்னார்: "உனக்கு மூன்று வெள்ளிப் பாத்திரங்கள் தருகிறேன். மகான் கஜிபிஜியோவிடம் நீ வரம் கேட்கும் போது "எனக்கு ஒன்று கிடைத்தால் வள்ளியப்பச் செட்டியாருக்கு இரண்டு கிடைக்க வேண்டும்" என்று கேட்க வேண்டும்."


அப்பாவி வேலப்பன் "சரி" என்றான். சத்தியம் செய்து கொடுக்கச் சொன்னார் செட்டியார். வேலப்பன் சத்தியம் செய்து கொடுக்கவே மூன்று வெள்ளிப் பாத்திரங்களை செட்டியார் கொடுத்தார்.

வேலப்பன் மனைவி பணியாரங்கள் செய்து கொடுத்தாள். மூன்று பாத்திரங்களில் அவற்றை நிரப்பிக் கொண்டு காட்டில் மேற்குத் திசையில் நடந்து கொண்டிருந்தான்.

முதல்நாள் மாலை ஓர் மரத்தடியில் ஒரு சாமியாரை வேலப்பன் பார்த்தான். முதல் வெள்ளிப் பாத்திரத்தை அவரிடம் கொடுத்தான்.

பணியாரங்களைச் சாப்பிட்டு முடித்தவுடன் சாமியார் சொன்னார், "மகான் கஜிபிஜியோ நான் அல்ல. நான் அவரது சிஷ்யன் வஜிபிஜியோ. இரவு இங்கேயே தங்கிவிட்டு விடிந்ததும் மேற்குத் திசையில் நடந்து போ" என்றார்.

மறுநாள் மேற்குத் திசையில் நடந்தான் வேலப்பன். அன்று மாலை ஓர் மரத்தடியில் ஒரு சாமியாரைக் கண்டான். அவரிடம் இரண்டாவது பாத்திரத்தைக் கொடுத்தான். சாப்பிட்டு முடிந்ததும் "மகான் கஜிபிஜியோ நான் அல்ல. நான் அவரது சிஷ்யன் மஜிபிஜியோ. விடிந்ததும் மேற்குத் திசையில் நீ நடந்து போ" என்று அந்தச் சாமியார் சொன்னார்.



மூன்றும் நாள். மேற்குத் திசையில் நடந்து கொண்டேயிருந்தான் வேலப்பன். மாலை நேரத்தில் மலையடிவாரத்தில் ஒரு சாமியாரைக் கண்டான். அவரிடம் மூன்றாவது பாத்திரத்தைக் கொடுத்தான்.

பணியாரங்களைச் சாப்பிட்டு முடித்தவுடன் அவர் சொன்னார்: "குழந்தாய்!

நான்தான் மகான் கஜிபிஜியோ. உனக்கு என்ன வேண்டும் கேள்!''

''எனக்கு ஒன்று கிடைத்தால் வள்ளியப்பச் செட்டியாருக்கு இரண்டு கிடைக்க வேண்டும்'' என்றான் வேலப்பன்.

''என் பெயரை மனதில் நினைத்துக் கொண்டு நீ எது வேண்டும் என்று நினைக்கிறாயோ அப்போது உனக்கு ஒன்றும் வள்ளியப்பச் செட்டியாருக்கு இரண்டும் கிடைக்கும் என்று மகான் கஜிபிஜியோ வரம் கொடுத்தார்.

ஊருக்குத் திரும்பினான் வேலப்பன். குழந்தைகளுக்குப் பால் இல்லை என்றாள் அவனது மனைவி.

மகான் கஜிபிஜியோவை மனதில் நினைத்து ''பசு'' என்று கேட்டான் வேலப்பன்.

அவன் வீட்டில் ஒரு பசுவும் வள்ளியப்பச் செட்டியார் வீட்டில் இரண்டு பசுக்களும் திடீரென நின்றன.

மறுநாள் மகானை நினைத்து ''ஒரு ஜோடி காளை மாடுகள்'' என்றான் வேலப்பன். அவன் களத்துமேட்டில் ஒரு ஜோடி காளைமாடுகளும் செட்டியாரின் களத்து மேட்டில் இரண்டு ஜோடி காளை மாடுகளும் திடீரென நின்றன.

இப்படியே தொடர்ந்து வேலப்பனுக்கு ஒன்று கிடைத்தால் வட்டிக் கடைச் செட்டியாருக்கு இரண்டு கிடைத்துக் கொண்டேயிருந்தது. செட்டியார் மேலும் மேலும் பணக்காரர் ஆகி, ஊரில் உள்ளவர்களுக்கெல்லாம் கடன் கொடுத்து வட்டிக்கு வட்டி அநியாய வட்டி வாங்கிக்கொண்டேயிருந்தார்.

அந்த வருடம் வேலாண்டி பாளையத்தில் கடுமையான வறட்சி.

மகான் கஜிபிஜியோ பெயரை மனதில் நினைத்து ''பாதாளக் கிணறு'' என்றான் வேலப்பன்.

அவன் தோட்டத்தில் ஒரு கிணறும் செட்டியார் தோட்டத்தில் இரண்டு கிணறுகளும் தோன்றின.

அவன் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த போது வேலப்பனின் இடது கண்ணில் மரக்கிளையொன்று குத்தி ரத்தம் பெருக்கெடுத்தோடியது.


எவ்வளவு வைத்தியம் செய்தும் அந்தக் கண்ணில் ஏற்பட்ட காயம் குணமாகாமல் வேலப்பன் அவஸ்தைப் பட்டான்.

பல நாட்கள் வேதனைப்பட்டான் வேலப்பன். மகான் கஜிபிஜியோ பெயரை மனதில் நினைத்து இடது கண்ணில் கைவைத்துக் கொண்டு ''ஒரு கண்ணை குருடாக்குக!'' என்று கேட்டான்.

வேலப்பனின் ஒரு கண் குருடாகியது.

அப்போது தோட்டத்தில் குளித்துக் கொண்டிருந்த வள்ளியப்பச் செட்டியாரின் இரண்டு கண்களும் குருடாகி விட்டது.

பார்வையிழந்த செட்டியார் தட்டுத் தடுமாறி கிணற்றுக்குள் விழுந்தார்.



சிறிது நேரத்தில் நீருக்குள் மூழ்கி செத்துப் போனார்.

அன்று இரவு வேலப்பன் தூங்கிக் கொண்டிருந்தபோது திடீரென மகான் கஜிபிஜியோ தோன்றினார்: ''வேலப்பா!'' என்றார்.

விழித்துப் பார்த்தான் வேலப்பன். இரு கண்களிலும் பார்வை வந்திருந்தது.

''வேலப்பா! இது நாள் வரை உனக்கு ஒன்றும் வள்ளியப்பச் செட்டியாருக்கு இரண்டும் கேட்டு வந்தாய். இனிமேல் என்னை நினைத்துக் கேட்கும் போது 'எனக்கு ஒன்றும் வேலாண்டி பாளையம் கோயிலுக்கு இரண்டும்' என்று கேட்பாயாக!'' என்று சொல்லி விட்டு மகான் கஜிபிஜியோ மாயமாய் மறைந்து போனார்.

''அவர் சொன்னது போலவே வேலப்பன் செய்து வந்ததால்தான் வேலாண்டிபாளையம் முருகன் கோயில் பெரிய அளவு வளர்ந்து இப்போதும் பிரம்மாண்டமானதாக விளங்கி வருகிறது'' என்று பாட்டி அடிக்கடி சொல்லுவாள்.



## மலர்.1. இதழ். 5. 12.12.82

*பிரியமான செல்வங்களே!*

இந்த இதழில் உங்களது கடிதங்கள் இடம் பெறவில்லை என்பது எனக்கே வருத்தம்தான். நான் என்ன செய்யட்டும். இடநெருக்கடி. உங்களோடு பேசும் இந்தப் பகுதியும் அடுத்த இதழில் எனக்குக் கிடைக்காதுபோல உள்ளது.

அப்புவின் பதில்கள் வேறு. அடுத்தவாரம் அனைத்துபதில்களுக்கு இடமில்லையென்றதும் கோபித்துக் கொண்டு போய்விட்டான். அவனைத் தேடிப் பிடித்தாகவேண்டும். எனக்கு ஒரே குழப்பம். தற்போதைக்க எங்கா வது அப்புவைச் சந்திக்க நேர்ந்தால் சமாதானம் செய்து என்னிடம் அனுப்பிவையுங்கள்.


அன்புடன்,
முல்லை தங்கராசன்



''மகனே, உனக்கு சொத்து சேர்த்து வைக்கலேன்னு வருத்தப்படாதே! உம் போலே மூணு லட்ச ரூபாய் கடனை விட்டுட்டுப் போறேன். நீ அதைத் திருப்பிக் கட்டாமல் இருந்தால் அத்தனையும் உனக்குத்தான்!''

- இரத்தினம்.

Printed and Published by A. M. Thiyagharajhan at Muthu Comics, P. Box No. 253, Chairman P. K. S. Road, Sivakasi - 626123. Editor: M. Saundrapandian, Publishing Editor: Mullai Thangarasan.


அதிமேதை அப்பு
சித்திரம்: செல்லம்
தம்பி காசு கொடுக்கிறேன்... இந்த நாயை கொஞ்சம் வாக்கிங் கூட்டிக் கொண்டு போகிறாயா... எனக்கு காலில் சுளுக்கு.
ஓ...!
கமான்... டாமி!
ஹைய்யா... மாம்பழம்!
பார்க்கும் போதே நாக்கில் நீர் ஊறுகிறதே!
லொள்... லொள்... லொள்...!
அடச்சீ... சும்மா இரு... நீயே என்னைக் காட்டிக் கொடுத்து விடுவாய் போலிருக்கிறதே!
லொள்... லொள்... லொள்!
டேய்... யாரடா அவன் - மாம்பழம் பறிக்கிறது.
போச்சு...!
எல்லாம் உன் நாயால்தான்.... கொஞ்சமாவது அறிவிருக்கா உனக்கு?
மறுநாள்
வா... மோதிப் பார்த்துடலாம்!
இந்த நாய் முன்னால் என்ன பின்னால் இழுக்கிறதே...
என்னைக் கண்டு பயம்... அதான் பின் வாங்குகிறாய்.
நீ என்னைக் கண்டு பயந்து பின் வாங்கி ஓடி விட்டாய் என்று எல்லோரிடமும் சொல்லப் போகிறேன்.
என்னைக் கோழை ...ன்னு சொல்லிவிட்டுப் போகிறான்... அறிவு கெட்ட நாயே... உன்னால் தான்.
டேய்... பந்து விளையாட வர்றியா!
இடது காலால் ஓர் உதை... எப்படிப் போகிறது பாரேன்.
டமார்...
லொள்... லொள்... லொள்!
ஆ... கண்ணாடி! யார்டா உடைச்சது!
படவா ராஸ்கல்..... நீதானா கண்ணாடியை உடைச்சது.
திரும்பியதும்-
இந்த நாய் ஏன் இப்படி நடந்து கொண்டது என்று இப்போதல்லவா புரிகிறது!